# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2021

## தொழில் அமைச்சு

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

## 2021

தொழில் அமைச்சு

(தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு)

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

செலவினத் தலைப்பு 193

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

யூன் 2022

**தொகுப்பு**

திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

**வெளியீடு**

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
6 ஆவது தளம், “மெஹெவர பியெச”
நாரஹேன்பிட்டி
கொழும்பு-05
தொலைபேசி: 011 2581991





# கௌரவ அமைச்சரின் செய்தி

**மனுஷ நாணாயக்கார (பா.உ)**
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

தொழில் அமைச்சினால் 2021 ஆம் ஆண்டுக்காக அடையப்பெற்ற முன்னேற்றங்களை சமர்ப்பிக்கின்ற இச்செயலாற்றுகை அறிக்கைக்கு செய்தியொன்றை வழங்குவது எனக்கு மனமகிழ்வைத் தருகின்றது.

இந்த அமைச்சின் பிரதான தொழிற்பாடு, நாட்டின் பொருளாதாரத்தின் உயிர்நாடியான உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் அவர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதாகும். மேலும், தனியார் துறையில் தொழில் பாதுகாப்பினை நிறுவுவதன் கீழ் செயற்பாடுகளை இனங்காணுதல் மற்றும் தேர்ச்சியுள்ள புலம்பெயர் தொழிலணியொன்றை உருவாக்குதலை விசேட முன்னுரிமைகளாக கொண்டு தொழில் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்துள்ள நிறுவனங்களான தொழில் திணைக்களம், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், வேலையாளர் நட்ட ஈட்டு ஆணையாளர் அலுவலகம் மற்றும் தேசிய உற்பத்தித்திறன் செயலகம் ஆகியவை தமது உரிமைகளைப் பாதுகாக்கின்ற அதேவேளையில், ஆக்கத்திறனையும், நலன்புரியினையும் அதிகரிக்கின்ற பொறுப்பிற்கு தோள்கொடுத்துள்ளன.

தற்போதைய தேவைப்பாடுகளுடன் அதிகளவில் இணங்கும் வகையிலும், எழுகின்ற சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையிலும் கொண்டுவருவதற்காக பழமைவாய்ந்த தொழில் சட்டங்களைத் திருத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதலீடுகளின் உட்பாய்ச்சலை இலகுபடுத்துவதற்கு சாதகமான சூழலை உருவாக்கும் வகையில் மற்றும் தொழில் சமூகத்தால் அனுபவிக்கப்படுகின்ற நன்மைகளில் எதுவித குறைவுமின்றி அனைவருக்கும் நன்மையை உறுதிப்படுத்தி, அனைத்து அக்கறைதாரர்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் தற்போதுள்ள தொழில் சட்டவாக்கங்களிலுள்ள சிக்கல்களை நீக்கி, அவற்றின் நிலையான தன்மையைப் பாதுகாக்கும் வகையில் அவற்றை எளிமைப்படுத்துவதன் மூலம் தொழில் சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே

ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தற்போது நிலவுகின்ற கோவிட்-19 தொற்றுநோயின் விளைவாக, எமது அமைச்சு அதன் செயற்பணியினை மீள உருவாக்கியுள்ளது. வேலையாட்களின் சுகாதாரத்தை கவனத்தில்கொண்டு உற்பத்தியை மேம்படுத்துதற்கான பொறிமுறையினை நடைமுறைப்படுத்துகின்ற அதேவேளையில் வேலைத் தளங்களில் கடுமையாக உழைக்கின்ற வேலையாட்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற சவால் எமது அமைச்சுக்கு அளிக்கப்பட்டுள்ளது. எமது அமைச்சு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் இணைந்து, உள்நாட்டு மற்றும் புலம்பெயர் வேலையாட்களின் தொழிலைப் பாதுகாத்தல் மற்றும் பணிநீக்கம் செய்யப்பட்ட வேலையாட்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தொழில் அணியில் சுமார் 60% பேர் முறைசாரா துறையில் பணிக்கமர்த்தப்படுவதுடன், அவர்களை சமூகப் பாதுகாப்புத் திட்டமொன்றின் காப்பீட்டின் கீழ் கொண்டுவருவதில் அதிக கவனம் தேவையென்பது பிரதான சவாலொன்றாகும். சமூகப் பாதுகாப்பு நிதியமொன்றை தாபிப்பதற்கும், எதிர்பாராத சூழ்நிலைகள் காரணமாக தொழில்களை இழந்த வேலையாட்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கும் தேசிய தொழில் ஆலோசனை சபையினால் உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. உப குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2021 ஆம் ஆண்டில் சிறந்த செயலாற்றுகையை அடைவதற்கான அவர்களது முயற்சிக்காக முன்னாள் தொழில் அமைச்சர் கௌரவ நிமல் சிறிபால டி சில்வா அவர்களுக்கும், முன்னாள் செயலாளர் திரு.எம்.பி.டீ.யு.கே. மாபா பத்திரண அவர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதற்கு விரும்புகின்றேன். இந்த செயலாற்றுகையை சாதகமாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றியுள்ள அமைச்சின் முழுப் பணியாட்டொகுதியினருக்கும், அமைச்சின் அதிகாரத்தின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களின் தலைவர்களுக்கும், அவர்களது அலுவலர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மனுஷ நாணாயக்கார (பா.உ)**
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்





# தொழில் அமைச்சுச் செயலாளரின் செய்தி

**ஆர்.பி.ஏ.விமலவீர**
செயலாளர்

2021 ஆம் ஆண்டில் தொழில் அமைச்சு மற்றும் அதன் அதிகாரத்தின் கீழ் வருகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் செயலாற்றுகை மற்றும் திருப்திகரமான, உற்பத்தித்திறன்மிக்க இலங்கை தொழில் அணியை உருவாக்கும் நோக்கத்துடன் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள திட்டங்கள் பற்றிய கண்ணோட்டமொன்றான இந்த வெளியீட்டை சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

“தனியார் துறையில் தொழில் பாதுகாப்பை தாபித்தல் மற்றும் தேர்ச்சியுள்ள புலம்பெயர் பணியாளர்களை உருவாக்குதல்”, நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் இலங்கையால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தொழில் தாபனத்தின் சமவாயங்கள் என்பவற்றின் கீழான தொழிற்பாடுகள் மற்றும் விசேட முன்னுரிமைகளுடன் ஒத்திசைவாக இருக்கும் வகையில் எமது அமைச்சின் நிகழ்ச்சித்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

தொழில் அமைச்சின் தலையாய பொறுப்புக்களில் ஒன்றான வேலையாட்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அவர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குமாக முதலீடுகளின் உட்பாய்ச்சலை இலகுபடுத்துவதற்கு சாதகமான சூழலை உருவாக்குவதற்கும், உரிய சட்டவாக்கங்களைத் திருத்துவதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள தொழில் சட்டவாக்கங்களிலுள்ள சிக்கல்களை நீக்கி, அவற்றின் நிலையான தன்மையைப் பாதுகாக்கும் வகையில் அவற்றை எளிமைப்படுத்துவதன் மூலம் அனைத்து அக்கறைதாரர்களுக்கும் அனுகூலங்களை உறுதிசெய்து தொழில் சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல முக்கியமான தொழில் சட்டங்களின் திருத்தங்களை நிறைவுசெய்ய முடிந்தமை 2021 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற பாரிய சாதனையொன்றாகும். சில முக்கியமான திருத்தங்களாக பின்வருவன காணப்படுகின்றன.

- தொழில் புரிவதற்கான குறைந்தபட்ச வயதை 14 இலிலிருந்து 16 ஆக அதிகரிப்பதன் மூலம் பாடசாலை இடைவிலகலைத் தடுத்து, அதன் மூலம் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்.

- வேலையாட்களின் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் நட்டஈட்டுச் சூத்திரத்தின் ஆகக்கூடிய நட்டஈட்டு எல்லையை 1.25 மில்லியன் ரூபாவிலிருந்து 2.5 மில்லியன் ரூபா வரை அதிகரித்தல்.

- 10,000/- ரூபாவாக இருந்த தேசிய குறைந்தபட்ச சம்பளத்தை 2,500/- ரூபாவினால் அதிகரித்து அதனை 12,500/- ரூபாவாக அதிகரித்தல்.

- ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 30 நாட்களுக்குள் ஊழியர் சேமலாப நிதியத்தில் பணியாளர்களைப் பதிவுசெய்வதை கட்டாயமாக்குதல் மற்றும் ஊ.சே. நிதியத்தில் வரவு வைக்கப்பட்டுள்ள ஊ.சே. நி. பங்களிப்புத் தொகை பற்றி அங்கத்தவர்களுக்கு குறுஞ்செய்தியூடாக அறிவித்தல்.

- தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1000/- ரூபாவாக அதிகரிப்பதுடன் தொடர்புபட்ட சட்ட நடவடிக்கைகளை எடுத்தல்.

- வேலையாட்களின் ஓய்வுபெறுகின்ற குறைந்தபட்ச வயதை 60 ஆக உயர்த்துதல்.

இதேபோன்று, அதிகளவிலான சட்டங்களில் தற்போது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், எதிர்வரும் ஆண்டில் அவை இறுதி வடிவமெடுக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கோவிட் - 19 உலகளாவிய தொற்றுநோயால் தற்போது ஏற்பட்ட தீங்கு விளைவிக்கும் தாக்கம் இருந்தபோதிலும், உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதுடன், நிதிக் கட்டுப்பாடுகளைப் பொருட்படுத்தாமல், மோசமாக பாதிக்கப்பட்ட தொழில்தருநர்களுக்கு சேவையாற்றுவதற்கான ஒவ்வொரு முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், பாதகமான தாக்கங்கள் இருந்த போதிலும், பணியாளர்களும் தொழில்தருநர்களும் நாட்டின் பொருளாதாரம்சார் அடிப்படையில் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை, தொழில்துறை அமைதியைப் பேணுதல், அனைவருக்கும் நன்மைகளைக் கொண்டு வரக்கூடிய துறைகளை விரிவுபடுத்துதல் மற்றும் பின்னடைவுகளை அனுபவித்த துறைகளின் மறுமலர்ச்சிக்கான வழிகளைத் திறந்துவிடுதல் என்பவை எமது அமைச்சின் பொறுப்புகளாகும்.

சர்வதேச தொழில் நியமங்களைப் பின்பற்றி, சீரிய வேலை எண்ணக்கருவினை உறுதிப்படுத்தி உகந்த வேலைச் சூழலை உருவாக்குதல், தொழில் தருநருக்கும் பணியாளருக்குமிடையில் சுமூகமான உறவுகளை உருவாக்குவதற்கு பல்வேறு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களின் பங்களிப்புடன் தொழில் உரிமைகளைப் பாதுகாத்தல், தொழிற்றுறை அமைதியைப் பேணுவதற்காக திட்டமிடப்பட்டவாறு தேசிய தொழில் ஆலோசனைச் சபையை நடத்துவதும், அனைத்து அக்கறைதாரர்களுடனும் தொடர்ச்சியான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதும், சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் தொழில் புரியும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் என்பவை அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற ஏனைய பிரதான செயற்பாடுகளாகும். எதிர்பாராத சூழ்நிலைகள் காரணமாக தொழில்களை இழந்த வேலையாட்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக சமூகப் பாதுகாப்பு நிதியமொன்றை தாபிப்பது காலத்துடன்கூடிய தேவைப்பாடாக இனங்கண்டு இந்த விடயத்தை ஆராய்வதற்காக தேசிய தொழில் ஆலோசனை சபையினால் உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்களை வழங்குவது உள்ளடங்கலாக, அனைத்து சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் வழங்குவதற்காக தொழில் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகளை தன்னியக்கமாக்குவதற்கான செயன்முறை ஏற்கனவே இடம்பெற்று வருகின்றது. இதற்கு மேலதிகமாக, இந்த அமைச்சுடன் இணைந்துள்ள அனைத்து நிறுவனங்களும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அவர்களின் நலனை செம்மைப்படுத்துவதற்கும், சுகாதாரத்தையும், கல்வியையும் மேம்படுத்துவதற்கும், நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதுடன், உற்பத்தித் திறன் எண்ணக்கருவினூடாக அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் வலுப்படுத்தப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட பணிகளை முன்னெடுப்பதற்கு தலைமைத்துவம், வழிகாட்டல் மற்றும் அனுசரணையை வழங்கிய முன்னாள் தொழில் அமைச்சர் கௌரவ நிமல் சிறிபால டி சில்வா அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் எமது அமைச்சின் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்கு விரும்புகின்றேன். 2021 ஆம் ஆண்டில் அமைச்சின் செயலாற்றுகையை அடைவதற்காக அயராது உழைத்த தொழில் அமைச்சின் முன்னாள் செயலாளருக்கும், அமைச்சின் முழுப் பணியாட்டொகுதியினருக்கும், அமைச்சின் அதிகாரத்தின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களின் தலைவர்களுக்கும், அலுவலர்களுக்கும் எனது நன்றிகள்.

**ஆர்.பி.ஏ.விமலவீர**
செயலாளர்



# பொருளடக்கம்

கௌரவ தொழில் அமைச்சரின் செய்தி iii
தொழில் அமைச்சுச் செயலாளரின் செய்தி v
பொருளடக்கம் vii
அட்டவணையின் பட்டியல் viii
வரைபடங்களின் பட்டியல் ix

**அத்தியாயம் ஒன்று** **1**
**நிறுவனம்சார் விபரம் / நடைமுறைப்படுத்தல் பற்றிய சுருக்கம்** **1**
தொழில் அமைச்சு 3
1.1 அறிமுகம் 3
1.2 தொலைநோக்கு,செயற்பணி மற்றும் குறிக்கோள்ககள் 3
1.3 பிரதான தொழிற்பாடுகள் 4
1.4 நிறுவகக் கட்டமைப்பு 5
1.5 அமைச்சின் பிரிவுகள் 6
1.6 அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்கள் 8
1.6.1 தொழில் திணைக்களம் 8
1.6.2 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் 9
1.6.3 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் 10
1.6.4 வேலையாளர் நட்ஈட்டு ஆணையாளர் அலுவலகம் 10
1.6.5 தேசிய உற்பத்தித்திறன் செயலகம் 11

**அத்தியாயம் இரண்டு** **13**
**சாதனைகள் மற்றும் எதிர்கால முன்னேற்றங்கள்** **13**
2.1 விசேட சாதனைகள்,சவால்கள் மற்றும் கண்ணோட்டம் 15
2.2 அமைச்சினது முன்னேற்றம் 24

**அத்தியாயம் மூன்று** **67**
**2021டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிச்செயலாற்றுகை** **67**
3.1 2020 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிச்செயலாற்றுகைக் கூற்று 69
3.2 நிதி நிலவரக் கூற்று 70
3.3 பண ஓட்டக் கூற்று 71
3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 72
3.5 வருவாய் சேகரிப்பு செயலாற்றுகை 72
3.6 ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதிலுள்ள செயலாற்றுகை 72
3.7 நி.ஒ. 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களத்தின் ஒரு முகவராக இந்த அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் 73
3.8 நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதில் செயலாற்றுகை 73
3.9 கணக்காய்வு அதிபதியின் அறிக்கை 74

**அத்தியாயம் நான்கு** **89**
**செயலாற்றுகைச் குறிகாட்டிகள்** **89**
**4.1** அமைச்சின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (செயற்றிட்டத்தின் அடிப்படையில்) 91

**அத்தியாயம் ஐந்து** **93**
**நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயலாற்றுகை** **93**
5.1 இனங்காணப்பட்ட அபிவிருத்தி இலக்குகள் 95
5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதில் சாதனைகள் மற்றும் சவால்கள் 98

**அத்தியாயம் ஆறு** **99**
**மனித வள விபரம்** **99**
6.1 பதவியணி முகாமைத்துவம் 101
6.2 மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகை நிறுவகத்தின் செயலாற்றுகையை எவ்வாறு பாதித்துள்ளது 101
6.3 மனித வளங்கள் அபிவிருத்தி 101

**அத்தியாயம் ஏழு** **111**
**இணக்கப்பாட்டு அறிக்கை** **113**

# அட்டவணைகளின் பட்டியல்


2-1 சமூகக் கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் -2021 27
2-2 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 2021 ஆம் ஆண்டில் பணிப்பகிஷ்கரிப்புப் பற்றி அறிக்கையிடப்பட்ட தரவு 30
2-3 வேலையாட்களின் உரிமைகளை அங்கீகரிப்பது தொடர்பான செயற்பாடுகள் - 2021 31
2-4 குறைந்தபட்ச சம்பளத்தை இற்றைப்படுத்துகின்ற சம்பளச்சபைகள் 32
2-5 வேலைத்தலங்களில் தொழில்சார் சுகாதாரத்தை பரிசோதிப்பதற்காக நடத்தப்பட்ட செயற்பாடுகள் - 2021 33
2-6 வேலைத்தலங்களில் சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கு தேவைப்படுத்தப்பட்ட அறிவினை ஏற்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் - 2021 34
2-7 தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை செம்மைப்படுத்துவதற்காக நடத்தப்பட்ட விழிப்புணர்வு பயிற்சி செயலமர்வு - 2021 35
2-8 தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் 36
2-9 தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 37
2-10 பெண்கள், இளம் நபர்கள் மற்றும் சிறுவர்கள் தொழிலுக்கமர்த்தப்படுவது தொடர்பாக தற்போதிருக்கின்ற சட்டங்களை நடைமுறைப்படுத்துதல் -2021 38
2-11 ஊ.சே.நி பயனாளிகளின் எண்ணிக்கை - 2021 44
2-12 அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியங்களைக் கண்காணிப்பதிலுள்ள முன்னேற்றம் - 2021 44
2-13 வழக்குகளின் நீதிமன்றச் செயலாற்றுகை - 2021 45
2-14 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் நிதி முன்னேற்றம் 48
2-15 உயிராபத்தை ஏற்படுத்திய மற்றும் உயிராபத்தை ஏற்படுத்தாத விபத்துக்களின் தன்மை 50
2-16 அறிக்கையிடப்பட்டுள்ள உயிராபத்தை ஏற்படுத்தும் மற்றும் உயிராபத்தை ஏற்படுத்தாத விபத்துக்களின் தன்மை 51
2-17 நட்டஈட்டுக் கொடுப்பனவு பற்றிய பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் - 2021 52
2-18 தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழச்சித்திட்டங்கள் 53
2-19 தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் வருவாய் உருவாக்கம் 54
2-20 2020.09.30 ஆம் நாளன்று சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் பின்வருமாறுள்ளது. 55
2-21 2021.12.31 இல் இயலுமையை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகளுக்கான ஒட்டுமொத்த செலவீனம் - 2021 59
2-22 தாபனச் செயற்பாடுகளின் முன்னேற்றம் 61
2-23 தொழில் திணைக்களத்தின் நிருமாணச் செயற்பாடுகளின் முன்னேற்றம் 63
2-24 தொழில் அமைச்சின் ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம் 65
3-1 வருவாய் சேகரிப்பில் செயலாற்றுகை 72
3-2 ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் ஒரு முகவராக இந்த அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள். 72
3-3 நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதில் செயலாற்றுகை 73
3-4 நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதில் செயலாற்றுகை 73
4-1 அமைச்சின் செயலாற்றுகை குறிகாட்டிகள் 91
5-1 அமைச்சுடன் தொடர்புபட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 95
6-1 2021.12.31 இலுள்ளவாறு அமைச்சினது பதவியணி 101
6-2 உள்நாட்டு பயிற்சி பாடநெறிகளில் அமைச்சின் அலுவலர்கள் பங்குபற்றியமை 101
6-3 உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் தொழில் திணைக்கள அலுவலர்களின் பங்கு பற்றுதல் 103
6-4 வெளிநாட்டு பயிற்சி கற்கைநெறிகளில் அலுவலர்கள் பங்குபற்றுதல் 107
7-1 இணக்க அறிக்கை 113




# வரைபடங்களின் பட்டியல்
# படத்தின் பட்டியல்

## வரைபடங்களின் பட்டியல்


2-1 தொழில் பரிசோதனைகள் - 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 இலுள்ள முன்னேற்றம் 28
2-2 2020 உடன் ஒப்பிடுமிடத்து 2021 ஆம் ஆண்டில் நியதிச்சட்ட உரித்துக்களை மீறியதன்பேரில் பெறப்பட்ட முறைப்பாடுகளைத் தீர்த்தலும் மற்றும் கைத்தொழில் பிணக்குகளுக்கு வழங்கப்பட்ட தீர்வுகளும் 29
2-3 அனைத்து மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளும் தீர்க்கப்பட்ட வழக்குகளும் - 2021 46
2-4 2021 ஆம் ஆண்டில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து தே.தொ.க நிறுவகம் உருவாக்கியுள்ள வருவாய். 48
2-5 பயிற்சி செயற்பாடுகளிலிருந்தான வருவாய்-தே.தொ.க.நி 49
2-6 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட உயிராபத்தை ஏற்படுத்திய விபத்துக்களின் எண்ணிக்கை 50
2-7 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட உயிராபத்தை ஏற்படுத்தாத வீதி விபத்துக்களின் எண்ணிக்கை 50
2-8 சுற்று நீதிமன்ற பகுதிகளில் பதிவான விபத்துக்களின் எண்ணிக்கை - 2021 51
2-9 2016 முதல் 2021 வரை நடத்தப்பட்ட தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கை 58
2-10 ஊ.சே.நி அனுகூலங்களைச் செலுத்துவதற்காக எடுத்த நேரம் 2017 - 2021 59
2-11 அகக் கணக்காய்வுச் செயற்பாடுகளின் முன்னேற்றம் 66


## படத்தின் பட்டியல்


படம் 1-1 அமைச்சின் நிறுவகக் கட்டமைப்பு 5

## அத்தியாயம் ஒன்று

நிறுவனம்சார் விபரம் / நடைமுறைப்படுத்தல் பற்றிய சுருக்கம்

# தொழில் அமைச்சு

## 1.1 அறிமுகம்

நாட்டின் உழைக்கும் மக்களின் பாதுகாப்பினையும், நலன்புரியினையும் நிறைவேற்றுதல் மற்றும் தொழில் சட்டவாக்கங்கள், நியமங்கள் தொடர்பான சர்வதேச முகவர்களுடன் இணைந்து தொழிற்றுறை அமைதியையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்துதல் ஆகியவை தொழில் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற பொறுப்புகளாகும். இந்த அமைச்சானது உரிய இராஜாங்க அமைச்சுக்கு கொள்கை வழிகாட்டலை வழங்குவதன் மூலம் மற்றும் விதித்துரைக்கப்பட்ட சட்டங்கள், கட்டளைச் சட்டங்களை உறுதிப்படுத்தி தொழில் விடயத்துடன் தொடர்புடைய கொள்கைகளை வகுத்தமைத்தல், தேசிய வரவுசெலவுத்திட்டம், அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கருத்திட்டங்களை நடைமுறைப் படுத்துதல் அத்துடன், அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய கொள்கை களின் அடிப்படையிலும், 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைக் கூற்றுக்கமை வாகவும் "தனியார் துறையிலுள்ள பணியாளர்களின் பாதுகாப்பினை உருவாக்குதல் மற்றும் திறனுள்ள வெளிநாட்டுத் தொழில் அணியொன்றை உருவாக்குதல்" என்பதற்கு பொறுப்பான திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொழிற்பாடுகளுடனும் தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டங்களையும், கருத்திட்டங்களையும் வகுத்தமைப்பதன், நடைமுறைப்படுத்துவதன் மற்றும் மதிப்பிடுவதன் மூலம் அதன் குறிக்கோள்களை அடைவதற்கு முயற்சிக்கின்றது. இதன்படி, அமைச்சின் தொலை நோக்கு மற்றும் செயற்பணி பின்வருமாறமைகின்றன.

## 1.2 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்

**தொலைநோக்கு**

திருப்திமிகு உற்பத்திசார் இலங்கையர் தொழிலணி

**செயற்பணி**

தொழிற்றுறை அமைதி, சமூகப் பாதுகாப்பு, வேலையாட்களின் உரிமைகள் மற்றும் ஆக்கத்திறனை மேம்படுத்துவதனூடாக சமூகப் பொருளாதார அபிவிருத்தியை நோக்கிய பங்களிப்பு

**அமைச்சின் குறிக்கோள்கள்**

- முத்தரப்பினை வலுப்படுத்துவதனூடாக தொழில்தருநர்கள், பணியாளர்களுக் கிடையிலான உறவினைப் பலப்படுத்துதல்.
- சர்வதேச நியமங்களுடன் இணங்கும் வகையில் சேவை நியமங்கள் மற்றும் வேலையாட்களின் உரிமைகளை உறுதிப்படுத்துதல்.

- சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல்.
- பணிக்கமர்த்தப்பட்டுள்ள பெண் பணியாளர்களை வலுப்படுத்துதலும் பாதுகாத்தலும் மற்றும் பால்நிலை சமத்துவத்தை ஊக்குவித்தலும்.
- தொழில் சட்டவாக்கங்கள் மற்றும் நடவடிக்கைமுறைகளின் நெகிழ்வுப் போக்கினை அதிகரித்தல்.
- உழைக்கும் மக்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான உரிய முறையியலை வகுத்தமைத்தல்.


அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற அனைத்து நிறுவனங்களும் பின்வரும் பிரதான விடயப்பரப்புகள் மீது அவதானஞ் செலுத்துகின்றன.

1. தொழில் துறை தொடர்பான கொள்கைகளை வகுத்தமைத்தல்
2. தொழிற்றுறை அமைதி மற்றும் ஐக்கியம்.
3. தொழில் நியமங்களையும், ஒழுங்குகளையும் மற்றும் ஒழுங்குவிதிகளையும் வலுப்படுத்துதல்.
4. பெண் வேலையாட்களைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் தொழிலை இல்லா தொழித்தல்.
5. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்.
6. சமூகப் பாதுகாப்பு.
7. தொழில்துறை தொடர்பாக கற்பித்தல், பயிற்சியளித்தல், ஆய்வு செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

## 1.3 பிரதான தொழிற்பாடுகள்

1. தொழில் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள், நியாயாதிக்க நிறுவனங்கள் மற்றும் பொதுக் கூட்டுத்தாபனங்களின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற அந்த விடயங்கள் தொடர்பிலான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
2. சர்வதேச தொழில் நியமங்கள், பணியாளர்களின் நிருவாகம் மற்றும் நலன்புரி தொடர்பான கொள்கைகளைத் தயார்செய்வதும் நடைமுறைப்படுத்துவதும்.
3. சர்வதேச தொழில் ஸ்தாபனம் மற்றும் சர்வதேச சமூக பாதுகாப்பு அமைப்புகளுடன் இணைந்து
4. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் தனியார் ஓய்வுறுத்தல் திட்டங்களை நிருவகித்தல்.
5. தொழிற்றுறை உறவுகள் மற்றும் கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கான முறைமையியல்களை வகுத்தமைத்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான பயனுறுதியை ஒழுங்குபடுத்துதல்.
6. தொழில் உறவுகள் தொடர்பான சட்டங்களையும், ஒழுங்குவிதிகளையும் வகுத்தமைத்தல் மற்றும் அவற்றை ஒழுங்கமைத்தல் தொடர்பான விடயங்கள்.
7. தொழில் சங்கங்களை பதிவுசெய்தல் மற்றும் அரச, தனியார் துறைகளில் உள்ள சகல தொழில் சங்கங்களினதும் நடவடிக்கைகளை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்திக்கொள்ளத் தேவையான சாதகமான நடவடிக்கைகளை அறிமுகம் செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.
8. தொழில் திணைக்களம், தேசிய தொழில் கற்கை நிறுவகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், சிரம வாசனா நிதியம் மற்றும் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்கள் தொடர்பான நடவடிக்கைகளும் கண்காணிப்பும்.

## 1.4 நிறுவகக் கட்டமைப்பு



படம் 1-1 அமைச்சின் நிறுவகக் கட்டமைப்பு

## 1.5 அமைச்சின் பிரிவுகள்

### 1.5.1 நிருவாகம் மற்றும் தாபனங்கள் பிரிவு

இந்தப் பிரிவினால், இந்த அமைச்சின் பொது நிருவாகம், முகாமைத்துவம், பயிற்சியளித்தல், மற்றும் அமைச்சினையும், அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்களையும் ஒருங்கிணைத்தல் மனித வளங்கள் முகாமைத்துவம் மற்றும் அத்துடன் தொடர்புபட்ட கடமைகள் ஆற்றப்படுகின்றன. இதன்படி, பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

I. அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ள அரச அலுவலர்களினதும் கௌரவ அமைச்சரது துணைப் பதவியினரின் தனிநபர் கோவைகளையும் அவர்களுடன் தொடர்புபட்டுள்ள தாபனங்களின் செயற்பாடுகளையும் பேணுதல் மற்றும் பதவியினர் பற்றிய தரவுகளை நாளதுவரைப்படுத்துதல்.

II. அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் பணியாற்றுகின்ற அமைச்சு அலுவலர்கள் தொடர்பிலான செயற்பாடுகளை நிறுவுதல்.

III. வெளிநாட்டு இராஜதந்திர பணியகங்களில் கடமையாற்றுகின்ற தொழில் அலுவலர்களை ஈடுபடுத்துவதுடன் தொடர்புபட்ட கடமைகள்.

IV. அமைச்சரவை விஞ்ஞாபனத்தைத் தயாரித்தல் மற்றும் அமைச்சரவை தீர்மானங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் மற்றும் தொழில் சட்டங்களை நாளது வரைப்படுத்துதல், புதிய சட்டவாக்கங்களை சட்டமாக்குதல் மூலம் தொழிற்றுறை ஒத்துழைப்பினை ஏற்படுத்துதல்.

V. ஆலோசனைக் குழுவினால், அரச முறையீட்டு ஆணைக்குழுவினால் கேட்கப்பட்ட அதேபோன்று பாராளுமன்ற கேள்விகளுக்கான பதில்களை வழங்குதல் மற்றும் சனாதிபதி செயலகத்திற்கு, பிரதம அமைச்சரின் அலுவலகத்திற்கு நேரடியாக மேற்கொள்ளப்பட்டு, அவர்களால் அனுப்பப்பட்ட பொதுவான முறைப்பாடுகளுக்கு பதில்களை வழங்குதல்.

VI. வாகனத்தை நிருவகித்தல், தேவையான கட்டமைப்பு ஏற்பாடுகள், பயிற்சி, மூலதன பொருட்களினதும், உபகரணங்களினதும் முகாமைத்துவம், மேலதிக நேர, விடுமுறைக் கொடுப்பனவு, அக்ரகார காப்புறுதி மற்றும் இடர் கடன்களுக்கான அனுமதி ஆகியவற்றுடன் தொடர்புடைய செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

### 1.5.2 திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

அமைச்சு மற்றும் அதன் கீழ் வருகின்ற நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான திட்டங்களை சரியான இலக்குகளை நோக்கித் தயாரித்தல், இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி, முன்னேற்ற மீளாய்வு மற்றும் தொடர் நடவடிக்கைகளை எடுத்தல் இந்தப் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளாகும். இதற்கு மேலதிகமாக ஆய்வாண்டு காலப்பகுதியில் பின்வருகின்ற பணி இலக்குகள் இப்பிரிவினால் ஆற்றப்பட்டுள்ளன.

I. அமைச்சு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்களால் ஆற்றப்படுகின்ற அபிவிருத்திப் பணிகளை உள்ளடக்கியிருக்கின்ற வருடாந்த செயல் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் இத்திட்டங்களை உரிய தரப்பினருக்கு அனுப்புதல். வரவுசெலவுத்திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரிப்பதற்கான இலக்கினை அடைவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதனூடாக மேற்பார்வையிடுவதும், தேவையான ஊக்குவிப்புகளை மேற்கொள்வதும்.

II. சனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, கருத்திட்ட முகாமைத்துவ, கண்காணிப்புத் திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றுடனான ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்தி மாதாந்த மற்றும் காலாண்டு செயலாற்றுகை அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

III. இந்த அமைச்சானது, தளத்திலிருக்கின்ற பிரச்சனையொன்று பற்றி வருடாந்த புலமைசார் கருத்தரங்கொன்றினை ஒழுங்கமைத்து, அதனுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆய்வுத் தாள்களின் பொழிப்பினை கூட்டிணைத்து சஞ்சிகையொன்றினைப் பிரசுரித்தல்.

IV. சீரிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்புபட்ட அனைத்து செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தல்.

V. இலங்கை தொழில் செய்திமடலைப் பிரசுரிப்பதுடன் தொடர்புபட்டுள்ள அனைத்து விடயங்களையும் கையாளுதல்.



VI. உழைக்கும் மக்களிடம் சென்று அவர்களது தொழில் துறை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்து நடத்துதல்.

VII. அமைச்சினால் அடையப்பட்ட முன்னேற்றங்களை விபரிக்கின்ற முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தல்.

VIII. வரவுசெலவுத்திட்ட குழு நிலை விவாதத்தில் சமர்ப்பிப்பதற்கான முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தல்.

### 1.5.3 தொழில் மற்றும் வெளிநாட்டு உறவுகள் பிரிவு

சர்வதேச தொழில் தாபனத்தின் உறுப்பு நாடாக இலங்கையால் பொறுப்பேற்கப்பட்டுள்ள கடப்பாடுகளுக்கமைவாக வீட்டுத் தொழில் உரிமைகளைப் பாதுகாத்து, ஏனைய சமவாயங்கள் மற்றும் விதப்புரைகளை சர்வதேசரீதியில் அங்கீகரித்து, தொழில் துறையிலிருக்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு இவற்றைப் பயன்படுத்துதல் இந்தப் பிரிவின் பொறுப்பாகும்.

தொழில் துறை தொடர்பிலான அதன் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளை இலங்கை நிறைவேற்றியுள்ளது என்பதை சர்வதேச தொழில் தாபனத்திற்கும் ஏனைய பலதரப்பு முகவர்களுக்கும் உறுதிப்படுத்தி, தொழில் கொள்கைகளை வகுத்தமைத்தல், தேசிய மட்டத்திலான சமூகக் கலந்துரையாடல்களை உருவாக்குதல் மற்றும் மனித வளங்களின் அபிவிருத்திக்கான சர்வதேச ஆதரவினைப் பட்டியலிடுதல் இந்தப் பிரிவினால் கையாளப்படுகின்றது.

I. உதவியாளராக சேவையாற்றுதல்.

II. தொழில் சட்டங்கள் மற்றும் கொள்கைகளைத் திருத்துவது பற்றி அமைச்சுசார் குழுக் கூட்டங்களை நடத்துதல்.

III. சர்வதேச தொழில் தாபனத்தின் 22 ஆம் உறுப்புரையின் கீழ் அனுப்பப்படவுள்ள அறிக்கைகளைத் தயாரித்தல்.

IV. அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்கள் மற்றும் தொழில் திணைக்களத்தின் அலுவலர்கள் வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களில், பயிற்சிப் பட்டறைகளில் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்.

V. ஐரோப்பிய யூனியனின் ஜீ.எஸ்.பீ சலுகைகள் மீளப்பெறுதலுடன் இணைந்துள்ள பிரச்சனைகளைத் தெரிவிப்பதற்குரிய அறிக்கைகளைத் தொகுத்தல் மற்றும் ஜீ.எஸ்.பீ சலுகைகளைக் கண்காணிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள முத்தரப்புக் குழுவுக்கான கூட்டங்களை நடத்துதல் அத்துடன் அதிலுள்ள அனைத்து செயற்பாடுகளையும் ஒழுங்குபடுத்துதலும் பங்குபற்றுதலும்.

VI. இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்கு மிடையில் தொழில் துறை தொடர்பான சமூகப் பாதுகாப்பு மற்றும் கல்வித் துறைகளில் எதிர்காலத்தில் ஒப்பமிடவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொடர்பான செயற்பாடுகளையும் கையாள்வதுடன், அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களும் நிறைவடையும் நிலையிலுள்ளன.

VII. சீரிய வேலை நாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயலணிக் கூட்டங்களுக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுதலும், அது தொடர்பில் சர்வதேச தொழில் தாபனத்திற்குத் தேவையான ஆதரவினை வழங்குதலும்.

VIII. சிறுவர் தொழில் மீதான தேசிய வழிகாட்டல் குழுவுடன் தொடர்புபட்டுள்ள கூட்டங்கள் மற்றும் அனைத்துச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தல்.

IX. வெளிநாட்டு அமைச்சு மற்றும் ஏனைய அரச அமைச்சுக்களுக்கான தொழில் துறையின் நடைமுறைப் போக்கு பற்றிய அறிக்கைகளை வகுத்மைத்தல்.

X. அரசாங்கத்தால் பெறப்பட்ட பெருந்தோட்ட கம்பனிகளின் வேலையாளர்களுக்கு கிடைக்கவேண்டிய நிலுவையிலுள்ள ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை கொடுப்பனவு பற்றி தொழில் திணைக்களம், மத்திய வங்கி மற்றும் தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொழிற்சங்க உறுப்பினர்களுடன் காலாண்டு மீளாய்வுக் கூட்டத்தை ஒழுங்குபடுத்துதல்.

XI. வருடாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தொழில் புள்ளிவிபரங்கள் பற்றிய கேள்விகளுக்கான பதில்கள் சர்வதேச தொழில் தாபனத்திற்கு அனுப்பி வைத்தல்.

XII. வெளிநாட்டு அமைச்சுக்கு தொழில்நுணுக்க உதவிகளை வழங்குவதற்கு வருகை

தருகின்ற சர்வதேச தொழில் தாபனத்தின் அலுவலகங்களுக்கு விசா விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்.

### 1.5.4 நிதிப் பிரிவு

இந்த அமைச்சுக்கு 2021 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி வளங்களை அரச கொள்கைகளுடன் இணங்கும் வகையில் வினைத் திறனுடன், ஆக்கத்திறனுள்ள வகையில், சிக்கனமாகக் கையாள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன், பின்வரும் பிரதான செயற்பாடுகளை இப்பிரிவு உள்ளடக்குகின்றது.

I. 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கைக்கமைவாக வருடாந்த பொருட் கணக்கெடுப்பினை நடத்துதல்.
II. நிதி அதிகார முகர்கள் தொடர்பான அறிக்கைகளைத் தயாரித்தலும், நிதி அதிகாரிகளின் தூதுக்குழு தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளுதலும்.
III. வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரித்தல்.
IV. ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்.
V. திறைசேரிக்கும் ஏனைய உரிய முகவர்களுக்கும் மாதாந்த மற்றும் காலாந்தர நிதி அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

### 1.5.5 அகக் கணக்காய்வுப் பிரிவு

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(ஆ) மற்றும் (எ) பிரிவில் தரப்பட்டவாறும் கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களத்தின் 2019.01.12 ஆம் திகதியிடப்பட்ட 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் தேவைப்பாடுகள் மற்றும் நிதி ஒழுங்கு 113 மற்றும் 114 நியதிகளின்படி அகக் கணக்காய்வுப் பிரிவுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி பிரதம கணக்காய்வு அலுவலரின் பொறுப்பு ஆற்றப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு நியதிகளின்படி மேற்கொள்ளப்பட்ட நியமனங்களின்படி தொழில் அமைச்சின் அகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் ஆற்றப்படுகின்றன.

இந்தப் பிரிவின் ஆரம்பத் தொழிற்பாடு தொழில் அமைச்சுக்கும், அதன் கீழ் வருகின்ற நிறுவனங்களுக்கும் அதாவது, தொழில் திணைக்களம், வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் தேசிய தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிறுவகம், தேசிய உற்பத்தித்திறன் செயலகம் ஆகியவற்றுக்கு அவர்களின் குறிக்கோள்களை அடைவதற்கு அகக் கட்டுப்பாடுகள் தொடர்பிலான குறைபாடுகளைத் தெரிவிப்பதற்கும், அத்தகைய நிறுவனங்களுக்கு தாபனங்கள் விதிக்கோவை, நிதி ஒழுங்கு விதிகள், பெறுகை வழிகாட்டல்கள் மற்றும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள அனைத்து சுற்றிக்கைகளுடனும் இணங்குமாறு வழநடத்துவதற்கான வழிகாட்டலையும் அறிவுறுத்தல்களையும் வழங்குவதாகும். இந்தப் பிரிவு, தொழில் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்களிலுள்ள பிரச்சினைகளைக் குறைப்பதற்கு பங்களிப்புச் செய்து, அகக் கட்டுப்பாடுகளைப் பலப்படுத்தி, “சுபீட்சத்துக்கான நோக்கு” என்பதுடன் இணைந்து நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு சரியான நேர்மையான சேவைக்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்குகின்றது.

## 1.6 அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்கள்

### 1.6.1 தொழில் திணைக்களம்

தொழில் திணைக்களமானது, தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறைகளிலுள்ள வேலையாட்களின் தொழில்சார் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கும் சமூகப் பாது காப்பினை நிறுவுவதற்குமான அரச துறை நிறுவனமாகும். இது, மத்திய அரசாங்கத்தின் எல்லைக்குள் வருகின்ற விடயமொன்றாகையால், இத்திணைக்களம் தேவையான சட்டவாக்கங்களை வலுப்படுத்துவதற்கும், மேம்படுத்துவதற்குமாக தொழில் அலுவலகங்களின் வலையமைப் பொன்றை நாடளாவியரீதியில் பேணிவருகின்றது.

தொழில் திணைக்களமானது, 1923 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இந்திய குடிவரவுக் கட்டளைச் சட்டத்தின் நியதிகளுக்கமைவாக, பெருந்தோட்டத்துறையில் தொழில் புரிவதற்காக பிரித்தானியரால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட இந்திய குடிபெயர் தொழிலாளர்களுக்குரிய நலன்புரியினை வழங்கும் குறிக்கோளுடன் ஆரம்பத்தில் தோற்றுவிக்கப்பட்டிருந்தது.

நாடு முழுவதும் பரந்துள்ள தொழில் சமூகத்தால் எதிர்பார்க்கப்பட்ட சேவை ஏற்பாடுகளுக்காக தொழில் திணைக்களத்தின் தொழிற்பாடுகளை பரவலாக்குவதன் கீழ் 11 வலய தொழில் அலுவலகங்கள், 17 உப தொழில் அலுவலகங்கள் மற்றும் மாவட்ட தொழில் பரிசோதனை பொறியியலாளர் அலுவலகங்கள் நாடு முழுவதும் தாபிக்கப்பட்டுள்ளன.



#### பிரதான தொழிற்பாடுகள்

I. தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களிடையே கலந்துரையாடலை மேம்படுத்துதல்.

II. தொழில் சட்டவாக்கங்களை வலுப்படுத்துதல் மற்றும் சமூகக் கலந்துரையாடலை மேம்படுத்துவதனூடாக தொழிற்றுறைப் பிணக்குகளைத் தடுத்தலும், எழுந்துள்ள பிணக்குகளைத் தீர்த்தலும்.

III. நிறுவனம்சார் பரிசோதனைகளை (தொழில் பரிசோதனைகள்) நடத்துதல் மற்றும் திணைக்களத்தின் அலுவலர்களால் தேவைப்படுத்தப்பட்ட அறிவினை கிரமமாக நாளது வரைப்படுத்துவதன் மூலம் வேலையாட்களின் நியதிச்சட்ட உரிமைகளை நிலை நிறுத்துதல்.

IV. தொழில்தருநர்களுக்கும் பணியாளர்களுக்கும் தொழில் சட்டங்கள் பற்றிய அறிவினையும், புரிதலையும் அதிகரிப்பதன் மூலம் தொழிற்றுறை அமைதியைத் தாபித்தல்.

V. சர்வதேச தொழில் நியமங்களுடன் இணைந்து தேசிய பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றங்களுடன் ஒத்ததாக தொழில் சட்டங்களை வகுத்தமைத்தலும் நடைமுறைப்படுத்துதலும்.

VI. ஊ.சே.நிதியத்தின் சிறந்த நிருவாகம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் சேமலாப நிதியங்களின் நிருவாகத்தினூடாக வேலையாட்களுக்கு அனுகூலங்கள் மற்றும் ஓய்வூதிய படிகள் உரிய வகையில் வழங்கப்படுகின்றன என்பதை நிச்சியப்படுத்திக் கொள்ளுதல்.

VII. பெண்கள், இளைஞர் மற்றும் சிறுவர் தொழிலுக்கு ஏற்புடையதான சட்டங்கள் உள்ளடங்கலாக அனைத்து தொழில் சட்டங்களையும் முறையாக நடைமுறைப்படுத்துதல்.

VIII. சுகாதாரமான, விபத்துக்களற்ற வேலைத்தலங்கள் பற்றிய விழிப்புணர்வினை வேலையாட் களுக்கிடையில் உருவாக்குதல் மற்றும் வேலைத்தலங்களில் விபத்துக்கள் ஏற்படாது என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளுதல் மற்றும் சிறந்த சுகாதார செயல் முறைகளைப் பேணுதல்.

IX. மேலுள்ள தொழிற்பாடுகள் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவைப்பட்ட புள்ளிவிபரங்களை சேகரித்தலும் பகுத்தாராய்தலும்.

X. இலங்கையால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தொழில் தாபனத்தின் சமவாயங்களுக்கு சட்ட வலு அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

XI. சிறுவர் தொழிலையும், தீங்கிளைக்கின்ற சிறுவர் தொழிலையும் இல்லா தொழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

### 1.6.2 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் 2007 செப்ரெம்பர் 11 ஆம் திகதி அலுவலகரீதியாகத் தாபிக்கப்பட்டிருந்ததுடன், 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவகச் சட்டத்தினால் பாராளுமன்றத்தினால் சட்டரீதியாக ஒன்றிணைக்கப்பட்டது. இந்நிறுவகம், தொழிற்றுறையின் முத்தரப்பு அக்கறைதாரர்களை அதாவது தொழில்தருநர்கள் மற்றும் அரச ஊழியர்களைக் கொண்டிருக்கின்ற ஆளுநர்கள் சபையொன்றினால் நிருவகிக்கப்படுகின்றது. இந்த நிறுவகமானது, தொழில் சட்ட வாக்கங்கள், ஒழுங்குவிதிகள் பற்றியும் அதேபோன்று பல்வேறு முகாமைத்துவ விடயப்பரப்புகள் தொடர்பிலும் அறிவைப் பெற்றுள்ள திறன் மிக்க பலம்வாய்ந்த ஊழியர் அணியொன்றை உருவாக்குவதற்குத் தேவையான பயிற்சி, கல்விச் செயற்பாடுகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துகின்றது.

நிறுவகத்தின் குறிக்கோள்களை அடையும் நோக்கில், தொழில் சட்டமும் தொழிற்றுறை உறவுகளும், மனிதவள முகாமைத்துவம் மற்றும் வேலைத்தல உற்பத்தித்திறன் ஆகியவை மூன்று பிரதான விடயப் பரப்புகளாக தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று விடயப்பரப்புகளும் மூன்று வெவ்வேறு பிரிவுகளுக்கும், பயிற்சி செயலமர்வுகள், குறுகிய கால கற்கைநெறிகள், சான்றிதழ் மற்றும் டிப்புளோமா கற்கைநெறிகள் போன்ற அத்தகைய சேவைகளுக்கும் மற்றும் கற்கைநெறிகளுக்குமாக குறித்தொதுக்கப்பட்டிருந்தன.

#### குறிக்கோள்கள்

I. உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங் களுடன் இணைந்து தொழில் கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அபிவிருத்திச் செயல் முறையில் பணியாளர்களை துடிப்புடன் ஈடுபடுத்துவதற்காக அவர்களின் நலனை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கைகளை எடுத்தல்.

II. தொழில் கல்வி பற்றிய கருத்தரங்குகள், செயலமர்வுகள், மாநாடுகள் மற்றும் கூட்டங்களை நடத்துதல் அத்துடன் சஞ்சிகைகள், பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்களை வெளியிடுதல்.

III. தொழில் கல்வியுடன் தொடர்புபட்டுள்ள ஆராய்ச்சிகள், ஆய்வுகளை நடத்துதல் மற்றும் கற்கைநெறிகளை ஒழுங்குபடுத்துதல்.

IV. நூலகம் மற்றும் தகவல் சேவைகளைத் தாபித்தலும் பராமரித்தலும்.

V. ஒத்த குறிக்கோள்களுடன் தேசிய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், தாபனங்கள், அசோசியேசன்ஸ் மற்றும் ஒன்றியங்களுடன் நெருங்கிய உறவுகளைப் பேணுதல்.

VI. பல்கலைக்கழகங்களினதும் மற்றும் அவற்றுடன் இணைந்துள்ளவைகளதும் உதவியுடன் தொழில் கற்கைகளில் டிப்புளோமா கற்கை நெறிகள் உள்ளடக்கி கற்கைநெறிகளை நடத்துதல் மற்றும் தேவைப்படும்போது சான்றிதழ்கள் மற்றும் டிப்புளோமாக்களை வழங்குதல்.

VII. தொழிற்றுறை அமைதியைப் பேணுவதனை இலக்குவைத்து செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

### 1.6.3 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தின் மூலம் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் ஒன்றிணைந்தவொரு நிறுவகமாக உருவாக்கப்பட்டது. இந்நிறுவகம், சிறந்த சுகாதார, பாதுகாப்பு நடவடிக்கைகளினூடாக தொழில்சார் விபத்துக்களையும் நோய்களையும் தடுப்பதற்காகவும் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளையும், செய்முறை களையும் திருத்துவதனை முன்னெடுப்பதனூடாக ஒவ்வொரு வேலையாளருக்கும் சீரிய வேலைச் சூழலொன்றை உறுதிப்படுத்தி பணிபுரிவதுடன், இந்நிறுவகம் பயிற்சிகளிலிலிருந்து நன்மைகளைப் பெறுவதற்கு விரும்புகின்ற பணியாளரின் தொழில் தருநருக்கு கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்குகின்றது.

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் நடத்தப்பட்ட கற்கை நெறிகள்**

- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்புளோமா கற்கைநெறிகள்.
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறிகள்.
- பெருந்தோட்டத் துறையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான உயர் சான்றிதழ் கற்கைநெறிகள்
- கொதிகலனை இயக்குபவர்களுக்கான பயிற்சி.
- தொழிற்றுறைகள் மீதான வேலை ஆய்வு நிகழ்ச்சித்திட்டம்
- தொழில்சார்துறையில் தாதியர்களைப் பயிற்றுவித்தல்.
- மருத்துவமனைப் பணியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்.
- அலுவலகப் பதவியினர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்.
- ஆய்வுகூடங்களில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்.
- இரசாயனப் பொருட்களைப் பாதுகாப்பாகக் கையாளுதல்.
- உணவினைக் கையாள்பவர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்.
- மன அழுத்த முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.

### 1.6.4 வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்

வேலைத்தலத்தில் ஏற்படுகின்ற விபத்துக்களுக்காக பணியாளர்களுக்கு நட்டஈடுக் கொடுப்பனவை வழங்குவதற்காக 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்டஈடுக் கட்டளைச் சட்டம், 2005 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறு நடைமுறைப்படுத்தப்பட்டது. வேலையாளர் நட்டஈட்டு நீதிமன்றம், மாவட்ட நீதவானின் தத்துவம் மற்றும் நீதிவான் நீதிமன்ற தத்துவத்துடன் முழு நாட்டையும் உள்ளடக்கக்கூடிய வகையில் 14 சுற்றுலா நீதிமன்றங்கள் காணப்படுகின்றன. நீதிச் சேவைகள் ஆணைக் குழுவினால் நியமனம் செய்யப்படுகின்ற நீதிசார் அலுவலர்களான வேலையாளர் நட்டஈடு ஆணையாளர், மேலதிக வேலையாளர் நட்டஈடு ஆணையாளர்கள் மற்றும் வேலையாளர் நட்டஈட்டு உதவி ஆணையாளர்கள் ஆகிய 3 பதவிகள் உள்ளடங்கலாக, இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I இனைச் சேர்ந்த பதவி 1 இலங்கை நிருவாக சேவையின் பதவி 1 உள்ளடங்கலாக 43 பதவிகள் இதில் காணப்படுகின்றன.

இந்த அலுவலகத்தின் பிரதான குறிக்கோள், தொழில் புரிகையில் ஏற்பட்டகாயங்களால் துன்பப்படுகின்ற, தொழிலின் தன்மை காரணமாக நோய்வாய்ப்பட்டு வருத்துகின்ற வேலையாட்களுக்கு மற்றும் வேலைத்தலங்களில் விபத்து காரணமாக இறந்த வேலையாட்களின் தங்கியிருப்பவர்களுக்குச் செலுத்த வேண்டிய நாட்டஈட்டினைச் செலுத்துவதாகும்.

**பிரதான தொழிற்பாடுகள்**

I. அரசதுறை மற்றும் தனியார் துறையில் தொழில் புரிகையில் ஏற்படுகின்ற விபத்துக்கள் மற்றும் தொழில்சார் நோய்களுக்காக தொழில்தருநர்களிடமிருந்து நட்டஈட்டினை அறவிடுவதுடன் தொடர்புட்ட செயற்பாடுகள் மற்றும் வேலையாளரொருவர் இறக்கின்ற போது அவரில் தங்கியிருப்பவர்களுக்கு தொழில்தருநரிடமிருந்து நட்டஈட்டை அறவிடுவது தொடர்பான செயற்பாடுகள். (2005 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட இறுதித் திருத்தத்தின்படி, செலுத்தக்கூடிய ஆகக்கூடிய நட்டஈடான 550,000/- ரூபாவினை 2 மில்லியன் வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன).
II. இறந்த பணியாளர்களில் தங்கியிருக்கின்ற பராயமடையாதவர்களது நட்ட ஈட்டை அவர்கள் முதிர்ச்சியடையும் வரையில் வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளரின் பாதுகாப்பின் கீழ் தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்பிலிட்டு அதனை நிருவகித்தல்.
III. நட்டஈட்டுக் கொடுப்பனவை தெழில்தருநர்கள் செலுத்தாத சந்தர்ப்பங்களில், அத்தகைய தொழில்தருநர்களது அசையும், அசையாத சொத்துக்களைக் கைப்பற்றி, நட்டஈட்டினை அறவிடுவதற்காக அவற்றை பொது ஏலத்தில் விடுதல்.
IV. வேலையாளர் நட்டஈட்டுக் காப்புறுதி அனுமதிப் பத்திரத்தை வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் இரத்துச் செய்தல்.
V. பணியாளரொருவருக்கு விபத்தொன்று ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அந்த இடத்தில் பரிசோதனைகளை நடத்துதல்.
VI. இலங்கையில் பதிவுசெய்து கப்பலில் மற்றும் விமானத்தில் பணியாற்றுகின்ற வேலையாளர்களுக்கு இலங்கைக்கு வெளியே விபத்துக்கள் ஏற்படுகின்ற விடத்து நட்டஈடு அறவிடுவதனை மேற்கொள்ளுதல்.

### 1.6.5 தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

தேசிய உற்பத்தித் திறன் செயலகம் தற்போது தொழில் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருவதுடன், 1966 ஆம் ஆண்டில் ஆசிய உற்பத்தித்திறன் தாபனத்தின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், இலங்கையில் உற்பத்தித்திறனை செம்மைப்படுத்துவதற்காக இலங்கையில் அதிகளவிலான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

**பிரதான செயற்பாடுகள்**

I. அரச நிறுவனங்கள், கல்விசார் மற்றும் சேவை துறைகள், சமூக அமைப்புகள் மற்றும் சிறிய, நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் ஆகியவற்றை இலக்கு வைத்து உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்துதல்.

II. உற்பத்தித்திறன் விடயங்கள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

- உற்பத்தித்திறன் டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டங்கள்
- உற்பத்தித்திறன் சான்றிதழ் கற்கை நெறிகள்
- உற்பத்தித்திறன் பற்றிய குறுகிய கால கற்கை நெறிகள்
- பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

III. நிறுவனங்களில் உற்பத்தித்திறனை அதிகரிப்பது பற்றிய ஆலோசனை சேவை களை வழங்குதல்.

IV. ஆசிய உற்பத்தித்திறன் தாபனத்துடனான பங்களிப்புடன் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.
- பயிற்சி செயலமர்வுகளை நடத்துதல்.
- இ-கற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.
- தொழில்நுணுக்க நிபுணத்துவ சேவைகளைப் பாதுகாப்பதன் மூலம் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

V. "5S" சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
VI. ஊடக மற்றும் பிரசித்த நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளுதல்.
VII. தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் வைபவத்தை நடத்துதல்

# அத்தியாயம் இரண்டு

## சாதனைகள் / எதிர்கால முன்னேற்றங்கள்

# முன்னேற்றமும் எதிர்காலக் கண்ணோட்டமும்

நாட்டின் உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் தொழில் அமைச்சின் பிரதான செயற்பணியாகும். இந்த செயற்பணியின் முன்னோக்கிப் பயணிக்கையில் இந்த அமைச்சானது, பல்வகையான செயற்பாடுகளினுடாக தொழில் சமூகத்திற்கு மாற்றமடைகின்ற சேவையை வழங்குவதற்கான பொறுப்பினைக் கொண்டிருக்கின்றது. இந்த அமைச்சின் நிகழ்ச்சித்திட்டங்கள், “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைக் கூற்றுக்கமைவாகவும் “தனியார் துறையிலுள்ள பணியாளர்களின் பாதுகாப்பினை உருவாக்குதல் மற்றும் திறனுள்ள வெளிநாட்டுத் தொழில் அணியொன்றை உருவாக்குதல்” என்ற தேசிய கொள்கைக் கூற்றில் தரப்பட்டவாறான தொழிற்பாடுகள் மற்றும் விசேட முன்னுரிமைகளுக்கமைவாகவும், இலங்கையால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் சர்வதேச தொழில் சமவாயங்களுக்கமைவாகவும் அரசாங்கத்தால் வகுத்தமைக்கப்பட்ட கொள்கையினடிப்படையில் வகுத்தமைக்கப்பட்டுள்ளன. இந்த அத்தியாயம், அமைச்சினாலும், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்களாலும் உழைக்கும் சமூகத்தின் நலனுக்காக 2021 ஆம் ஆண்டில் ஆற்றப்பட்டுள்ள வகிபாகத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

## 2.1 விசேட சாதனைகள், சவால்கள் மற்றும் கண்ணோட்டம்

அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச சமூகப் பொருளாதார நிலைமைகள் மற்றும் தொழில் சமவாயங்களுக்கும் நியமங்களுக்கும் அமைவாக சட்ட ஏற்பாடுகளை வகுத்தமைத்து இலங்கையில் முதலீட்டுக்கு அனுசரணையான சூழலொன்றை ஏற்படுத்துதல், நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்கான வழிகளை ஏற்படுத்துதல் அமைச்சுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள காலத்துடன் கூடிய பொறுப்பாகும். இந்த அமைச்சானது தற்போதைய, எதிர்கால தொழில் உலகத்திற்குப் பொருந்தும் வகையில் தற்போதிருக்கின்ற சட்டவாக்கங்களையும், ஒழுங்கு விதிகளையும் திருத்துவதற்கும், உழைக்கும் மக்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் கட்டுப்பட்டுள்ளது.

கோவிட்-19 தொற்று பரவல் இருந்தபோதிலும், தொழில் துறை அமைதியைப் பேணுகின்ற அதேவேளையில் தொழில் அணிக்கான குறிப்பிடத்தக்க வெற்றிகளை அடைந்ததில் அமைச்சு பெருமையடைகின்றது. அவ்வாறு அடையப்பட்ட வெற்றிகள் மற்றும் எதிர்கால இலக்குகள் கீழே கோடிட்டுக்காட்டப்பட்டுள்ளன.

### 2.1.1 தொழிலாளர்களது உரிமைகளை நிலைநாட்டும் நோக்கில் தொழில் சட்டங்களைப் பலப்படுத்துதல்.

1923 ஆம் ஆண்டில் தொழில் அமைச்சு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து நடைமுறைப் படுத்தப்பட்ட கட்டளைச் சட்டங்கள் உள்ளடங்கலாக சுமார் 50 சட்டவாக்கங்கள் மற்றும் அதனைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டங்கள் தொழிலாளர்களது நலன்புரிக்காகவும், அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இந்த அமைச்சு, தொழிலணி எதிர்கொள்கின்ற அல்லது எதிர்கொள்ளவுள்ள தற்போதைய, எதிர்கால சவால்களை சமாளிக்கக்கூடிய அத்தகைய வகையில் தற்போதிருக்கின்ற தொழில் சட்டங்களைத் திருத்துவதற்கும், புதிய சட்டவாக்கங்களை வரைவதற்கும் நடவடிக்கைகள் எடுத்துள்ளது. தொழில் சட்டத்தில், அத்தகைய சட்டங்களை நடைமுறையில் பிரயோகிப்பதில் எழுந்துள்ள பிரச்சினைகள், தொழில் சட்டங்களைத் திருத்துதல் அல்லது சட்டப் பாதுகாப்பை வழங்கி புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றில் தற்போதிருக்கின்ற சிக்கல்களை இனங்காணப்பதில் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

**1. தற்போதைய குறைந்தபட்ச தேசிய சம்பளமான 10,000/- ரூபாவினை 2,500/- ரூபாவினால் 12,500/- ரூபா வரை அதிகரித்தல்.**

தொழில்தருநரொருவர் பணியாளரொருவரைப் பணிக்கமர்த்துகின்றபோது குறைந்தபட்ச வேதன மாக செலுத்தவேண்டியிருந்த குறைந்தபட்ச வேதனமான 10,000/- ரூபா 2021 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க வேலையாளர்களின் குறைந்தபட்ச தேசிய சம்பளச் சட்டத்தால்

12,500/- ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருந்தது. 2021 ஓகஸ்ட் மாதத்தில் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப் பட்டிருந்த இந்த சட்டத்தின் கீழ் செலுத்துவதற்கு தேவைப்பட்டிருந்த 12,500/- குறைந்தபட்ச அடிப்படைச் சட்டத்திற்கு மேலதிகமாக, வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படியான 1,000/- ரூபா மற்றும் 2,500/- ரூபாவிற்கும் உரித்துடையவர் என்பதுடன், அத்தகைய தொழில்தருநரொருவர் குறைந்தபட்ச வேதனமாக பணியாளரொருவருக்கு மொத்தமாக 16,000/- ரூபாவினைச் செலுத்துவதற்கு கடப்பட்டுள்ளார்.

**2. வேலையாட்களின் தொழில் முடிவுறுத்தப்படுகையில் செலுத்தப்படுகின்ற ஆகக்கூடிய நட்டஈட்டினை 1,250,000/- ரூபாவிலிருந்து 2,500,000/- ரூபா வரை அதிகரித்தல்.**

பணியாளர்கள் நியாயமற்ற வகையில் சேவையிலிருந்து நீக்கப்படுகின்றவிடத்து, நிறுவனங்கள் மீளக்கட்டமைக்கப்படும் போது பணியாளர்கள் குறைக்கப்படுமிடத்து வேலையாட்களுக்கு செலுத்தவேண்டிய நட்டஈட்டுத்தொகை தீர்மானிக்கப்படுகின்றதன்பேரில், 1971 ஆம் ஆண்டின் 45 அம் இலக்க வேலையாளரின் தொழில் முடிவுறுத்தல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வேலையாளரொருவருக்கு செலுத்தவேண்டிய நட்டஈட்டுக்கான சூத்திரத்தில் ஆகக்கூடிய நட்டஈட்டு வரையறை 1,250,000/- ரூபாவாக மீளக்கட்டமைக் கப்படுகின்றது. உயர் வேதனங்கள் மற்றும் நீண்ட சேவைக்காலத்தைக் கொண்டிருக்கின்ற வேலையாளரால் இந்த முறைமையின் கீழ் பெறப்படக் கூடிய ஆகக்கூடிய நட்டஈட்டினை, பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய நட்டஈட்டுடன் பகுதியளவில் ஒப்பிடுமிடத்து நியாயமற்ற தென தோன்றுகின்றது. ஆகவே, சொல்லப்பட்ட குறைந்தபட்ச வரையறையை திருத்தி, 2021.02.25 ஆம் திகதிய 2216/17 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் 2.5 மில்லியன் ரூபாவாக (2,500,000/- ரூபா) அதிகரிக்கப்பட்ட குறைந்தபட்ச நட்டஈட்டுத் தொகை இருந்தது.

**3. தொழில் புரிவதற்குரிய குறைந்தபட்ச வயதினை 14 வயதிலிருந்து 16 வயதாக அதிகரித்தல்**

பிரசைகளுக்கு அன்பு, தங்குமிடம் மற்றும் தரமான கல்வி என்பவற்றை வழங்குவதன் மூலம் அவர்களை உழைக்கும் பிரசைகளை உருவாக்கும் குறிக்கோளுடன் 2015 ஆம் ஆண்டில் கல்விக் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளைத் தொடர்ந்து, இலங்கை சிறுவர்களுக்கு கட்டாய கல்விக் காலப்பகுதி 16 வயது என்பதாக விதித்துரைக்கப்பட்டுள்ளது. இலங்கையால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள 1973 ஆம் ஆண்டின் 138 ஆம் இலக்க தொழில் புரிவதற்கு அனுமதிக்கின்ற குறைந்தபட்ச வயது சமவாயத்துடன் தொடர்புபடுகின்ற சர்வதேச தொழில் தாபனத்தின் சமவாயம், உரிய நாட்டின் பாடசாலைக் கல்வியின் கட்டாய வயதான 15 வயது குறைந்தபட்ச தொழில்புரியும் வயதாக இருத்தல் வேண்டும் என்கின்றது. ஆகவே, பின்வருகின்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளைத் திருத்தி, இலங்கையில் மற்றும் சர்வதேச சட்டக் கடப்பாடுகளும் ஐக்கியமாகும் வகையில் இலங்கையின் தொழில் சட்டங்களில் சிறுவர் தொழிலை வரிசைப்படுத்தல் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் கைக்கொள்ளப்பட்டிருந்தன.

- 2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர் (திருத்தச்) சட்டம்.
- 2021 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர் களை தொழிலுக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டம்.
- 2021 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க குறைந்தபட்ச சம்பளங்கள் (இந்திய தொழி லாளர்) (திருத்தச்) சட்டம்.
- 2021 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க தொழிற்சாலைகள் (திருத்தச்) சட்டம்.
- 2021.01.06 ஆம் திகதியிடப்பட்ட 2209/41 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் திருத்தப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**4. ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் தொழில் திணைக்களத்தில் பதிவுசெய்யும் வகையில் 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தைத் திருத்துதல்.**

பெரும்பாலான தொழில்தருநர்கள் தமது பணியாளர்களின் ஊ.சே.நி உதவுதொகைகளை மத்திய வங்கிக்கு ஆனுப்புகின்றபோதும், பணியாளர்களின் சுய தரவுகளைக் கொண்டிருக்கின்ற ஏ.பீ.எச் படிவங்களை முழுமையாக பதிவுசெய்வதற்கு தவறுகின்றனர். அத்தகைய தகவல்களை வழங்குதல் சட்டத் தேவைப்பாடாக தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும், அத்தகைய விபரங்களை சமர்ப்பிப்பதற்கான குறித்த காலப்பகுதி விதித்துரைக்கப்படாமையானது, சில தொழில்தருநர்கள் ஊ.சே.நிதியத்தில் தமது பணியாளர்களை பதிவு செய்யாமையை விளைவாக்கியிருந்ததுடன், பதிவுசெய்யப்படாத பணியாளர்கள் தமது அனுகூலங்களை கோருகின்ற நிலைமைகளில் சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர். இத்தகைய நிலைமையை மாற்றும் நோக்கில், வேலைத்தலம் அமைந்துள்ள பிரதேசத்தை உள்ளடக்குகின்ற தொழில் அலுவலகத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 30 நாட்களுக்குள் தொழில்தருநர் கட்டாயமாக பணியாளரைப் பதிவு செய்வதற்காக ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தைத் திருத்தி பாராளுமன்றத்தில் அனுமதி பெறப்பட்டதன்பேரில், 2021.10.21 ஆம் திகதியிடப்பட்ட 2249/13 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

**5. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மாதாந்தம் வைப்புச் செய்யப்படுகின்ற உதவுதொகைகள் தொடர்பில் உடனடியாக அதன் உறுப்பினர்களுக்கு அறிவிப்பதற்காக குறுஞ்செய்தி சேவை யொன்றை அறிமுகப்படுத்தும் வகையில் ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தைத் திருத்துதல்**

தொழில்தருநர்கள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பணியாளர்களது மாதாந்த உதவு தொகைகளை உரியமுறையில் அனுப்புகின்றபோதிலும், உதவுதொகைகள் அனுப்பப் பட்டுள்ளனவா என்பது பற்றி பணியாளர்கள் அறிவதற்கான வசதி காணப்படவில்லை. இருப்பினும், கணக்கு நிலுவைகள் பற்றி விபரம் மட்டும் ஆண்டிற்கு இருமுறை கணக்குக் கூற்றின் மூலம் உறுப்பினர்களுக்கு அறியத்தரப்பட்டிருந்தது. அனுப்பீடுகள் தொடர்பில் குறுகிய காலத்தில் பணியாளர்கள் அறியமுடியாமை பல்வேறு சிரமங்களை ஏற்படுத்தியிருந்தது. இருப்பினும், பணியாளரது கணக்கு பற்றி மாதாந்தம் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான குறுஞ்செய்தி சேவையின் அறிமுகமானது, தொழில் திணைக்களம் கவனம் செலுத்தி தொழில் தருநர் கொடுப்பனவுகள் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் உடனடி நடவடிக்கை எடுப்பதற்கு அத்தகைய பணியாளருக்கு வழிவகுக்கும். மாதாந்தம் வரவு வைக்கப்படுகின்ற உதவுதெகை பற்றி அறிவித்து பணியாளரின் கைத்தொலைபேசிக்கு குறுஞ்செய்தி அனுப்புவதற்காக 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச்சட்டத்தின் ஒழுங்குவிதிகள் 2021.10.12 ஆம் திகதியிடப்பட்ட 2245/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலினால் திருத்தப்பட்டிருந்தது.

**6. வெளிநாடுகளுடன் சமூகப் பாதுகாப்பு உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடுவதற்கு ஏற்பாடு செய்யும் வகையில் 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தைத் திருத்துதல்.**

வெளிநாடுகளில் 2021 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் (திருத்தம்) சட்டம் மூலம் 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச்சட்டத்தில் "பணியாளர்" மற்றும் "மேமவப்பட்ட தொழில்" ஆகிய பதங்களுக்கான வரைவிலக்கணங்கள், வதிவிட நாடுகளின் சமூகப் பாதுகாப்பு நிதியங்களுக்குச் செலுத்தப்படவுள்ள உதவு தொகைளுக்குப் பதிலாக இலங்கையின் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு அவர்களின் உதவு தொகைகளை செலுத்துவதற்கும், மற்றும் வெளிநாட்டுக் கம்பனிகளின் இலங்கை கிளைகளின் பணியாளர்கள் இந்நாட்டின் ஊ.சே.நிதியத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கு இயலச் செய்யும் வகையில் இலங்கை கம்பனிகளின் வெளிநாட்டுக் கிளைகளில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள பணியாளர்கள் பிறிதொரு நாட்டுடன் சமூகப் பாதுகாப்பு உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடு வதற்கு இயலச்செய்வதனை இலகுபடுத்தும் வகையில் திருத்தப்பட்டிருந்தன.

இதன்படி, இந்திய அரசாங்கத்துடன் அத்தகைய சமூகப் பாதுகாப்பு உடன்படிக்கையை முதலில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஆகவே, இந்தியாவில் பணிக்கமர்த்தப் பட்டுள்ள இலங்கை பணியாளர்கள், சமூகப் பாதுகாப்பு நிதியத்திலுள்ள தமது உதவு தொகைகளைக் கோருவதற்கு இந்தியச் சட்டத்தின்படி 58 வயது வரை காத்திருக்க வேண்டிய தேவையில்லை.

**7. 18 வயதுக்குக் கீழ் பணிக்கமர்த்தப்பட்டுள்ள சிறுவர்களின் அபாயகரமான தொழில்களாக விதித்துரைக்கப்பட்டுள்ள பட்டியலைத் திருத்துதல்**

1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள், இளம் நபர்கள் மற்றும் சிறுவர்களைத் தொழிலுக்கமர்த்தும் சட்டத்தில் தரப்பட்டுள்ள அபாயகரமான தொழில்களின் பட்டியலை, 51 தொழில்களிலிருந்து 71 தொழில்களாக 2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அபாயகரமான தொழில்கள் ஒழுங்குவிதிகளால் திருத்தப்பட்டிருந்தது. இந்த ஒழுங்குவிதிகளின் கீழ், வீட்டுப் பணியாளராக, இறைச்சிக் கூடங்களில் எந்த வகையான தொழில்களிலும், பூச்சி கொல்லிகள், களை கொல்லிகள், பூஞ்சண கொல்லிகள் உள்ளடங்கலான வேளாண்மை இரசாயனப் பொருட்களை உற்பத்திசெய்தல், சேமித்தல், பொதியிடல், விற்பனை செய்தல்,

கையாளுதல், கொண்டு செல்லுதல், பட்டாசுகள் அல்லது வேறு எந்த வெடி மருந்தையும் உற்பத்தி செய்தல் அல்லது விற்பனை செய்தல், பிணவறையில், இறுதிச்சடங்கு நிலையத்தில், அல்லது மயானத்தில் அல்லது அத்தகைய இளம் ஆட்களின் சுகாதாரம் அல்லது பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிக்கின்ற தொழில்களில் 18 வயதுக்குக் குறைந்த எவரையும் பணிக்கமர்த்துவதற்கு சட்ட விரோதமான தாகும். இந்த விதிமுறைகள், சிறுவர்கள் / இளைஞர்களை அவர்களின் உடல், உள ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு அல்லது ஒழுக்கத்திற்கு தீங்கு விளைவிக்கின்ற தொழில்களில் பணிக்கமர்த்துவதைத் தடைசெய்கின்றன. 2021.11.18 ஆம் திகதிய 35/2251 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, அபாயகரமான தொழில்களின் திருத்தப்பட்டியல் பாராளுமன்றத் தால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

**8. தனியார் துறையிலுள்ள பணியாளர்களுக்குரிய குறைந்தபட்ச ஓய்வூதிய வயதைத் தீர்மானிப்பதற்கான முறைமையொன்றினை அறிமுகப்படுத்தி 2021 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க வேலையாட்களின் குறைந்தபட்ச ஓய்வூதிய வயதுச் சட்டத்தைக் கொண்டு வருதல்.**

இலங்கையின் தனியார் துறைக்கு சட்டத்தினால் வரையறுக்கப்பட்ட ஓய்வுபெறுவதற்கான நிலையான வயது எதுவும் இல்லையென்பதுடன், சில தொழில்தருநர்கள் தமது ஆண் பணியாளர்களை 55 வயதினை அடைந்தவுடன் ஓய்வு பெறும் முறையையும் பெண் பணியாளர்கள் 50 வயதை அடைந்தவுடன் ஓய்வு பெறும் முறையையும் கைக்கொண்டிருந்தனர். தெற்காசிய நாடுகளில் ஓய்வுபெறும் வயது 58, 59 அல்லது 60 ஆண்டுகள் என்பதுடன், இலங்கையர்களின் ஆயுட்காலத்தைக் கவனத்தில்கொண்டு, 2021 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க வேலையாளர்களின் ஓய்வுபெறும் குறைந்தபட்ச வயதுச் சட்டம் 2021 ஓகஸ்ட் மாதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தனியார் துறையில் ஓய்வு பெறுவதற்கான குறைந்தபட்ச வயதை 60 வருடங்களாக வரையறுத்திருந்தது. இச்சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதே நேரத்தில், 2021 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க வேலையாளர் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. இவ்விரு புதிய சட்டங்களும், தனியார் துறையைச் சேர்ந்த அனுபவம்வாய்ந்த வேலையாட்களின் அறிவை அந்தந்த நிறுவனங்கள் மற்றும் நாட்டின் முன்னேற்றத்திற்காக அதிக இலாபகரமாகப் பயன்படுத்துவதற்கு வழிவகுக்கும் என்பதுடன், தொழில் அணியின் ஆக்கத்திறனைப் பாதுகாப்பதற்கும் இது பங்களிப்புச் செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**9. தொழிலின் நிமித்தம் காலப்பகுதியில் காயமடைந்த பணியாளர்களுக்கு வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச்சட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட ஆகக்கூடிய தொகையை 550,000 ரூபாவிலிருந்து 2,000,000 ரூபாவாக அதிகரித்தல்**

2005 ஆம் ஆண்டில் இறுதியாகத் திருத்தப்பட்ட 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச்சட்டம், வேலையாளரொருவர் தொழில்புரிகையில் காயமடைகின்றபோது செலுத்தப்பட்ட ஆகக்கூடிய நட்டஈடு 550,000/- ரூபாவாகும். 2022 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சட்டத்தினூடாக ஆகக்கூடிய நட்டஈட்டு எல்லையை 2 மில்லியன் ரூபாவாகவும் (ரூபா 2,000,000/-), ஏனைய நட்டஈடுகளை விகிதாசாரரீதியிலும் அதிகரிப்பதற்கு பாராளுமன்றத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. வதிவிடத்திலிருந்து வேலைத்தலத்திற்கு வரும் வழியில் அல்லது வேலைத்தலத்திலிருந்து வதிவிடத்திற்கு திரும்பிச் செல்லும் வழியில் ஏற்பட்ட விபத்துக்கான நட்டஈட்டினை பணியாளர்கள் பெற்றுக்கொள்ளச் செய்யும் வகையிலான ஏற்பாடுகளும் கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

**10. தொழில் சட்டங்களின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளை விரைவுபடுத்து வதற்காக தொழில் நியாயசபைகளுக்கும், நீதவான் நீதிமன்றங்களுக்கும் ஒத்த நீதித் தத்துவங்களை வழங்குதல்**

தற்போது, தொழில் சட்டங்கள் மற்றும் ஊ.சே.நி ஏற்பாடுகளின் மீறல்களுக்கான நிவாரணங்களை நாடும் நோக்கில், வழக்குகள்நீதவான் நீதிமன்றங்களில் தாக்கல் செய்ய வேண்டியிருக்கின்றது. அதன் விளைவாக ஏற்படுகின்ற காலதாமதங்கள் காரணமாக, வேலையாளர்களுக்கு உரித்துடைய பணிக்கொடைகள், ஊழியர் சேமலாப நிதியங்கள் மற்றும் வேதன நிலுவைகள் போன்ற அத்தகைய அவர்களின் நியதிச்சட்ட உரித்துக்களை மீள அறவிடுவதற்கு 5 முதல் 6 ஆண்டுகள் வரையான நீண்டதொரு காலப்பகுதி எடுக்கின்றது. இதற்கான தீர்வாக, தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு நீதித் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு மேலதிக நீதவான்களின் தத்துவங்களை தொழில் நியாயசபைகளின் தலைவர்களுக்கு உரித்தளிப்பதற்காக விசேட ஏற்பாடுகள் சட்டமூலம், வரையப்பட்டுள்ளது. இச்சட்டத்திற்கான திருத்தத்திற்கான இறுதி வரைவு சட்டமாதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இச்சட்ட மூலத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், சட்டமாதிபரின் ஒப்புதலையும், இறுதி வரைவினை மூன்று மொழிகளிலும் பெறுவதன்பேரில் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும்.

**11. தொழில் நியாயசபையில் வேலையாளர் சார்பாக தோன்றுவதற்கு சட்டத்தரணி அல்லாத பிரதிநிதியொருவருக்கு அதிகாரத்தை வழங்குதல் மற்றும் தொழில் நியாயசபையின் கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தொழில் நியாய சபைகளின் தலைவர்களுக்கு அதிகாரத்தை வழங்குதல்.**

தொழிலிலிருந்து நியாயமற்ற வகையில் பணிநீக்கம் செய்யப்பட்டதற்காக தொழில்தருநர்களுக் கெதிராக பணியாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில், வழக்கறிஞர்கள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மட்டுமே தற்போது தொழிலாளர்களுக்காக ஆஜராகுகின்றனர். வழக்கறிஞர் அல்லாத பிரதிநிதிகள் பணியாளர்களுக்காக ஆஜராவதற்கு அதிகாரமளிக்கும் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்து வதன் மூலம் தொழில் ஆணையாளர் அதிபதியினூடாக பணியாளர்களுக்காக ஆஜராவதற்கு அதிகார மளிக்கப்பட்ட அலுவலர், நடுத்தீர்ப்பாளர், சட்டத்தரணி அல்லது வேறு எவரேனும் பிரதிநிதி ஆகியோருக்கு அதிகாரங்களைக் கையளித்தல்.

தற்போது தொழில் நியாயசபை வழங்கும் உத்தரவுகளுக்கு இணங்காத தொழில்தருநர்களுக் கெதிராக நீதவான் நீதிமன்றங்களில் முறைப்பாடுகளைப் பதிவுசெய்தல் வேண்டும். இது தொடர்பில் ஏற்படுகின்ற காலதாமதங்களைக் குறைக்கும் பொருட்டு, தொழில் நியாய சபைகளின் தலைவர்களுக்கு அவர்களின் ஆணைகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரங்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

இந்த திருத்தங்கள் அடங்கிய இறுதி வரைபுக்கு சட்டமாதிபர் திணைக்களத்தின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், சட்டமாதிபர் திணைக்களத்திடமிருந்து மூன்று மொழிகளிலும் இறுதி வரைபினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் சட்டமூலத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**12. கட்டளைகளை நடைமுறைப்படுத்துகையில் இடம்பெறுகின்ற தேவையான மேன்முறையீடு களைக் குறைப்பதற்காக ஆணை விண்ணப்பங்கள், மீளாய்வு விண்ணப்பங்கள் மற்றும் மேன்முறையீடுகளை நிரப்புகையில் சமர்ப்பிப்பதற்கு பிணைப்பொறுப்பைத் தேவைப்படுத்து கின்ற ஏற்பாடுகளைக் கொண்டுவருதல்.**

தொழில் ஆணையாளர் அதிபதியின் கட்டளைக்கு எதிராக ஆணை மனுவொன்றைக் கோருதல் அல்லது தொழில் அணையாளர் அதிபதிக்கு பிணைப்பொறுப்பொன்றை சமர்ப்பித்த பின்னரே நீதவான் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடொன்றைத் தாக்கல் செய்யும்போது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் வேலையாளர் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் திருத்தப்படவுள்ளது. உத்தரவுகளை நிறைவேற்றுவதில் தேவையற்ற மேன் முறையீடுகளைக் குறைக்கும் நோக்கில் இந்த சட்ட ஏற்பாடு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. சட்டத்திருத்தத்திற்கான இறுதி வரைவு சட்டமாதிபர் திணைக்களத்திடம் வழங்கப்பட்டுள்ள தோடு, சட்டமாதிபரின் ஒப்புதல் மற்றும் மூன்று மொழிகளிலும் இறுதி வரைவினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் சட்டமூலத்தை வர்த்தமானியில் பிரசுரித்து, பராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**13. கட்டளைகளை நிறைவேற்றுகையில் தேவையற்ற மேன்முறையீடுகளைக் குறைப்பதற்காக கைத்தொழில் நீதிமன்றங்களின் கட்டளைகளுக்கெதிராக நடுத்தீர்ப்பு வழக்குகளை, ஆணை விண்ணப்பங்களை, மீளாய்வு விண்ணப்பங்களை தாக்கல் செய்கையில் பிணைப் பொறுப்புக்களை சமர்ப்பிப்பதற்கு தேவைப்படுத்தி ஏற்பாடுகளைக் கொண்டுவருதல்.**

இந்த நோக்கத்திற்காக 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டம் திருத்தப்படவுள்ளது. சட்டத் திருத்தத்திற்கான இறுதி வரைவு சட்டமாதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், சட்டமாதிபரின் ஒப்புதல் மற்றும் மூன்று மொழிகளிலும் இறுதி வரைவினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் சட்டமூலத்தை வர்த்தமானியில் பிரசுரித்து, பராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**14. தவறான நடத்தைக்காக ஒழுக்காற்று நடவடிக்கைக்கமைவாக அல்லது தொழில் தருநர்களால் இடைநிறுத்தப்பட்டுள்ளதற்கமைவாக இறுதி**

**ஒழுக்காற்று கட்டளையொன்று வழங்கப்பட வேண்டிய கால எல்லையொன்றை விதித்துரைத்தல்.**

ஒழுக்காற்று விசாரணைகளுக்கமைவாக தனியார் துறை பணியாளர்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகளை விரவுபடுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள், 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தில் கொண்டு வரப்படுகின்றது. ஒழுக்காற்று விடயம் தொடர்பில் இறுதி முடிபுகளை வழங்குவதற்கு நீண்ட கால எல்லையை எடுப்பதன் மூலம் பணியாளர்கள் மற்றும் அவர்களில் தங்கியிருப்பவர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுகின்றது. ஆகவே, ஒழுக்காற்று விடயம் தொடர்பில் இறுதி முடிபுகளை வழங்கு வதற்கான கால எல்லையை நிர்ணயிக்க வேண்டியிருக்கின்றது. ஆகவே, அத்தகைய இடை நிறுத்தத் திகதியிலிருந்து ஆறு (06) மாதங்களுக்குள் ஒழுக்காற்று விசாரணை நடத்தி, ஒழுக்காற்று உத்தரவு பிறப்பிக்கப்படுதல் வேண்டுமென்றும் தவறான நடத்தை, நிதி மோசடி இல்லாதிருப்பின் சம்பளத்தில் அரைவாசி வழங்குமாறு கோரி கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பான அடிப்படை வரைவு சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டு, அதிலுள்ள அவதானிப்புகள் அமைச்சரவையால் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இறுதி வரையும், அரசியலமைப்புசார் சான்றிதழும் சட்டமாதிபரிட மிருந்து கிடைக்கப் பெற்றதன் பின்னர், வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும், பாராளுமன்றத்தில் அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவையின் அனுமதி மீண்டும் பெறப்படவேண்டியுள்ளது.

**15. தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரி மீது புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துதல்.**

பணியாளர்களின் சுகாதாரம் மற்றும் நலன்புரியினைப் பாதுகாப்பதற்கு கைத்தொழில் சட்டங்களில் தற்போதிருக்கின்ற சட்ட ஏற்பாடுகள் போதுமானவையல்ல. ஆகவே, சர்வதேசரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்களுக்கு உரிய அவதானம் செலுத்துகின்ற அதேவேளை, பணியாளரின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நலன்புரியினைப் பாதுகாப்பதற்குரிய சூழலை உருவாக்குவதற்கு புதிய சட்டங்களை வகுத்தமைத்தல் காலத்தின் தேவையாகின்றது. கௌரவ சட்டமாதிபரினதும், சட்டவரைஞரினதும் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக வரைவுக்குச் சாத்தியமான திருத்தங்களை இனங்காண்பதற்கு அமைச்சரவை குழுவொன்றை நியமித்துள்ளது. இக்குழுவிடமிருந்து அவதானிப்புகளைப் பெற்றதன் பின்னர் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**16. 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலகப் பணியாளர் சட்டத்தை வேலையாட்களின் நலன்புரி மற்றும் தற்போதைய தேவைப்பாடுகளுக்கு ஏற்ப திருத்துதல்**

விசேட கட்டளைகள் மீது இந்த மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள விமான நிலையங்கள், வதிவிட ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் (இரவில் 10.00 மணி) தவிர பி.ப.8.00 மணிக்குப் பின்னர் பெண்களைப் பணிக்கமர்த்துவதற்கு தொழில்தருநர்களுக்கு உரிமையில்லை. வெளிவள அறிவுச் செயன்முறையிலுள்ள தகவல் தொழில்நுட்பம் சர்வதேசரீதியில் தொழிற்படுத்தப்படுவதனால், அத்தகைய மட்டுப்படுத்தல்களைப் பின்பற்றி அலுவல்களை நடத்துவது சிரமமாக வந்துள்ளது. ஆகவே, இந்தத் துறைகளில் பணியாற்றுகின்ற பணியாளர்களின் (விசேடமாக பெண் பணியாளர்களின் பாதுகாப்பை நிச்சயப்படுத்தி) உரிமைகளைப் பாதுகாக்கின்ற அதேவேளையில் கடைகள் மற்றும் அலுவலகப் பணியாளர் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் உரிய சேவை நிபந்தனைகளை தளர்த்த வேண்டியிருக்கின்றது. இது தொடர்பிலான தொழில் முயற்சியாளர்கள், தொழில்தருநரின் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் ஆகியோருடன் கலந்துரையாடி தயாரிக்கப்பட்ட வரைவு தேசிய தொழில் ஆலோசனைச் சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

**17. 1958 ஆம் ஆண்டின் 15 இலக்க ஊழியர் சேமலாப நிதியச்சட்டத்தைத் திருத்துதல்**

ஊழியர் சேமலாப நிதியச் சட்டமானது, பணியாளரின் நலன்புரி அதிகரிப்பதற்காகவும், தற்போதைய சமூகப் பொருளாதார நிலைமைகளுக்குப் பொருந்தும் வகையிலும் திருத்தப்படுதல் வேண்டும். பணியாளர் ஒருவர் தன்னார்வ ஓய்வூதியத் திட்டத்தின் அடிப்படையில் அல்லது 55 வயதினை அடைவதற்கு முன்பாக ஓய்வுபெறுகின்ற சந்தர்ப்பத்தில் ஊ.சே.நிதிய அனுகூலங்களை மீளப்பொறுவதற்கு இயலும்வகையில் ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. தொழில் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட வரைவிற்கு இலங்கை மத்திய வங்கியின் அவதானிப்புகள் பெறப்பட்டு தேசிய தொழில் ஆலோசனைச் சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.



**18. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கப் பணிக்கொடைச் சட்டத்தைத் திருத்துதல்**

வேலையாட்களின் நலனை மேம்படுத்துவதற்கும் தற்போதைய சமூகப் பொருளாதாரப் போக்கு களுடன் இணங்கும் வகையிலும் பணிக்கொடைச் சட்டம் திருத்தப்படுதல் வேண்டும். மத்திய வங்கியின் அவதானிப்புகள் தொடர்பாக தொழில் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட வரைபு, தேசிய தொழில் ஆலோசனைச் சபையின் அங்கீகரத்திற்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

**19. நட்டஈடு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளருக்கும் தொழில் நியாயசபைகளுக்கும் ஒருமித்த நீதித் தத்துவத்தை வழங்குதல்.**

வேலையிலுள்ளபோது ஏற்பட்ட விபத்துக்களுக்கான நட்டஈட்டினைச் செலுத்துகின்ற செயல் முறையினை விரைவுபடுத்தும் நோக்கில் நட்டஈடு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளருக்கும் தொழில் நியாய சபைகளுக்கும் ஒருமித்த நீதித் தத்துவத்தை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. திருத்தப்பட்ட சட்டங்களின் வரைவுகள் அமைச்சரவை விஞ்ஞாபனத்துடன் சேர்த்து தயாரிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டதன் பின்னர் எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**20. சமூகப் பாதுகாப்பினை வீட்டு வேலையாட்களுக்கு விரிவுபடுத்தும் நோக்கில் தொழில் சட்டங்களால் வீட்டு வேலைகளையும் உள்ளடக்குதல்.**

சம்பளச் சபை கட்டளைச் சட்டம், ஊழியர் சேமலாப நிதியச் சட்டம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், மகப்பேற்று அனுகூலச் சட்டம், பணிக்கொடைச் சட்டம் போன்ற பல சட்டங்களில் வீட்டுப் பணியாளர்களை இணைத்துக்கொள்ளுதல் வேண்டும். கருத்துப் பத்திரத்திற்காக தேசிய தொழில் ஆலோசனைச் சபையின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பித்து, அனுமதியைப் பெற்றதன் பின்னர், இதற்கிணங்க குறித்த சட்டங்களைத் திருத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படவேண்டியிருக்கின்றது.

**21. உ.சே.நிதியச் சட்டத்தின் மேவுகையை காப்புறுதி முகவர்களுக்கு வழங்குதல்.**

ஊ.சே.நி சட்டத்தின் மேவுகையை காப்புறுதி முகவர்களுக்கு வழங்கும் நோக்குடன் உரிய அக்கறைதாரர்களுடன் ஆரம்ப பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவதுடன், அமைச்சரவை யின் அங்கீகாரத்தின் பேரில் இந்த விடயம் முன்னெடுக்கப்படும்.

**22. இலங்கை புலம்பெயர் வேலையாட்களுக்கு காப்புறுதி உரித்துக்களை வழங்குதல்.**

இலங்கை புலம்பெயர் வேலையாட்களுக்கான அனுகூலங்களை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் புலம்பெயர் வேலையாளர் காப்புறுதித் திட்ட மொன்று நிருவகிக்கப்படுகின்றது. புலம்பெயர் வேலையாளரொருவர் இறக்கின்ற பட்சத்தில் ஆகக் கூடிய நட்டஈடாக குறைந்தளவானதாக 600,000/- ரூபா வழங்கப்படுகின்றது. இறக்கின்ற சந்தர்ப்பத்தில் தங்கியிருப்பவர்களுக்கு ஆகக்குறைந்தது 15,000 அமெரிக்க டொலர்கள் மற்றும் நிரந்தரமாக, பகுதியளவில் அங்கவீனமடைகின்ற சந்தர்ப்பத்தில் மருத்துவச் செலவுகளுக்காக 3,000 அமெரிக்க டொலர்கள் முதல் 15,000 அமெரிக்க டொலர்களுக்கிடையில் நட்டஈடு வழங்குவதனை உள்ளடக்கி புதிய காப்புறுதித்திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பாரிய துன்புறுத்தல், தீவிரமான நோய்கள் ஏற்படுதல், கடுமையான விபத்துக்கள் ஏறுபடுதல் போன்றவற்கு அமைவாக, அதேபோன்று கோவிட்-19 போன்ற தொற்று நிலைமைகளை உள்ளடக்குதலும் கூட்டிணைக்கப்படுதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக, சொல்லப்பட்ட காப்புறுதி காப்பீடு கட்டாயமாக அனுமதிக்கப்பட்டுள்ளது என்று உறுதிப்படுத்தி ஆதாரம் சமர்ப்பிக்கப்படுகின்றது என்று புறப்படுகைக்கு முன்னராக அனுப்பப் படுதல் வேண்டும் என்று அனுமதி அறிக்கையில் நிபந்தனையொன்றை உள்ளடக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இது தொடர்பில், அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளதுடன், தேவையான எதிர்கால நடவடிக்கைகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்லினவகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சினால் எடுக்கப்படுகின்றது.

### 2.1.2 கோவிட்-19 தொற்றுக்கு முகம்கொடும்பதில் பணியாளர்கள் மற்றும் தொழில்தருநர்களைப் பாதுகாத்தல்

கோவிட்-19 தொற்று ஆரம்பத்துடன் சமூகக் கலந்துரையாடல் பொறிமுறையொன்றுடன் இணைத்து கௌரவ தொழில் அமைச்சரின் தலைமையில் முத்தரப்பு செயலணியொன்று தொழில் ஆலோசனைச் சபையின் உப குழுவாகத் தாபிக்கப்பட்டிருந்தது. இச்செயலணிக்கு குறித்தொதுக்கப்பட்ட தொழிற்பாடு, பணியாளர்கள் மற்றும் நிறுவனங்கள் மீதான கோவிட்-19 தாக்கத்தைக் குறைப்பதற்கு செயலூ க்கமுள்ள செயற்பாடுகளை எடுப்பதாகும்.

2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூன்று கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்தக் கலந்துரையாடல், அக்கறைதாரர்களிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும், பிணக்கு களாக மாறுவதற்கு முன்னர் தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கும் பெரிதும் உதவியுள்ளது. பணியாளர்களது சம்பளக் கொடுப்பனவு தொடர்பாக இச்செயலணிக் கூட்டத்தில் பின்வரும் ஒருமித்த கருத்துகள் எட்டப்பட்டிருந்தன.

- தொழில் ஆணையாளர் அதிபதியின் முன்னனுமதியுடன் கோவிட்-19 தொற்றுக்கு முகம் கொடுக்கையில் சாதாரணமாக நீண்ட காலம் பராமரிக்கமுடியாத சுற்றுலாத்துறை மற்றும் தளங்களிலுள்ள வியாபாரங்களிலுள்ள பணியாளர்களுக்கு இறுதியாகச் செலுத்திய வேதனத்தின் அடிப்படைச் சம்பளத்தில் 50% இனை அல்லது 14,500/= ரூபாவினை எது பணியாளருக்கு சாதகமாகவுள்ளதோ அதனைச் செலுத்துதல்.

- அதன் பின்னர், முத்தரப்பு செயலணி, இந்த சம்பளக் கொடுப்பனவு இணக்கப்பாட்டை சுற்றுலாத்துறை வர்த்தகங்களிலுள்ள பணியாளர்களுக்கு மட்டுமே 2021 யூலை முதல் டிசெம்பர் வரை செலுத்துவதென்று முடிபெடுத்திருந்தது.

  1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் பணியாட்களின் தொழிலை முடிவுறுத்துவதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு தொழில்தருநர்கள் உரித்துடையவர்கள் என்பதுடன் உரிய நட்டஈடு செலுத்தப்பட்டதன் பின்னர் தொழிலை முடிவுறுத்துவதற்கான அனுமதியை வழங்குவதற்கு தொழில் ஆணையாளர் அதிபதிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. கோவிட்-19 தொற்றுநோய்க்கு பின்னர் பணியாளர்களின் தொழிலைப் பாதுகாப்பதற்காக தொழில்தருநர்களுக்கும் பணியாளர்களுக்குமிடையில் உடன் பாட்டினை ஏற்படுத்துவதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் தொழில் திணைக்களம் எடுத்திருந்தது.

### 2.1.3 இலங்கை புலம்பெயர் வேலையாட்களுக்கு நலன்புரி வசதிகளை வழங்குவதனை இலகுபடுத்துதல்

கோவிட்- 19 தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட புலம்பெயர் வேலையாட்களுக்கு உரிய நாடுகளின் இலங்கை தூதரகங்களுடன் கூட்டிணைந்து இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தால் உலர் உணவுகள், அடிப்படை மருத்துவ வசதிகள், முகக் கவசங்கள், சுத்திகரிப்பு திரவங்கள் மற்றும் தற்காலிக தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கோவிட்- 19 தொற்று ஏற்பட்டதன் காரணமாக இலங்கைக்குத் திரும்புகின்றவர்களுக்கு நட்டஈடு செலுத்துவதற்காகவும் மற்றும் பதிவினைச் செய்கின்ற காலப்பகுதியில் கோவிட்-19 காரணமாக பணியாளரொருவர் இறக்கின்ற சந்தர்ப்பத்தில் தங்கியிருப்பவர்களுக்கு நட்ட ஈட்டினைச் செலுத்துவதிலும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் ஏற்பட்டு வகிபாகத்தை ஒருங்கிணைக்கின்றது.

கோவிட்- 19 தொற்று அல்லது வீசா காலாவதியானதன் காரணமாக, தொழிலை இழந்ததன் காரணமாக இலங்கை புலம்பெயர் வேலையாட்கள் திரும்புவதற்கு வெளிநாட்டு அமைச்சு மற்றும் கோவிட்-19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய தொழிற்பாட்டு நிலையம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில், நாடு திரும்பிய 571 பேருக்கு கிழமையொன்றுக்கு சுமார் 18 மில்லியன் செலவுற்று தனிமைப்படுத்தலுக்காக 10 ஹொட்டல்களை இலவசமாக வழங்குவதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 2.1.4 சமூகப் பாதுகாப்பு முறைமையை அறிமுகப்படுத்துதல்

தற்போது நாட்டில் பல சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் உள்ளன. ஆனால் கோவிட்-19 தொற்றுநோய், இயற்கை பேரழிவுகள் அல்லது பேரழிவுகள் போன்ற நெருக்கடியின்போது பணியாளர்களின் தேவைகளை அவர்களால் பூர்த்திசெய்யமுடியவில்லை. இந்தப் பின்னணியில், சமூகப் பாதுகாப்புக்காக தனியொரு நிதியத்தை நிறுவுவதற்கான பல்வேறு வழிமுறைகளை ஆராய்வதும், எதிர்மறையான தாக்கங்களைக் குறைப்பதற்கான வெவ்வேறு சூழ்நிலைகளின் அடிப்படையில் பங்களிப்புகளைச் செய்வதற்கான வழி, வகைகளை ஆராய்வதும் சரியான நேரத்தின் தேவையாகும். மேலும் 60% பணியாளர்கள் முறைசாரா துறையில் பணிபுரிகின்றனர். மேலும் அவர்களை சமூகப் பாதுகாப்பு அமைப்பு என்ற சபையின் கீழ் கொண்டு வருவது மற்றொரு சவாலாகும். ஆகவே, எதிர்பாராத சூழ்நிலைகளில் தங்களது வேலையை இழக்கின்ற பணியாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு சமூகப் பாதுகாப்பு நிதியமொன்றை தாபிப்பது அவசியமாகும்.

இந்த விடயத்தை ஆராய்ந்து, முன்மொழி வொன்றினை சமர்ப்பிப்பதற்கு உப குழுவொன்றை தேசிய தொழில் ஆலோசனை நியமித்துள்ளது. உப குழுவின் பரிந்துரைக்கமைவாக, இந்த விடயத்தை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேலும் மேற் கொள்ளப்படும்.

### 2.1.5 தொழில் சட்டங்களில் தற்போதிருக்கின்ற முரண்பாடுகளை இல்லாதொழித்தல்

ஓட்டுமொத்த இலங்கை தொழில் அணியையும் பொருளாதாரத்தின் பங்காளிகளாக்கும் நோக்கத்துடன் தற்போது தொழில் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அனைத்து சட்டங்களையும், ஒழுங்குவிதிகளையும் மீளாய்வு செய்வதற்கும், அவற்றை எளிதாக்குவதற்கு சட்டங்களில் தற்போதுள்ள முரண்பாடுகளையும், சிக்கல்களையும் நீக்குவதற்கும், திருத்தங் களைக் கொண்டுவருவதற்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திருத்தங்கள் 2022 ஆம் ஆண்டில் நிறைவுசெய்யப்படுமென்று எதிர்பார்க்கின்றார்கள்.

### 2.1.6 தொழில் திணைக்களத்தின் சேவைகளை வழங்குவதற்கு டிஜிற்ரல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்


தற்போது ஊ.சே. நிதியத்தின் செயற்பாடுகளுக்கு தானியங்கி அமைப்பு பயன்படுத்துகின்றது. அனுகூலங்களுக்கு விண்ணப்பிப்பதிலிருந்து கொடுப்பனவுகளைச் செய்தல் வரையான அனைத்துச் செயற்பாடுகளுக்கும் டிஜிற்ரல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், சாத்தியமான அனைத்து பிற நடவடிக்கைளும் டிஜிற்ரல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, ஒரே இடத்தில் அனைத்து சேவைகளையும் வழங்கும் மையமொன்றைத் தாபிப்பதற்கு கணினி வலயமைப்பொன்று அட்டவணைப்படுத்தப்படுகின்றது. அதேபோன்று, பணியாளர்கள் தமது முறைப்பாடுகளை தொழில் அலுவலகங்களுக்கு நேரடியாகச் செல்லாது கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி தொழில் திணைக்களத்தில் முறைப்பாடுகளை பதிவுசெய்வதற்கு ஏதுவாக முறைப்பாடு முகாமைத்துவ முறைமையொன்று அறிமுகப் படுத்தப்படவுள்ளது

### 2.1.7 நியம தொழிற்பாட்டு நடவடிக்கைமுறையொன்றை அறிமுகப்படுத்துதல்

அனைத்து தொழில் அலுவலகங்களிலுமுள்ள தொழில் பிணக்குகளின் தீர்வினை இணைப் பதற்காகவும், பிணக்குகளைத் தீர்ப்பதற்கான செயல்முறைகளை விரைவுபடுத்துவதற்கும் தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான நியம தொழிற்பாட்டு நடவடிக்கைமுறையொன்று வகுத்தமைக்கப்பட்டிருந்ததுடன், இந்த நியம தொழிற்பாட்டு நடவடிக்கைமுறையை தொழிற்படுத்தி பிணக்குக்கான தீர்வினை விரைவாக நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2.1.8 புதிய சவால்கள்

கோவிட்-19 தொற்றுக்கு மற்றும் நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கையில், இந்த அமைச்சின் தொழிற்பாடுகளின் வழிகாட்டல் புதிய வடிவமொன்றை எடுக்க வேண்டியிருக்கின்றது. பொருளாதார நெருக்கடி காரணமாகவும் மற்றும் நாட்டில் தொழில் அமைதியைப் பேணுவதற்கும் உழைக்கும் வர்க்கத்தின் மீதான பாதகமான தாக்கத்தைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கை இந்த அமைச்சினால் எடுக்கப்படுதல் வேண்டும்.



**எம் பி டீ யூ கே மாபா பத்திரண**
முன்னாள் செயலாளர்
தொழில் அமைச்சு

## 2.2 அமைச்சினது முன்னேற்றம்

### 2.2.1 தொழில் அணியைப் பலப்படுத்துதல் மற்றும் சர்வதேச தொழில் நியமங்களைப் பேணுதல்

சர்வதேச தொழில் தாபனத்தின் உறுப்பு நாடொன்றாக பெறுப்பேற்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய சமவாயங்களுக்கும், விதப்புரைகளுக்கும் அமைவாக தொழில் உரிமைகளைப் பாதுகாப்பதும், தொழில் துறையிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தொழில் அமைச்சு மற்றும் தொழில் சங்க உறவுகள் சார்பாக அவற்றைப் பயன்படுத்தச் செய்வதும் இந்த அமைச்சின் பொறுப்பாகும்.

இலங்கையானது, சர்வதேச தொழில் தாபனத்தினதும், ஏனைய பல்தரப்பு முகவர்களதும் தொழில் துறை தொடர்பிலுள்ள அதன் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளை, தொழில் கொள்கைகளை வகுத்தமைத்து, தேசிய மட்டத்திலான சமூகக் கலந்துரையாடல்களை உருவாக்கி மற்றும் நாட்டின் தொழிலணியைப் பலப்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் சர்வதேச ஆதரவைப் பதிவிட்டு நிறைவேற்றியுள்ளது என்பது உறுதிப்படுத்துகின்றது. இந்த இலக்குகளை 2021 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டு காலப்பகுதியில் நிறைவுவேற்றுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை கள் பின்வருமாறு.

### 1. தொழில் அணியை வலுப்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்

I. முத்தரப்பு பிரதிநிதித்துவத்துடன் தேசிய தொழில் ஆலோசனை சபையின் ஏற்பாட்டாளராக சேவையாற்றி, 2021 ஆம் ஆண்டில் 06 கூட்டங்களை நடத்தி பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

- தனியார் துறை பணியாளர்களுக்கு ஓய்வூதிய வயதை அறிமுகப்படுத்துவதற்கு இணங்கியமையும், இது தொடர்பில் எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பதற்கு உப குழுவொன்றை நியமித்தமையும்.
- தனியார் துறை பணியாளர்களுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்து வதற்குரிய நடவடிக்கையை எடுப்பதற்காக உப குழுவொன்றை நியமித்தல்.
- தோட்டத் தொழிலாளர்களால் எதிர்கொள்ளப்படுகின்ற பிரச்சினைகளைத் தெரியப்படுத்தும் நோக்கில் இருதரப்பு கலந்துரையாடல்களையும், ஆய்வுகளையும் நடத்துவதற்காக பணியாளர்களையும் தொழில்தருநர்களையும் பிரதிநிதித்துவப்படுத்து கின்ற தொழில் சங்கங்களுக்கு ஆலோசனை வழங்குதல்.
- நடுத்தீர்ப்பு தீர்ப்புகளுக்காக கைத்தொழில் நீதிமன்றங்களின் எழுத்துமூல விண்ணப்பங்கள், மீளாய்வுகள் மற்றும் சவாலுக்குள்ளான கட்டளைகள் மேன்முறை யீடுகளைத் தாக்கல் செய்வதில் வைப்புக்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுவருதல்.
- சட்டத்தரணி அல்லாத பிரதிநிதிகள், தொழில் நியாயாதிக்கசபைகளின் முன் ஆஜராவதற்கான அதிகாரத்தை வழங்குதல், தொழில் நியாயசபைகளின் தலைவர்களுக்கு அவர்கள் தீர்ப்பளிப்பதற்கு / தீர்ப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரங்களை வழங்குதல், ஒழுக்காற்று விசாரணையொன்றை நடத்துவதற்கும், தீர்ப்பை வழங்குவதற்குமான காலவரையறையை விதித்துரைத்தல்.
- நட்டஈட்டுச் சூத்திரத்தின் உச்ச வரம்பை 1.25 மில்லியன் ரூபாவிலிருந்து 2.5 மில்லியன் ரூபாவாக அதிகரித்தல்.
- வேலைத்தல விபத்துக்களுக்காக வேலையாட்களுக்கு வழங்கப்படுகின்ற நட்டஈட்டுத் தொகையை 550,000/-ரூபாவிலிருந்து 2,000,000/- ரூபாவரை அதிகரித்தல்.
- இலங்கையில் தற்போதிருக்கின்ற தொழில் சட்டங்களின் கீழ் பொருத்தமான வகையில் வீட்டு வேலையாட்களுக்கு தேசிய தொழில் ஆலோசனைச்சபையின் உறுப்புரிமையை வழங்குவதற்கான சாத்தியம் பற்றி கலந்துரையாடுதல்.
- வேலை உலகில் வன்முறையினையும், துன்புறுத்தலையும் இல்லாதொழிப்பது பற்றிய சர்வதேச தொழில் தாபன சமவாயம் மீதான சுருக்க அறிக்கையொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.



II. தொழில் துறை தொடர்பான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவது தொடர்பான விடயங்கள், போக்குகள் மற்றும் தேவை பற்றியும் கலந்துரையாடுவதற்கு விசேட குழுவான தொழில் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் மீதான அமைச்சுசார் குழுவின் கூட்டங்களை நடத்துதல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட அனைத்து செயற்பாடுகளையும் ஒழுங்கமைத்தல்.

- கைத்தொழில் பிணக்குகள் சட்டம்
- ஊழியர் சேமலாப நிதியச் சட்டம்
- பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம்
- தொழில் முடிவுறுத்தல் சட்டம்

### 2. சர்வதேச தொழில் நியமங்களைப் பேணுதல்

I. 2021 ஆம் ஆண்டுக்கான 04 சமவாயங்களுக்காக சர்வதேச தொழில் தாபனத்தின் 22 ஆம் இலக்க உறுப்புரையின் கீழ் அறிக்கைகளைத் தயாரித்தல்.

II. ஐரோப்பிய யூனியனின் ஜீ.எஸ்.பீ சலுகைகள் மீளப்பெறுதலுடன் இணைந்துள்ள பிரச்சினைகளைத் தெரிவிப்பதற்குரிய அறிக்கைகளைத் தொகுத்தல் மற்றும் அதிலுள்ள அனைத்து செயற்பாடுகளையும் ஒழுங்குபடுத்துதலும் பங்கு பற்றுதலும்.

III. இலங்கையின் தொழில் துறை தொடர்பான விடயங்களை ஐக்கிய நாடுகள் சபையின் சமகால அடிமை முறை வடிவங்களின் காரணங்கள் மற்றும் விளைவுகள் உள்ளடங்கலாக அவை பற்றி சிறப்பு அறிக்கையாளர் திரு.டொமோயா ஒபோகடா அவர்களுடன் கலந்துரையாடுதல்.

IV. இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்கு மிடையில் தொழில் துறை தொடர்பான சமூகப் பாதுகாப்பு மற்றும் கல்வித் துறைகளில் எதிர்காலத்தில் ஒப்பமிடவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொடர்பான செயற்பாடுகளைக் கையாளுதல் மற்றும் அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களும் நிறைவுபெறும் இறுதிக் கட்டத்திலுள்ளன.

V. இந்த ஆண்டில் நடத்தப்பட்டு பின்பற்றப்பட்ட ஜெனிவாவில் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படுகின்ற சர்வதேச தொழில் தாபன மாநாட்டில் முத்தரப்பு பிரதிநிதிகளின் இணைய வழி மூலம் பங்குபற்றுவதற்கு தேவையான அனைத்து செயற்பாடுகளை ஒருங்கிணைத்தலும், பின்பற்றுதலும். ஏழு நாடுகளின் பிரதிநிதிகள், தொழில்தருநர் ஒருவரின் பிரதிநிதி மற்றும் ஆறு தொழில் சங்கப் பிரதிநிதிகள் இந்த இணையவழி நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.

VI. சர்வதேச தொழில் தாபனத்தால் கைக்கொள்ளப்பட்ட சமவாயங்கள் மற்றும் விதப்புரைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். சீரிய வேலை நாட்டுத் திட்டத்தின் கீழ் செயலணியின் கூட்டங்களை நடத்துவதற்கு ஒழுங்கு களை மேற்கொள்ளுதல் மற்றும் அது தொடர்பில் சர்வதேச தொழில் தாபனத்திற்கு தேவையான ஆதரவை வழங்குதல்.

VII. சர்வதேச தொழில் தாபனத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் நடத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளின் அனைத்து ஒருங்கிணைப்புச் செயற்பாடு களையும் மேற்கொள்ளுதல். மீன்பிடி சமவாயத்தை (ச188) ஏற்று அங்கீகரிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு மீன்பிடி அமைச்சுடன் கலந்துரையாடல்களை நடத்துதல்.

VIII. இலங்கையில் சிறுவரை தொழிலுக்கமர்த்துது பற்றி கவனம் செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல். பிரதான அக்கறைதாரர்களுடன் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டிருந்ததுடன், சிறுவர் தொழில் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளைப் பெறுவதற்கான தேவை இனங்காணப்பட்டிருந்தது.

IX. இலங்கை மத்திய வங்கியால் வருடாந்தம் வெளியிடப்பட்ட 'எக்கோனமிக் ரிவீயூ' மற்றும் 'ஏக்கோனோமிக் அவுட்லுக்' ஆகியவற்றுக்கு உரிய தகவல்களை வழங்குதல் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையுடன் தொடர்புபட்டுள்ள தகவல்களைத் தொகுத்தல்.

X. வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுகளும் பயன்படுத்துவதற்கு தொழில் துறையின் புதிய நடைமுறைப் போக்குகள் பற்றி அறிக்கைகளை தொகுத்தல்.

XI. அரசாங்கத்தால் பெறப்பட்ட பெருந்தோட்ட கம்பனிகளின் வேலையாளர்களுக்கு கிடைக்க வேண்டிய நிலுவையிலுள்ள ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் பற்றி தொழில் திணைக்களம், மத்திய வங்கி மற்றும் தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொழிற்சங்க உறுப்பினர்களுடன் காலாண்டு மீளாய்வுக் கூட்டத்தை ஒழுங்குபடுத்துதல். நிலுவைக் கொடுப்பனவுகளுக்குத் தேவைப்பட்ட நிதிகளை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கும், உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் உரிய நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

XII. வருடாந்தம் சர்வதேச தொழில் தாபனத்திற்கு தெரிவிப்பதற்கு தேவைப்பட்டுள்ள தொழில் புள்ளிவிபரங்கள் பற்றிய கேள்விகளுக்கு பதில்கள் வழங்குதல்.

XIII. தொழில் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளை பார்ப்பதற்கு வீட்டு வேலையாட்கள், காப்புறுதி முகவர்கள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகளின் உரிமையாளர்கள் ஆகியோருடன் கூட்டங்களை நடத்துதல்.

### 2.2.2 வெளிநாட்டு தொழில்வாய்ப்பை மேம்படுத்துவதற்கான கொள்கை வழிகாட்டல்

அரசாங்கத்தால் மற்றும் “சுபிட்சத்தின் நோக்கு” கொள்கைக்கமைவாக நடைமுறைப்படுத் தப்பட்ட தேசிய கொள்கையை அடிப்படையாகக்கொண்டு தேர்ச்சியுள்ள வெளிநாட்டு தொழில் அணியொன்றை உருவாக்குவதற்காக உரிய இராஜாங்க அமைச்சுக்கு கொள்கை வழிகாட்டலை வழங்குதல் 2020.10.06 ஆம் திகதியிடப்பட்ட 2196/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி நியதிகளின்படி இந்த அமைச்சுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள விடயதானங்கள் மற்றும் தொழிற்பாடுகளிலொன்றாகும்.

**1. புலம்பெயர் வேலையாட்களின் சேமநலன் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக வெளிநாட்டு இராஜதந்திரப் பணியகங்களின் தொழில் பிரிவுகளிற்கு உருவாக்கப்பட்டுள்ள பதவிகளுக்கு அலுவலர்களைத் தெரிவுசெய்வதற்கு உரிய முறையொன்றை வகுத்தமைத்தல்**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் இராஜதந்திர பணியகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள அலுவலர்கள், உரிய நாட்டு மொழியினைக் கையாளமுடியாமை, ஆங்கில மொழித் தேர்ச்சியின்மை மற்றும் உருவாக்கப்பட்டுள்ள நியமங்களை உறுதிப்படுத்துவதில் குறித்தொதுக்கப்பட்டுள்ள கடமைகளை பயனுறுதியாகவும், வினைத்திறன் மிக்கதாகவும் ஆற்றுவதற்கு தகைமையின்மை காரணமாக பயனுறுதிவாய்ந்த, வினைத்திறன்மிக்க சேவையை ஆற்றுவதற்கு தவறியுள்ளனர். இந்த நிலைமையிலிருந்து வெளியே வருவதற்காக, புலம்பெயர் வேலையாட்களின் தொழில் தொடர்பாக எழுகின்ற சட்ட, சமூக பிரச்சினைகளுக்கு பயனுள்ள, வினைத்திறன்மிக்க ஏற்பாடுகளுக்கு அமைச்சரவையின் ஒருப்பாட்டுடன் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ஒவ்வொரு நாட்டுக்கும் உரித்தான தற்போதுள்ள பதவிகள் மற்றும் பதவியணியினை மீளாய்ந்து, உரிய வரிசை அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுடன் ஒருங்கிணைந்து ஆட்சேர்ப்பு நடவடிக்கைகைமுறையினை வகுத்தமைத்தல்.
- திருத்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை நியதிகளின்படியும், வெளிப்படையாகவும் பரீட்சைகளை உரிய தருணத்தில் நடத்தி முறையான முறைமையிய லொன்றுக்கமைவாக மட்டுமே உரிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளுதல்.

**2. புலம்பெயர் இலங்கை வேலையாட்களுக்கு காப்புறுதி உரிமங்களை வழங்குதல்**

இலங்கை புலம்பெயர் வேலையாட்களுக்கான அனுகூலங்களை உறுதிப்படுத்தும் நேக்கில் புலம்பெயர் வேலையாட்களுக்கு காப்புறுதி காப்பீடொன்றை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பேணிவருகின்றது. தற்போது, புலம்பெயர் வேலையாளரொருவர் இறக்கின்றபட்சத்தில் ஆகக்கூடிய நட்டஈடாக 600,000/- ரூபாவாக மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. புலம்பெயர் வேலையாளரொருவர் இறக்கின்றபட்சத்தில் அவர்களில் தங்கியிருப்போருக்கு குறைந்தபட்ச நட்டஈடாக 15,000 அமெரிக்க டொலர் உள்ளடங்கலான புதிய காப்புறுதித்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கும், நிரந்தரமான பகுதியளவிலான இயலாமை ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் 3000 முதல் 15,000 வரையான அமெரிக்க டொலர் களுக்கிடைப்பட்ட நட்டஈட்டை வழங்குவதற்கும் ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த முன்மொழியப்பட்ட காப்புறுதித்திட்டத்தில், கடமையான துன்புறுத்தல்கள், கடுமையான நோய்கள், தீவிர விபத்துக்கள் மற்றும் கோவிட்-19 போன்ற அத்தகைய தொற்றுநோய்கள் போன்றவற்றை உள்ளடக்கி ஏற்பாடுகளைக் கூட்டிணைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.



இதற்குமேலதிகமாக, நாட்டைவிட்டு புறப்படுவதற்கு முன்னராக காப்புறுதிக் காப்பீடு பெறப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஆவண சான்றுகளைச் சமர்ப்பிப்பதனைக் கட்டாயப்படுத்துகின்ற நிபந்தனையொன்றை அனுமதி அறிக்கைக்குள் உள்ளடக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்படுத்தல் மற்றும் பல்லின வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சினால் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### 2.2.3 பொருளாதார அபிவிருத்திக்காக தொழிற்றுறை அமைதியைப் பேணுதல்

தொழில் திணைக்களத்தின் தொலைநோக்கு, தொழிற்றுறை அமைதியைப் பேணி, சர்வதேசரீதியில் போட்டித்தன்மையான பொருளாதாரமொன்றுக்காக நிலையான தொழிற்றுறை அமைதியுடன்கூடிய நாடொன்றே **திணைக்களத்தின்** அடிப்படையானதும், மிகவும் முக்கியமான தொழிற்பாடாகும்.

இந்த நோக்கத்திற்காக, திணைக்களம், தொழில்தருநர்களுக்கும் பணியாளர்களுக்கு மிடையில் கலந்துரையாடலைப் பேணுதல், வேலைத்தலங்களைப் பரிசோதித்தல், நியதிச் சட்ட உரிமைகளை மறுப்பது தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல், தொழிற்றுறைப் பிணக்குகளைத் தீர்த்தல், விபத்துக்கள் அற்ற வேலைத்தலங்களை உறுதிப்படுத்துதல் மற்றும் வேலையாட்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்ட நடவடிக்கைகளை உருவாக்குதல் போன்ற பல முக்கிய தொழிற்பாடுகளை ஆற்றுகின்றது.

நாடளாவியரீதியில் பரந்து காணப்படுகின்ற பகுதியளவிலான அரச துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் ஆக்கத்திறனையும் வினைத்திறனையும் ஊக்குவிப்பதற்காக தொழில் தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்கிடையில் தொழிற்றுறை அமைதியை பலப்படுத்தக்கூடிய உகந்த சூழலை உருவாக்குவதற்காக பின்வருகின்ற பணி இலக்குகள் 2021 ஆம் ஆண்டில் ஆற்றப்பட்டிருந்தன.

**1. சாதகமான வேலைச்சுழலை உருவாக்குவதனை இலக்காகக்கொண்ட பகுதியளவிலான அரச துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தினுடாக தொழில் சட்டங்கள் பற்றி தொழில் தருநர்கள் மற்றும் பணியாளர்கள் இருவருக்கும் கற்பிப்பதற்காக முகாமையாளர்கள் மற்றும் தொழில்தருநர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் கீழே அட்டவணை 2-1 இல் காட்டப்பட்டுள்ளவாறு ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டிருந்தன.**

**அட்டவணை 2-1** சமூகக் கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் - 2021

| | நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண். | பங்குபற்றியவர்களின் / பயனாளிகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | பணியாளர்கள் | பணியாளர்கள் |
| 1 | சமூகக் கலந்துரையாடல் பிரிவினால் தொழில்தருநர்களுக்கும், பணியாளர்களுக்கும் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் நிறுவனம்சார் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 31 | 875 | 307 |
| 2 | சமூகக் கலந்துரையாடல் பிரிவினால் பகுதி யளவிலான அரச நிறுவனங்களுக்கு நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | 3 | 150 | 10 |

இதற்கு மேலதிகமாக, தொழில் திணைக்களத்தின் அலுவலர்களுக்காக பயிற்சி வழங்குபவர்களுக்கான இரண்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

**2. தொழில்துறை பற்றிய மக்களின் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக வெளியிடப்பட்ட வெளியீடுகள்.**

- **‘கத்திகாவ’ செய்தி நாளேடு**

யூன் 12 ஆம் திகதி வருகின்ற சிறுவர் தொழிலுக்கு எதிரான உலக தினத்திற்கும் மற்றும் சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான சர்வதேச ஆண்டு 2021 இற்கும் இசைவாக ‘கத்திகாவ’ செய்தி நாளேட்டின் 20 ஆவது தொகுதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருந்தது.

- **சஞ்சிகையின் பிரதான பணி**

இந்த சஞ்சிகையின் முதலாவது தொகுதி, தொழில் சட்டங்கள் பற்றிய அறிவினை விரிவுபடுத்து வதன் மூலம் தொழிற்றுறை அமைதியைப் பேணுகின்ற மற்றும் தொழில் தருநர்களுக்கும், பணியாளர்களுக்கு மிடையில் கலந்துரையாடலைப் பேணுகின்ற உத்தேசத்துடன் இலவச விநியோகத்திற்காக அச்சிடப்பட்டிருந்ததுடன், 2021 யூன் மாதத்தில் ‘Navigating Conflicts’ என்ற கருப்பொருளின் கீழும் மற்றும் இரண்டாவது தொகுதி, 2021

டிசெம்பர் மாதத்தில் 'Work-Life Balance' என்ற கருப்பொருளின் கீழும் பணியாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது.

- **சமூகக் கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்ட கைநூல்கள் மற்றும் தொழில் சட்டவாக்க கைநூல்கள்**

தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறைகளின் தொழில்தருநர்களுக்கான, தொழில் சட்ட துறையில் மற்றும் தொழில் சட்டங்கள் பற்றிய கற்கைகளை பொறுப்பேற்றுள்ள கல்வி நிறுவகங்களில் ஆர்வமுள்ள பணியாளர்களுக்கான உசாவுகை சாதனங்களாக தொழில் சட்டங்களின் இலகுபடுத்தப்பட்டுள்ள பதிப்பொன்றுக்கான தேவையை நிறைவேற்று வதற்காக தொழில் சட்டவாக்க கைநூல் தொகுக்கப்பட்டிருந்ததுடன், சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவு பற்றிய கை நுலொன்றும் தயாரிக்கப்பட்டிருந்தது.


நாட்டில் நிலவியிருந்த கோவிட்-19 நிலைமை காரணமாக, வலய தொழில் அலுவலகங்கள், மாவட்ட தொழில் அலுவலகங்கள் மற்றும் உப தொழில் அலுவலகங்களால் நடத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், சமூக அடித்தள நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வலய ஆலோசனைச் சபைகள் ஆகியவற்றை நடத்த முடியவில்லை.

நிறுவனங்களுக்குள் சமூகக் கலந்துரையாடல் தாபிக்கப்பட்டுள்ள அளவினை மதிப்பிடுவதற்கு உற்பத்தி, சேவை, ஆடை மற்றும் பெருந்தோட்டத்துறைகளிலிருந்தான பிரதிநித்துவத்துடன் சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவில் சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவு மீதான போட்டியொன்று நாடளாவியரீதியில் வருடாந்தம் நடத்தப்படுகின்றது. இருப்பினும், கோவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக இந்த ஆண்டில் இந்தப் போட்டியை நடத்துவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

### 3. வேலைத்தல பரிசோதனைகளை நடத்துதல்

வேலைத்தல பரிசோதனைகளை நடத்துவதன் பிரதான குறிக்கோள், வேலைத்தலத்தில் வேலையாட்களின் நியதிச்சட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கி ஒழுகப்படுகின்றதா என்பதைப் பரிசோதிப்பதும், துயரங்களைத் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதும் மற்றும் தொழில்தருநர்களுக்கும் பணியாளர்களுக்குமிடையிலான நெருங்கிய உறவினைத் தாபிப்பதற்கான வழியை அமைத்துக் கொடுப்பதுவுமாகும். இத்தொழிற்பாட்டை ஆற்றுவதற்கு நாடளாவியரீதியில் உள்ளடக்கிய 11 பிராந்திய தொழில் அலுவலகங்கள், 40 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 17 உப அலுவலகங் கள் அத்துடன் 10 மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகங்கள் நாடளாவியரீதியில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், தலைமை அலுவலகங்களின் பிரிவுகளை உள்ளடக்கியுள்ள திணைக்களத்தின் கீழ் பணியிலீடுபடுத்தப்பட்டுள்ள தொழில் அலுவலகங்களின் எண்ணிக்கை 2021.12.31 இல் 474 ஆகும். பெறப்பட்டுள்ள தகவல்களின்படி, 2021 ஆம் ஆண்டில் தொழில் அலுவலகங்களினால் ஆற்றப்பட்ட தொழில் பரிசோதனைகளின் மொத்த எண்ணிக்கை 45,724 ஆகவிருந்தது.

**தொழில் பரிசோதனைகள் - 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆண்டிலுள்ள முன்னேற்றம்**




**வரைபடம் 2-1** தொழில் பரிசோதனைகள் - 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 இலுள்ள முன்னேற்றம்




2021 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பீடுகையில் சரிவொன்றினைக் காட்டிநிற்கின்றது. இது, 2021 ஆம் ஆண்டில் கோவிட்-19 தொற்று காரணமாக தொழில் பரிசோதனைகள் சில மாதங்கள் முழுமையாக நிறுத்தப்பட்டமையும், பரிசோதனைகள் மீது விதிக்கப்பட்ட மட்டுப்படுத்தல்கள் காரணமாக ஏற்பட்டதாகும்.

### 4. நியதிச்சட்ட உரித்துக்களை மறுப்பது மீதான முறைப்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் தொழிற்றுறைப் பிணக்குகளைத் தீர்த்தல்

நியதிச்சட்ட சட்டங்களை மீறியதன் பேரில், வேண்டுமென்றே தொழிற்றுறை அமைதியை மீறியதன் பேரில் பெறப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் பணியாளர்களாலும் ஏனைய பல்வேறு தரப்புகளாலும் தலைமை அலுவலகம், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் உப அலுவலகங்களில் தாக்கல் செய்யப்படுகின்ற பணிப்பகிஷ்கரிப்புக்கான சாத்தியம் மற்றும் அத்தகைய முறைப்பாடு களைத் தீர்ப்பதற்கு உரிய அலுவலர்களால் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள். அவர்களது முயற்சி தோல்வியுற்றால், விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் கட்டளையின் பேரில் தீர்வுக்காக பிணக்கு நடுத்தீர்ப்பாளருக்கு அல்லது கைத்தொழில் நீதிமன்றத்துக்கு அனுப்பப்படு கின்றது.

2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் நியதிச்சட்ட சட்டங்களை மீறியதன்பேரில் பெறப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் வழங்கப்பட்ட தீர்வுகள் பின்வருமாறு.

**2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 2021 ஆம் ஆண்டில் நியதிச் சட்டங்களை மீறியமை பற்றி பெறப்பட்ட மற்றும் தீர்க்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட கைத்தொழில் பிணக்குகள்**




**வரைபு 2-2** 2020 உடன் ஒப்பிடுமிடத்து 2021 ஆம் ஆண்டில் நியதிச்சட்ட உரித்துக்களை மீறியதன்பேரில் பெறப்பட்ட முறைப்பாடுகளைத் தீர்த்தலும் மற்றும் கைத்தொழில் பிணக்குகளுக்கு வழங்கப்பட்ட தீர்வுகளும்

2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை கோவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக ஒப்பீட்டுரீதியில் குறைவாக இருந்துள்ளமை அவதானிக்கப்படுகின்றது.

பணிப்பகிஷ்கரிப்பு நிலைமைக்கு செல்லக்கூடிய சாத்தியங்கள் அவதானிக்கப்படும்போது, திணைக்களத்தின் அலுவலர்கள், நிலைமையைக் கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுப்பதுடன், பணிப்பகிஷ்கரிப்பு இடம்பெற்றால், பிணக்கினைத் தீர்ப்பதற்கு தேவையான தலையீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, 2021 ஆம் ஆண்டில் பணிப்பகிஷ்கரிப்பின் எண்ணிக்கையில் சிறிதளவு சரிவு காணப்படுகின்றது. இழக்கப்பட்ட மனித உழைப்பு நாட்களில் அதிகரிப்பொன்றுள்ளது.

| அட்டவணை 2-2 | 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 2021 ஆம் ஆண்டில் பணிப்பகிஷ்கரிப்புப் பற்றி அறிக்கையிடப்பட்ட தரவு |
|---|---|

| தொ.இ | நிகழ்வு | பெருந்தோட்டங்கள் | நிருமாணம் | உற்பத்தி | சுரங்கம் | தங்குமிடம் மற்றும் உணவினை வழங்குதல் | பகுதியளவிலான அரசாங்க துறை | ஏனைய சேவைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2020 | அறிக்கையிடப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு | 13 | - | 12 | - | 2 | - | 1 | **28** |
| | பங்குபற்றிய பணியாளர்களின் எண்ணிக்கை | 1,936 | - | 4,040 | - | 64 | - | 85 | **6,125** |
| | இழக்கப்பட்ட உழைப்பு நாள் | 9,375 | - | 12,806 | - | 324 | - | 85 | **22,590** |
| 2021 | அறிக்கையிடப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு | 05 | - | 12 | - | - | - | - | **17** |
| | பங்குபற்றிய பணியாளர்களின் எண்ணிக்கை | 848 | - | 5,872 | - | - | - | - | **6,720** |
| | இழக்கப்பட்ட உழைப்பு நாள் | 3,705 | - | 105,067 | - | - | - | - | **108,772** |

கைத்தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான வழிகளாக கூட்டு ஒப்பந்தங்களுக்குச் சென்றால், தொழில்தருநர் மற்றும் பணியாளர்கள் ஆகிய இருவருக்கும் அதிகளவு நிரந்தர தீர்வு வழங்கப்படுவதுடன், அவை, தொழில் சட்டவாக்கங்களினூடாக வழங்கப்பட்ட உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளிலும் பார்க்க அதிக சிறப்புரிமைகளை பணியாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கின்றன. மேலும், கடந்த சில ஆண்டுகளாக கூட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கையில் படிப்படியான வீழ்ச்சி காணப்படுவதனால், சமூகக் கலந்துரையாடல் மூலம் கூட்டு ஒப்பந்தத்திற்குச் செல்வதனூடாக சிறந்த சூழலை உருவாக்குவதற்கு திணைக்களம் முயற்சிக் கின்றது. 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 25 கூட்டு ஒப்பந்தங்கள் உள்ளடங்கலாக 2021.12.31 இல் நடைமுறையிலுள்ள மொத்த கூட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 171 ஆகும்.

தொழில் அலுவலகங்களின் தலையீட்டால் மற்றும் தொழிற்றுறை தொடர்புகள் பிரிவின் நேரடி ஈடுபாட்டினால் தீர்க்கமுடியாத பிணக்குகள் கைத்தொழில் நீதிமன்றமொன்றின் நடுத்தீர்ப்புக்கு அனுப்பப்படுவதுடன், 2021 ஆம் ஆண்டில் 73 பிணக்குகள் நடுத்தீர்ப்புக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், 49 இற்கு தீர்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன. நடுத்தீர்ப்புகூறும் செயல்முறையை மேலும் வினைத்திறனுடையதாக்கும் நோக்கில், 2021 ஆம் ஆண்டில் 86 நடுத்தீர்ப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

ஒவ்வொரு தொழிற்சங்கத்தையும் தொழில் திணைக்களத்தில் பதிவு செய்வது கட்டாயமான தாகும். இதன்படி, 2020 ஆம் ஆண்டில் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 128 என்பதுடன், 2021.12.31 இலுள்ளவாறு தொழிற்படுகின்ற தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 1936 ஆகும்.

### 2.2.4. விசேட விசாரணைகள்

சாதாரண நடைமுறையின் மற்றும் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் கீழ் மேற் கொள்ளப்படுகின்ற தொழில் பரிசோதனைகளுக்கு மேலதிகமாக, நிறுவனமொன்றில் முறைப்பா டொன்று தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளில் அல்லது விசாரணையை நடத்திய முறையில் திருப்தியில்லாத ஏதேனும் தரப்பு, மீண்டும் விசாரணையை நடத்துமாறு தொழில் ஆணையாளர் அதிபதிக்கு வேண்டுகோள் விடுக்க முடியும் என்பதுடன், அத்தகைய விசாரணைகள், திணைக்களத்தின் விசேட புலன்விசாரணைப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன்படி, 422 அலுவலக மற்றும் தள விசாரணைகள் 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடத்தப்பட்டுள்ளதுடன், ஊழியர் சேமலாப நிதியத்துக்கான உதவு தொகை



நிலுவை விசாரணையில் 21,782,992.58 ரூபாவாக கணிக்கப்பட்டிருந்ததுடன், நியதிச்சட்டப் படிக் கொடுப்பனவின் பெறுமதி 14,061,361.23 ரூபாவாகும்.

### 2.2.5 தொழில் நியமங்களை பாதுகாத்தலும் மேம்படுத்துதலும்

தனியார் துறையால் பணிக்கமர்த்தப்பட்டுள்ள பணியாளர்களின் சேமநலனையும், தொழில் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தும் நோக்கில் கொள்கைகள், வேலை நியமங்கள் மற்றும் நிபந்தனைகளை வகுத்தமைத்தல், இற்றைப்படுத்துதல் மற்றும் அவற்றுக்கு சட்ட வலுவளித்தல் திணைக்களத்தின் மிகவும் முக்கியமான செயன்முறையொன்றாகும். இதன்படி, 2021 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| அட்டவணை 2-3 | வேலையாட்களின் உரிமைகளை அங்கீகரிப்பது தொடர்பான செயற்பாடுகள் -2021 |
|---|---|

| தொ. இல | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | 2021 ஆம் ஆண்டுக்கான இலக்குகள் | | 2021.01.01 முதல் 2021.12.31வரையான முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | பௌதீகம் | நிதி ரூபா | பௌதீகம் | நிதி ரூபா |
| 1 | அலுவலக காலம் நிறைவடைந்த 05 சம்பளச் சபைகளின் பிரதிநிதி களை நியமித்தல். | 100% | 250,000.00 | 90% | 183,421.80 |
| 2 | தேசிய குறைந்தபட்டச சம்பளச் சட்டத்தைத் திருத்துவதனைத் தொடர்ந்து 40 சம்பளச் சபைகளைக் கூட்டுதல். | 100% | 12,600,000.00 | 35% | 1,082,429.10 |
| 3 | சம்பளச் சபைகளின் சம்பளங்களை மீளாய்தல்<br>இறப்பர் வளர்ப்பு மற்றும் இறப்பர் பதப்படுத்தும் தொழில்<br>தேயிலை வளர்ப்பு மற்றும் இறப்பர் பதப்படுத்தும் தொழில்.<br>அலங்காரத் தாவரங்கள், மரக்கறிகள் மற்றும் பழப் பயிர்ச் செய்கை மற்றும் ஏற்றுமதித் வர்த்தகம். | 100% | 600,000.00 | 100% | 473,282.80 |
| 4 | கொக்கோ, ஏலக்காய் மற்றும் மிளகு பயிர்ச்செய்கை மற்றும் பதப்படுத்தல் தொழில் தொடர்பான வேதனங்களைக் கணித்தல். | 100% | 312,000.00 | 92% | 391,278.60 |
| 5 | ஐந்து நாள் வேலை வாரத்திற்கு அனுமதியளித்தல். | வேண்டுகோளின் பேரில் | - | 210 | - |
| 6 | கூட்டு ஒப்பந்தங்கள் சட்ட ரீதியாக செல்லுபடியாகும் தன்மையைப் பரிசோதித்தல். | வேண்டுகோளின் பேரில் | - | 35 | - |
| 7 | சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அத்துடன், கடைகள் மற்றும் அலுவலக பணியாளர்கள் சட்டத்தின் கீழ் சம்பளங்களிலிருந்து கழிப்பனவுகளுக்கு அனுமதியளித்தல். | வேண்டுகோளின் பேரில் | - | 29 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | திணைக்களத்தின் இணையத் தளத்திற்கு தரவேற்றம் செய் வதற்காக இப்பிரிவினால் வெளியிடப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கான வர்த்தமானிகள், திருத்தங்களின் மென் பிரதிகளை அனுப்பியமை. | தேவைப்பாடு களுக்கமைவாக | - | 3 | - |
| 9 | சம்பளச் சபைகளின் முடிபுகளை ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி களுக்கு மொழிபெயர்த்தல். | 100% | 120,000.00 | 60% | 13,357.50 |
| 10 | சட்டங்கள், சட்டவாக்கங்கள் தொடர்பாக பொது மக்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களால் மேற் கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு தெளிவு படுத்தல்களையும், உரை பெயர்ப்புகளையும் வழங்குதல். | வேண்டுகோளின் பேரில் | - | 39 | - |

## சம்பளச் சபைகளின் குறைந்தபட்ச வேதனங்களை இற்றைப்படுத்துதல்

தொழில்களிலுள்ள பணியாளர்களின் சம்பளங்கள் மற்றும் ஏனைய ஊதியங்களை ஒழுங்கு படுத்துதல், சம்பளச் சபைகளைத் தாபித்தலும் உருவாக்குதலும் மற்றும் அதனுடன் தொடர்பு பட்டுள்ள ஏனைய நோக்கங்களும் 1947 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த கட்டளைச்சட்டம், குறித்த சேவைகளுக்குச் செலுத்தக்கூடிய குறைந்தபட்ட சம்பளம், பணியாற்ற வேண்டிய மணித்தியாலங்களின் எண்ணிக்கை, லீவுக் காலப்பகுதி ஆகியவற்றுடன் தொடர்புபடுகின்ற ஏற்பாடுகளையும், அத்தகைய ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான சட்ட நிபந்தனைகளையும் உள்ளடக்கியிருக்கின்றது.

இதன்படி, சம்பளச் சபைகளின் குறைந்தபட்ச சம்பளமாக 12,500/- ரூபாவினை குறைந்தபட்ச மாதாந்த வேதனமாகவும், 500/- ரூபாவினை குறைந்தபட்ச நாட் கூலியாகவும் இற்றைப்படுத்தலை தொழில் திணைக்களம் 2021 ஆம் ஆண்டில் மேற்கொண்டிருந்தது. திணைக்களமானது, குறைந்தபட்ச மாதாந்த வேதனம் 12,500/- ரூபாவினையும், குறைந்தபட்ச நாட் கூலி 500/- ரூபாவினையும் கொண்டுள்ள சம்பளச் சபைகளின் குறைந்தபட்ச வேதனங்களை இற்றைப்படுத்தியுள்ளது.

**அட்டவணை 2-4** குறைந்தபட்ச சம்பளத்தை இற்றைப்படுத்துகின்ற சம்பளச்சபைகள்

| தொ.இ | சம்பளச் சபைகள் | மாதாந்த சம்பளத்தை இற்றைப்படுத்துவதற்கு முன்னரான மாதாந்த சம்பளம் (அடிப்படை வேதனம்) | மாதாந்த சம்பளத்தை இற்றைப்படுத்தியதன் பின்னரான மாதாந்த சம்பளம் (அடிப்படை வேதனம்) |
|---|---|---|---|
| 1 | இறப்பர், பிளாஸ்டிக், பெற்றோலிய பிசின் உற்பத்தி பொருட்கள் உற்பத்தித் தொழில் | 10,000.00 | 12,500.00 |
| 2 | பாதுகாப்பு சேவைகள் தொழில் | 10,000.00 | 12,500.00 |
| 3 | புடைவை உற்பத்தித் தொழில் | 10,000.00 | 12,500.00 |
| 4 | அச்சிடல் தொழில் | 10,000.00 | 12,500.00 |
| 5 | ஹோட்டல் மற்றும் உணவு விநியோகத் தொழில் | 10,000.00 | 12,500.00 |
| 6 | சில்லறை மற்றும் மொத்த விற்பனைத் தொழில் | 11,500.00 | 12,500.00 |
| 7 | செங்கல் மற்றும் ஓடு உற்பத்தித் தொழில் | 11,126.00 | 13,351.00<br>534.00* |
| 8 | தென்னை உற்பத்தித் தொழில் | 425.00* | 500.00* |
| 9 | தேயிலை வளர்ப்பு மற்றும் பதப்படுத்தல் தொழில் | 405.00* | 900.00* |
| 10 | இறப்பர் வளர்ப்பு மற்றும் இறப்பர் உற்பத்தித் தொழில் | 405.00* | 900.00* |

குறிப்பு -* நாட் சம்பளம்

### 2.2.6. பணியாளர்களின் தொழில்சார் பாதுகாப்புக்கான சீரிய வேலைச் சூழலை உறுதிப்படுத்துதல்

#### 1. தொழில்சார் சுகாதாரத்தை உறுதிப்படுத்துவதற்காக தொழில் திணைக்களத்தால் மேற் கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, பணியாளர்களின் சுகாதாரத்தையும், தொழில்சார் பாதுகாப்பையும் பாதுகாப்பதற்கான சூழலொன்றை உருவாக்குதல் வேலையாளின் அடிப்படை உரிமையொன்றாகும்.

#### I. வேலைத்தலங்களில் தொழில்சார் சுகாதாரம் தொடர்பில் பரிசோதித்தல்

திணைக்களமானது, வேலைத்தலமொன்றில் சுகாதாரப் பிரச்சினைகள் அல்லது விபத்துக்களுக்கு சாத்தியமுள்ளதா என்பதை மதிப்பிடுவதற்கு விஞ்ஞான முறையில் பரிசோதனைகளை நடத்துவதுடன், அத்தகைய விபத்துக்களைத் தடுப்பதற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துகின்றது.

இதன்படி, திணைக்களம், சுற்றுச் சூழலின் தரத்தை மேற்பார்வையிடுதல், பௌதீகம்சார் மேற்பார்வையிடுதல், சத்தத்தை அளவிடும் பரிசோதனை மற்றும் வேலைத்தலமொன்றில் ஏற்படக் கூடிய சுகாதாரப் பிரச்சினைகள் அல்லது விபத்துகக்களுக்கான சாத்தியம் பற்றி பரிசீலிப்பதற்கு இலவசமாக தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆய்வுகள் போன்றவற்றை நடத்துகின்றது. இதன்படி, 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பின்வருகின்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன.

**அட்டவணை 2-5** வேலைத்தலங்களில் தொழில்சார் சுகாதாரத்தை பரிசோதிப்பதற்காக நடத்தப்பட்ட செயற்பாடுகள் - 2021

| | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | சூழல்சார் அளவீடுகள் | 86 |
| 2 | உயிரியல் பரிசோதனைகள் | 1,475 |
| 3 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆய்வுகள் | 150 |

சுற்றுச் சூழல் அளவீடுகளின் மாதிரிகள், ஒளியின் தீவிரம், ஒலி, காற்றின் வேகம், WBGT சுட்டி, உலர் மின்குமிழின் வெப்பநிலை, ஈர மின்குமிழின் வெப்பநிலை, பூகோள வெப்பநிலை, ஒப்பீட்டு ஈரப்பதம் போன்ற அத்தகைய அளவீடுகளின் கீழ் பெறப்படுவதுடன், 2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை 3562 ஆகும்.

#### II. வேலைத்தலங்களில் தொழில்சார் சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்குத் தேவைப்பட்ட அறிவினை வழங்குதலும், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதலும்

வேலைத்தலத்தில் பணியாளர்களின் சுகாதாரம்

மற்றும் தொழில்சார் பாதுகாப்பு தொடர்பாக தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்கள் இருவரையும் உள்ளடக்கி விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. திணைக்களத்தால் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் ஒட்டுமொத்த பயனாளிகளின் எண்ணிக்கை 2041 ஆகும். கோவிட்-19 சுகாதார வழிகாட்டல்களுக்கு இசைவாக பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, தொழில்தருநர்களின், பணியாளர் களின் தொழில்சார் சுகாதார இணக்கமின்றி உற்பத்திச் செயற்பாடுகளை தொடர்வதற்கு தேவைப்பட்டிருந்த வழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருந்தது

**அட்டவணை 2-6** வேலைத்தலங்களில் சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கு தேவைப்படுத்தப்பட்ட அறிவினை ஏற்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்-2021

| | நிகழ்ச்சித்திட்டங்கள் / செயற்பாடுகள் | நிகழ்ச்சித்திட்டங்களின் / செயற்பாடுகளின் எண். |
|---|---|---|
| 1 | விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| | தொழில்தருநர்கள், பணியாளர்கள், தொழில் அலுவலர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்கான கல்வி நிகழ்ச்சித்திட்டம் | 67 |
| 2 | தொழில்தருநர்கள், பணியாளர்கள், தொழில் அலுவலர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 57 |
| | தொழில்தருநர்கள், பணியாளர்கள், தொழில் அலுவலர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 100 |
| 3 | நிபுணத்துவ சான்றுகளை வழங்குதல் | 10 |

## III. மருத்துவ சபை முடிவுகளை வழங்குதல்

மருத்துவ காரணங்களின் பேரில் ஊழியர் சேமலாப நிதியத்திடமும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்தும் அனுகூலங்களைக் கோரியுள்ள பணியாளர்களுக்கு 2021 ஆம் ஆண்டில் பதினொரு மருத்துவ சபைகளை நடத்தப்பட்டு, முடிவுகள் வழங்கப்பட்டிருந்தன. மருத்துவ சபை முடிவுகளின் அடிப்படையில் ஊழியர் சேமலாப நிதியத்திடமிருந்து அனுகூலங்களைப் பெற்றுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 850 என்பதுடன், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து அனுகூலங்களைப் பெற்றுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 240 ஆகும்.

## IV. விபத்துக்களற்ற வேலைச் சூழலை உறுதிப்படுத்துதல்

மின்சாரம், வெப்பம், காற்றமுக்கம், மிதமிஞ்சிய வெளிச்சம் அல்லது சத்தம் போன்றவை காரணமாக தொழிற்சாலைகளில் வேலையாட்களுக்கு ஏற்படுகின்ற உடற் காயங்கள் மற்றும் மரணங்களின் அபாயம் மற்றும் அத்தகைய விபத்துக்களைக் குறைத்தல் திணைக்களத்தின் முதன்மையான பொறுப்புகளிலொன்றாகும்.

இந்த தொழிற்பாட்டை ஆற்றுவதற்காக நாடளாவியரீதியில் தொழிற்சாலைகளை பரிசோதிப்பதற்காக 10 மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியல் அலுவலகங்களுக்கு பொறியியலாளர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

- **புதிய தொழிற்சாலைகளைப் பதிவுசெய்தல்**

புதிய தொழிற்சாலைகள் உருவாக்கப்படுகையில் அல்லது தொழிற்சாலைகளைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கப்படுகையில் தேவைப் படுத்தப்பட்ட தரங்கள் கைக்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதை தெளிவுபடுத்துவதற்கு பரிசோதனைகள் மேற் கொள்ளப்படுவதுடன், தேவைப்பட்டால், தேவையான சரிப்படுத்தல்களை ஏற்படுத்துவதற்கு மேலும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. தேவைப்பட்ட தரங்கள் மற்றும் விபரிப்புகள் உரிய முறையில் பின்பற்றப்பட்டுள்ளனவென்றால் பதிவு மேற்கொள்ளப்படு கின்றது. 2021 ஆம் ஆண்டளவில் தொழில் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 32,414 ஆகும். ஆய்வாண்டு காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 684 புதிய தொழிற்சாலைகளும் இந்த எண்ணிக்கைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.



- **கட்டட வரைபடங்களை பரிசோதித்தலும், அனுமதி வழங்குதலும்**

தொழிற்சாலைக் கட்டடங்களுக்காக நிருமாண வேலைகள் மேற்கொள்ளப்படுகின்ற போது, அவை தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்துடன் இணங்கும் வகையில் உள்ளனவா என்பதை பரிசோதனைகள் தெளிவுபடுத்தி, அதன்படி தேவையான சான்றுப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே, 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 133 கட்டட வரைபடங்கள் பரிசோதிக்கப்பட்டு, சான்றுப்படுத்தப்பட்டுள்ளன.

- **தொழிற்சாலைகளைப் பரிசோதித்தல்**

உரிய பிரதேசத்திற்குள் அமைந்துள்ள தொழிற்சாலைகளைப் பரிசோதிப்பதற்கும், விபத்துக்கள் ஏற்படுவதற்கு ஏதேனும் நிலைமைகள் இருந்தால் சரிசெய்வதற்கும் உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருப்பதுடன், இதன்படி, 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 1587 தொழிற்சாலைகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

- **விபத்துக்கள் மற்றும் தீங்கிளைக்கின்ற சம்பவங்கள் பற்றி விசாரித்தல்**

2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 63 உயிராபத்தை ஏற்படுத்திய விபத்துக்களும் 1,130 உயிராபத்தை ஏற்படுத்தாத விபத்துக்களும் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளன. விபத்துகளுக்கான காரணங்களை இனங்காணுகையில் உயிராபத்தை ஏற்படுத்திய அத்தகைய அனைத்து விபத்துக்களின் விசாரணைகளைத் தொடர்ந்து அத்தகைய விபத்துக்கள் மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதற்கு விழிப்புணர்வு எற்படுத்தப் பட்டதுடன், தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டங்களை மீறியுள்ள விபத்துக்களுக்காக 26 நிறுவனங்களுக்கெதிராக 2021 ஆம் ஆண்டில் திணைக்களத்தால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

- **அதிக ஆபத்துள்ள இயந்திரங்களைப் பரிசோதிப்பதனை ஒழுங்குபடுத்துதல் / பரிசோதித்தல்**

பரிசோதனை அறிக்கைகள் பெறப்பட வேண்டிய நீராவி கொதிகலன்கள், நீராவி பெறுகைகள், காற்று பெறுகைகள், ஏற்றிகள், உயர்த்திகள் உள்ளடங்கலாக தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகின்ற அதிக ஆபத்துள்ள பொறித்தொகுதிகளைப் பரிசோதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதன்படி, 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 7,405 பரிசோதனைகள் நடத்தப்பட்டிருந்தன.

- **முறைப்பாடுகளை விசாரித்தல்**

தொழிற்சாலை பணியாளர்களது தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பது தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளை திணைக்களம் விசாரிப்பதுடன், தற்போதிருக்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்வினையும் வழங்குகின்றது. இதன்படி, 81 முறைப்படுகள் 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விசாரிக்கப்பட்டிருந்தன.

- **விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்**

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைச் செம்மைப்படுத்து தொடர்பான விடயங்களில், பணியாளர்கள் மற்றும் தொழில்தருநர்கள் இருவரதும் அறிவினைம் அதிகரிப்பது, சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு சமமானளவு முக்கியமானதாகும். பாதுகாப்புப் பிரிவு மற்றும் மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகத்தால் 2021 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் பின்வருமாறு.

**அட்டவணை 2-7** தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை செம்மைப்படுத்துவதற்காக நடத்தப்பட்ட விழிப்புணர்வு பயிற்சி செயலமர்வு-2021

| தொ.இ | உரிய பிரிவு | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றியவர் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | புடைவை மற்றும் உற்பத்தி | 05 | 360 |
| 2 | கட்டுமாணம் | 03 | 375 |
| 3 | கலப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் (கட்டுமாணம், உற்பத்தி மற்றும் சேவை ஏற்பாடு) | 26 | 1,050 |
| | **மொத்தம்** | **34** | **1,785** |

கோவிட்-19 தொற்றுநோய் பரவல் காரணமாக விதிக்கப்பட்ட மட்டுப்பாடுகள் காரணமாக, எதிர்பார்க்கப்பட்டவாறு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தமுடியவில்லை.

## V. உலகப் பாதுகாப்பு தினம் மற்றும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வார கொண்டாட்டம்

ஓவ்வொரு வருடமும் ஏப்பிரல் 28 ஆம் திகதி வருகின்ற உலக பாதுகாப்புத் தினத்தைக் கொண்டாடுவதற்கு தொழில் திணைக்களத்தால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான தேசிய கருத்தரங்கு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக 2021 ஆம் ஆண்டில் நடத்தப்படவில்லை.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்தைக் குறிக்குமுகமாக தேசிய கருத்தரங்கொன்று 2021.10.11 ஆம் திகதி இணையவழி மூலம் நடத்தப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் நூறு தொழிற்சாலை தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இதற்குமேலதிகமாக, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்தையொட்டி நிருமாண வேலைத்தளங்களில் மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகங்களில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீது 06 மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. அதன் விபரங்கள் கீழே பட்டியல்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 2-8** தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மீதான மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்

| தொ.இ | நிகழ்ச்சித்திட்டம் | பங்குபற்றிய தொழில்தருநர்களின் / பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | துறைமுக நகரில் தீ கட்டுப்பாட்டு துர்ப்பு | 150 |
| 2 | மேர்போக் கேட்போர்கூடம், முதலீட்டுச் சபை, ஹொறணை | 75 |
| 3 | ஐ.ரீ.சி.கருத்திட்டம், காலிமுகத்திடல் | 150 |
| 4 | முதலீட்டுச் சபை கேட்போர்கூடம், சீதாவக்க | 75 |
| 5 | முதலீட்டுச் சபை கேட்போர்கூடம், கட்டுநாயக | 60 |
| 6 | முதலீட்டுச் சபை கேட்போர்கூடம், குண்டக சாலை, கண்டி | 50 |
| 7 | கே.எச்.என் நீர்வழி கட்டுமாணத் தளம் | 75 |

## VI. 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஏனைய செயற்பாடுகள்

- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய சுய ஆய்வு தொடர்பான ஒழுங்கு விதிகளை கொண்டிருக்கின்ற முன்மொழிவுகளை வகுத்தமைத்து, அவை திணைக்களத்தின் வலுப்படுத்தல் பிரிவுக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், இது, தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படு கின்றது.
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக கைநூல்கள், கையேடுகள் மற்றும் பதாதைகளை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அவற்றை விநியோகிப்பதற்காக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- நிருமாணப் பாதுகாப்பு பற்றி தொலைக்காட்சி ஆவணமொன்று தாயரிக்கப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டில் அதனை ஒளிபரப்பும் நிலையிலுள்ளது.
- அதிகளவு பாதிக்கப்படக்கூடிய தன்மையை இனங்காண்பதற்காக திணைக்களத்தின் பொறியியலாளர்களை பணிக்கமர்த்தி ஆய்வொன்றை நடத்துவதற்கு ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிலுள்ள எதிர்காலச் செயற்பாடுகளுக்கான நிபுணத்துவ ஆலோசனையை சமர்ப்பிக்கக்கூடிய நிலையிலுள்ளது.
- கைத்தொழில் பாதுகாப்ப் பிரிவின் கீழுள்ள ஜாவத்தை அலுவலக வளாகம், சேவை நாடுநர்களுக்கு முன்னுதாரணமாக சேவையாற்றுவதற்கும், வேலைத்தலப் பாதுகாப்பது பற்றிய அறிவினைப் பரப்புவதற்கும் நவீனமயப்படுத்தப்பட்டிருந்தது.



## 2. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைச் செம்மைப்படுத்துவதற்கு தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் நடத்தப்பட்ட செயற்பாடுகள்

வேலைத்தலங்களில் தொழில்சார் விபத்துக்களைக் குறைப்பதற்கும், பாதுகாப்பான வேலைத் தலங்களை உருவாக்குவதற்கும் தேவைப்பட்ட பாதுகாப்பு மற்றும் சுகாதார அலுவலர்களை உருவாக்கும் குறிக்கோளுடன், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் பின்வரும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார கற்கை நெறிகளை நடத்துகின்றது.

**அட்டவணை 2-9** தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

| | கற்கைநெறி | நடத்தப்பட்ட கற்கைநெறிகளின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | நிதி முன்னேற்றம் (ரூபா.மில்.) |
|---|---|---|---|---|
| 01 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய டிப்புளோமா கற்கைநெறி | 3 | 115 | 11.51 |
| 02 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய சான்றிதழ் கற்கை நெறி | 4 | 125 | 5.81 |
| 03 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய அடிப்படைக் கற்கைநெறி | 2 | 29 | 0.88 |
| 04 | நிறைவேற்றுத் தரத்திலுள்ள அலுவலர்களுக்கான விசேட கற்கைநெறி | 4 | 82 | 1.64 |
| 05 | வெளிநாட்டிலிருந்து திரும்பியவர் களுக்கான சான்றிதழ் கற்கைநெறி | 1 | 56 | 2.52 |
| 06 | கோவிட் ஆய்வினை நடத்துவது என்பது பற்றிய விழிப்புணர்வு செயலமர்வு | 1 | 14 | 0.07 |

2021 ஆம் ஆண்டில்,தே.தொ.பா.சு.நிறுவகத்தால் 105 இடர் மதிப்பீட்டு ஆய்வுகள் நடத்தப்பட்டு 5,250,000/- ரூபா மொத்த வருமானம் ஈட்டப்பட்டிருந்தது.

கோவிட்-19 தொற்நோய் காலப்பகுதியிலும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார கருத்தரங்கு வெற்றிகரமாக நடத்தப்பட்டிருந்தது. இது, 2021.11.22 ஆம் திகதி கௌரவ தொழில் அமைச்சரினதும், அமைச்சின் செயலாளரினதும் தலைமையில் நடைபெற்றிருந்ததுடன், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார டிப்புளோமா மற்றும் சான்றிதழ் வைபவம் 2021 இரவில் நடத்தப்பட்டிருந்தது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு வாரத்தின் பகுதியாக, தொழில்சார் பாதுகாப்பு தேசிய மாநாடு இணையவழி நிகழ்வொன்றாக நடத்தப்பட்டிருந்தது. இந்த மாநாடு மூன்று நாட்களாக நடத்தப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு நாளும் 100 முதல் 110 வரையான பங்குபற்றுநர்கள் இந்த நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.

### 2021 ஆம் ஆண்டில் தே.தொ. பா.சு.நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்ட சமூக சேவைகள்

- கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் வேலையாட்கள் சமூகமளிக்கின்ற பிரச்சினைகள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.
- கோவிட்-19 தொற்றுநோய் பற்றிய பதாதைகளை வடிவமைத்தலும் அவற்றினை இலவசமாக தொழிற்சாலைகளிடையே விநியோகித்தலும்.
- சர்வதேச தொழில் தாபனத்தின் பங்குடமையில் இலவசமாக பயிற்சி

நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.

- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய வழிகாட்டி நூலினைத் தயாரித்தமை.
- சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு இலவசமாக நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.
- இணையவழி ஆசிய பிராந்திய நிறுவகத்தின் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தில் இணையவழி மூலம் பங்குபற்றுதல்.
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய சர்வதேச செயலமர்வில் இணையவழி மூலம் பங்குபற்றுதல்.

### 2.2.7 பெண்கள் மற்றும் இளம்நபர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல்.

திணைக்களத்தின் முதன்மையான பொறுப்புகளிலொன்று, வேலைத்தலங்களில் பெண்களை உள்ளடக்கியிருக்கின்ற தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதனால் பெண்களின் உழைப்பின் ஆக்கபூர்வமான பங்களிப்பை மேம்படுத்துவது மற்றும் அவற்றை காலத்துக்குக் காலம் மீளாய்வதன் மூலம் அத்தகைய சட்டங்களுக்குத் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பது ஆகும்.

அதேபோன்று, 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்கு ஏற்புடையதான தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்தி அனைத்து அக்கறைதாரர்களின் பங்களிப்புடன் சிறுவர் தெழிலை இல்லாதொழித்தல் மற்றும் தற்போதிருக்கின்ற சமூகப் பிரச்சினைகளுக்கு பொருந்தும் வகையில் தற்போதிருக்கின்ற சட்டங்களுக்கு திருத்தங்களைப் பரிந்துரைத்தல் இந்தத் திணைக்களத்தின் முக்கிய பொறுப்புகளாகும்.

**அட்டவணை 2-10** பெண்கள், இளம் நபர்கள் மற்றும் சிறுவர்கள் தொழிலுக்கமர்த்தப்படுவது தொடர்பாக தற்போதிருக்கின்ற சட்டங்களை நடைமுறைப்படுத்துதல் - 2021

| தொ.இ. | வகை | எண்ணிக்கை | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| 1 | நாளாந்த பரிசோதனைகள் | 37 | கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக வழமையான பரிசோதனைகள் நிறுத்தப்பட்டிருந்தன. |
| 2 | சிறுவர் தொழில் மீதான பரிசோதனைகள் | 204 | விசாரணை செய்யப்பட்ட 126 முறைப்பாடுகள் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் கோப்புகள் மூடப்பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டின் பதினான்கு விசாரணைக் கோப்புகளும், 2020 ஆம் ஆண்டு கோப்புகளும் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் கோப்புகள் மூடப்பட்டிருந்தன. அத்தகைய முறைப்பாடுகள் 7 இல் சிறுவர் தொழில் பற்றி வெளிப்படுத்தப்பட்டமையால், அவற்றில் 4 இற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டில் சட்ட நடவடிக்கையிலிருந்த முறைப்பாடுகள் 04 தொடர்பாக 2021 ஆம் ஆண்டில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ஆய்வாண்டு காலப் பகுதியில் 03 வழக்குகள் தொடர்பான விடயங்கள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. |
| 3 | பெண்களின் சேவை நிலைமை தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்தல் | 16 | 2021 ஆம் ஆண்டில் 02 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு, நிறைவுசெய்யப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் கோப்புகள் மூடப்பட்டிருந்தன. 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய 11 கோப்புகள் விசாரிக்கப்பட்டு நிறைவுசெய்து மூடப்பட்டிருந்தன. 2021 ஆம் ஆண்டில் நிபந்தனைகளை மீறியமை பற்றிய 11 முறைப்பாடுகளுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. (2020 ஆம் ஆண்டிலிருந்து விசாரிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான இந்த வழக்குகள் 2021 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன). |
| 4 | பெண்கள் இரவில் பணிபுரிவதற்கு அனுமதி வழங்குதல் | 592 | பெண்கள் இரவில் பணிபுரிவதற்காக மாவட்ட அலுவலகங்களால் 579 அனுமதிகளும், உப அலுவலகங்களால் 13 அனுமதிகளும் வழங்கப்பட்டிருந்தன. |
| 5 | தீங்கிளைக்கும் வடிவிலான சிறுவர் தொழில் பற்றிய விசேட குழு விசாரணைகள் | 64 | 318 நிறுவனங்கள் பரிசோதிக்கப்பட்டிருந்தன, ஆனால் தீங்கிளைக்கும் வடிவிலான சிறுவர் தொழில் எதுவும் அறிவிக்கப்படவில்லை. |
| 6 | பெண் வேலையாட்கள் பற்றிய விசேட குழு விசாரணைகள் | 60 | 302 நிறுவனங்கள் பரிசோதிக்கப்பட்டிருந்தன. நிறுவகம்சார் நிபந்தனை மீறல்கள் 30 அறிவிக்கப் பட்டிருந்தது. நிபந்தனைகளை மீறியமைக்காக 2 நிறுவனங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சிறிய நிபந்தனை மீறல்களுக்காக ஏனைய 28 நிறுவனங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. |
| 7 | தொழில் சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வினை உருவாக்குதல் | 08 | உரிய பிரதேசங்களிலிருந்து 11 வலய தொழில் அலுவலகங்களினூடாக தனியார் துறை ஒவ்வொன்றினதும் 30 பெண் வேலையாட்களை உள்ளடக்கிய 08 குழுக்களுக்கு பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்புடையதான தொழில் சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருந்தது. |
| 8 | மீன்பிடித் துறையில் சிறுவர் தொழில் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் | 104 | மீன்பிடிப் பிரதேசங்களிலுள்ள தொழில் அலுவலகங்களின் ஒத்துழைப்புடன் 104 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. சிறுவர்களுக்கு ஏற்புடையதான தொழில் சட்டங்கள் தொடர்பாக மீன்பிடித் துறையிலுள்ள 5069 வேலையாட்களுக்கிடையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருந்தது. |

**1. உரிய பிரதான ஞாபகாத்த தினங்களை நடத்துதலும், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதலும்.**

I. உரிய பிரதான ஞாபகார்த்த தினங்களை நடத்துவதன் மூலம் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.

- **சர்வதேச மகளீர் தினம் 2021**

2021.03.08 ஆம் திகதி நடைபெற்ற "தலைமைத்துவத்தில் பெண்கள்" என்ற கருப்பொருளின் கீழ் கொண்டாடப்பட்ட சர்வதேச மகளீர் தினத்தையொட்டி கௌரவ அமைச்சரின் தலைமையின் கீழ் தொழில் திணைக்களத்தில் பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

- தொழில் திணைக்களமானது, தொழில் சட்டம் பற்றி வழிகாட்டி பெண் பிள்ளைகளுக்கு அறிவூட்டுவதன் மூலம் சமூக விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு 'ஸ்ரீலங்கா கேர்ல் கைட்ஸ் அசோசியேசன்' என்ற அமைப்புடன் இணைந்துள்ளதுடன், 'கேர்ல்ஸ் கைட்ஸ்' இனை வலுப்படுத்தும் குறித்த குறிக்கோள்களை இலக்குவைத் இரு தரப்புகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று ஒப்பமிடப்பட்டுள்ளது.
- அரச மற்றும் தனியார் துறைகளில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளவர்களின் தொழில் வாழ்க்கைக்குப் பயனுள்ள அறிவுறுத்தல்களின் தொகுதியொன்றை உள்ளடக்கியிருக்கின்ற "வலுப்படுத்தல் அறிக்கை" என்று தலைப்பிடப்பட்ட கைநூலொன்று தொழில் நாடுநர்களுக்காக உருவாக்கப்பட்டிருந்தது.
- தொழில் சட்டவாக்கங்களுடன் தமது நேரத்தை செலவழித்துள்ள பெண் தொழில் அலுவலர்களின் உள நலனனைச் செம்மைப்படுத்துவதற்கான இசை நிகழ்ச்சித்திட்டமென்றை தயாரிப்பதற்கான இயலுமை, உளவியல் ஆலோசகர் திருமதி.அமா திஸ்ஸநாயக அவர்களால் நடத்தப்பட்டிருந்தது.

- அதேபோன்று, கட்டுநாயக மற்றும் கொக்கலை பெண்கள் வதிவிட விடுதிகளில் தங்கியிருப்பவர்களுக்கான உளவியல் ஆலோசனை மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்ட மொன்றை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்து. இதன்படி, தொழில் திணைக்களத்தால் நடத்தப்படுகின்ற முதலாவது நிகழ்ச்சித்திட்டம், கட்டுநாயக தங்கும் விடுதியில் தங்கியிருக்கின்ற பெண்களுக்காக 2021 பெப்ரவரி 4 ஆம் திகதி நடத்தப்பட்டிருந்ததுடன், 2021.03.07 ஆம் திகதி கொக்கல்லை தங்கியிருப்பவர்களுக்கான இரண்டாவது நடத்தப்பட்டிருந்தது.

- **சிறுவர் தொழிலுக்கு எதிரான நாள்- 12 ஒக்டோபர் 2021**

சிறுவர் தொழிலை இல்லா தொழிப்பதற்கான சர்வதேச தினத்தில் யூன் 12 ஆம் திகதி வருகின்ற சிறுவர் தொழுலுக்கெதிரான உலக தினத்தையொட்டி, தொழில் திணைக்களத்தின் பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகாரப் பிரிவினால் நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. அவற்றில் சில கீழே தரப்பட்டுள்ளன.

- கௌரவ தொழில் அமைச்சரின் தலைமையில் சிறுவர் தொழில் மீதான இலங்கையின் சட்டக் கட்டமைப்பு பற்றி 2021.06.11 ஆம் திகதி சமூகத்தில் பரந்தளவிலான கலந்துரையாடலொன்று ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன், இலங்கையில் சிறுவர் தொழிலை இல்லாதாக்குவதற்கும், சமூகப் பொறுப்பு பற்றிய விழிப்புணர்வினை உருவாக்குவதற்கும் ‘சூம்’ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இணையவழி நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.

- சிறுவர் தொழில் பற்றிய தகவல்களை சேகரிப்பதில் அக்கறைதாரராக, ஊடக சமூகமும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்டிருந்ததுடன், சிறுவர் தொழில் தொடர்பான சட்டங்களுக்கான அண்மைய திருத்தங்கள் பற்றி உரிய தரப்புகள் அறிவூட்டப்பட்டிருந்தன.

- இலங்கையில் சிறுவர் தொழிலை இல்லாதொழிக்கும் உத்தேசத்தில் ஸ்ரீலங்கா கேர்ல்ஸ் ஆசோசியேசனுடன் கையொப்பமிட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நியதிகளின்படி நடவடிக்கை தொடர்ந்து, சிறுவர் தொழில் பற்றி விரிவான ஆய்வொன்றினை மேற் கொள்வதற்கு ‘கேர்ல்ஸ் கைட்ஸ்’ அமைப்பிற்கு வாய்ப்பொன்றினை உருவாக்கி சிறுவர் தொழிலுக்கெதிரான அடையாள குறிகாட்டிகளை வடிவமைப்பதற்கு போட்டியொன்று நடத்தப்பட்டிருந்தது.

- இலங்கையிலிருந்து சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்தில் துடிப்புடன் ஈடுபட்டுள்ள விசேட திறனுள்ளவர்கள் அடையாள குறிகாட்டிகளை வடிவமைப்பதற்கான அவர்களது பங்களிப்பின் ஆற்றலை மதிப்பிடுவதற்காக ‘கேர்ல்ஸ் கைட்ஸ்’ அமைப்பிடம் கையளிக்கப்படுவதுடன், முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைத் தெரிவுசெய்து, தெரிவுசெய்யப்பட்ட அடையாள குறிகாட்டி களை வெளியிட்டு, எண்ணிக்கையிலான எதிர்கால கட்டுரைகளுடன் “கத்திகாவ” சஞ்சிகை ஆரம்பிக்கப்படுகின்றது.

- சிறுவர் தொழிலுக்கெதிரான உலக தினம் -2021 இற்கு இணையாக சிறுவர்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பான சட்டவாக்கம் பற்றி கலந்துரையாடுதல். லக்கந்த வனொலியில் 2021.06.10 ஆம் திகதி “சித் பகான் வெத” நிகழ்ச்சியின் பகுதியொன்றாக சிறுவர்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பான சட்டவாக்கம் பற்றிய தலைப்புசார் கலந்துரையாடல் நிகழ்ச்சியொன்று ஒலிபரப்பப்பட்டிருந்தது.

- **சர்வதேச சிறுவர் தினத்தைக் கொண்டாடுதல்.**

- பத்திரிகைகளில் கௌரவ தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அவர்களின் செய்திகளை வெளியிடுதல்.
  2021.10.01 ஆம் திகதி வருகின்ற சர்வதேச சிறுவர் தினத்திற்காக “சிறுவர் தொழில் அற்ற நாடு- சிறுவர்களுக்கான எதிர்காலத்தைப் பாதுகாத்தல்” என்ற தலைப்பில் கௌரவ தொழில் அமைச்சரின் சிறுவர் தினச் செய்தி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

- சர்வதேச சிறுவர் தினத்தைக் குறிக்கு முகமாக “சலன றோ” குறுந்திரைப்பட போட்டியை நடத்துதல்.
  சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்டத்துடன் இணைந்து “சலன றோ” என்ற தலைப்பில் குறுந் திரைப்பட போட்டியொன்று நடத்தப்பட்டிருந்தது. இது, சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் நடத்துப்பட்டிருந்ததுடன், முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

- சர்வதேச சிறுவர் தினம் - 2021 இற்கு இணையாக சிறுவர்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் பற்றி பத்திரிகை நேர்காணல்.

பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகாரப் பிரிவின் தொழில் ஆணையாளரால் சிறுவர்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் பற்றி ‘நவாலிய’ பத்திரிகைக்கு நேர்காணலொன்று 2021.09.27 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. சிறுவர் தொழில் தொடர்பான தொழில் சட்டங்கள் பற்றி வாசகர்கள் அறிவூட்டப்பட்டிருந்ததுடன், நபரொருவர் பணிக்கமர்த்தப்படக்கூடிய குறைந் தபட்ச வயதினை 14 வயதிலிருந்து 16 வயதாக அதிகரிப்பதற்காக பாராளுமன்றத்தில் திருத்தச் சட்டமொன்று கொண்டுவரப்பட்டிருந்தது.

- **சிறுவர்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பான சட்டவாக்கங்கள் பற்றி சர்வதேச சிறுவர் தினம் - 2021 இற்கு இணையான ஊடாக சந்திப்பு.**

“எமது சிறுவர்களை அதிக எண்ணிக்கையிலான ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்போம்” என்ற கருப்பொருளில் 2021.09.30 ஆம் திகதி அரசாங்க தகவல் திணைக்களத்தில் தொழில் ஆணையாளர் அதிபதியின் தலைமையின் கீழ் ஊடக சந்திப்பொன்று நடத்தப்பட்டிருந்தது.

## 2. இலங்கையிலிருந்து சிறுவர் தொழிலை இல்லாதொழிக்கும் நோக்கில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்.

- **சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்குத் தேவையான விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கான கருப்பொருளில் கீதமொன்றை உருவாக்குதல்.**

சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான சர்வதேச தினத்தையொட்டி கருப்பொருள் கீதமொன்று, 2021.12.14 ஆம் திகதி கௌரவ தொழில் அமைச்சர் நிமல் சிறி பால டி சில்வா அவர்களின் தலைமையில் விசேட நிகழ்ச்சியில் வெளியிடப்பட்டது. இந்த கருப்பொருள் கீதம் திரு.ரத்னசிறி விஜேசிங்க அவர்களால் எழுதப்பட்டிருந்ததுடன், கலாநிதி றோகண வீரசிங்க அவர்களால் தொகுக்கப்பட்டு ‘சிக்ஸ் றீம் ஸ்ரார்’ கலைஞர்களால் இசைக்கப்பட்டிருந்தது. (இந்தக் கீதத்தின் யூ ரியூப் அலைவரிசை https://youtu.be/pgBULzDz2ks).

- **சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பது தொடர்பான ‘ஸ்ரிக்கர்களை’ வடிவமைத்தல்**

அனைத்து பிரதேச செயலகத்தில், கிராம அலுவலகர் அலுவலகங்கள் மற்றும் அனைத்து தொழில் அலுவலகங்களிலும் காட்சிப்படுத்துவதற்கு சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதில் கொண்டவரப்பட்ட புதிய சட்டங்கள் மற்றும் திருத்தச் சட்டங்களுடன் பதாதைகள் வடிவமைக்கப்பட்டிருந்ததுடன், பிராந்திய தொழில் அலுவலகங்களினூடாக அந்தப் பதாதைகள் விநியோகப்படுத்தப்பட்டிருந்தன.

இதேபோன்று, சிறுவர் தொழிலை இல்லா தொழிப்பதனை இலக்காகக்கொண்டு, தொழில் புரிவதற்கான குறைந்தபட்ச வயதைத் திருத்துவதற்கு ‘ஸ்ரிக்கர்’ வடிவமைக்கப்பட்டிருந்ததுடன், பேருந்துகள், புகையிரத நிலையங்கள் மற்றும் பாடசாலைகளில் காட்சிப்படுத்தப்படவுள்ள சட்டரீதியற்ற வகையில் சிறுவர்களை வேலைக்கிடுவதற்கான தண்டப்பணம் பற்றி பொது மக்களுக்கு அறிவூட்டுதல்.

- **சிறுவர் தொழிலை இல்லாதொழிக்கும் குறிக்கோளுடன் பாடசாலைப் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிப்பதற்கு “அத் தட்டு (விங்ஸ்)” சஞ்சிகையை வெளியிடுதல்.**

“சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான சர்வதேச ஆண்டு 2021” பற்றி பாடசாலை பிள்ளைகளைக் கற்பிப்பதற்காக “அத் தட்டு” சஞ்சிகையின் ஐயாயிரம் பிரதிகள் வடிவமைக் கப்பட்டு, அச்சடிக்கப்பட்டிருந்ததுடன் 2021.12.14 ஆம் திகதி விசேட வைபமொன்றில் அங்குரார்ப் பணமும் செய்யப்பட்டிருந்தது. இந்த சஞ்சிகையை அனைத்து பாடசாலைகளின் நூலகங்களுக்கு வழங்குவதற்காக மாவட்ட தொழில் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

## 3. சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதன் மீதான தேசிய வழிகாட்டல் குழு - 2021

இலங்கை அரசாங்கம், 2022 ஆம் ஆண்டளவில் நாட்டிலிருந்து சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கு உறுதிபூண்டுள்ளது. எனவே, சிறுவர் தொழிலையும், அனைத்து வடிவிலான ஆபத்தான சிறுவர் தொழிலையும் இலங்கையிலிருந்து இல்லாதொழிப்பதற்கு உரிய

நிறுவனங்கள் அனைத்தினதும் கூட்டு முயற்சியை மேலும் பலப்படுத்துவது அவசியமானதாகும். அனைத்து அக்கறைதாரர்களினதும் கூட்டு முயற்சிகளினூடாக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடையப்படுகின்றனவென்பதை உறுதிப்படுத்துவதற்காக தேசிய வழிகாட்டல் குழு தாபிக்கப் பட்டுள்ளது.

அதேபோன்று, மேற்குறிப்பிட்ட திகதியில் நடைபெற்ற தேசிய பாதுகாப்புக் குழுவினால் அதன் கூட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு தொழில்நுட்பக் குழு, குறித்த நிறுவனங்களைச் சேர்ந்த 16 ஊழியர்களின் பங்குபற்றுதலுடன் தொழில் திணைக்களத்தின் 04 ஆவது மாடி கேட்போர் கூடத்தில் 2021.04.07 ஆம் திகதியன்று நடைபெற்றிருந்தது.

**4. பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பிற்காக 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏனைய நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்ட உதவிகள்.**

- கோவிட்-19 தொற்றுநோய் நிலைமை இருந்தபோதிலும், தொழில் அலுவலர்கள் 28 மாவட்ட / பிரதேச சிறுவர் அபிவிருத்திக் குழுக்களில் பங்குபற்றியிருந்தனர் என்பதுடன், குழு உறுப்பினர்களுக்கு சிறுவர் தொழில் மற்றும் அது தொடர்பான பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அதேபோன்று, அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் 2021 ஆம் ஆண்டுக்கான சிறுவர் தொழிலை இல்லாதொழிப்புக்கான சர்வதேச ஆண்டு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதுடன், பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவின் தொழில் அலுவலர்களால் கொழும்பு மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களின் பங்களிப்புடன் 02 கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையால் ‘சூம்’ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வளர்ப்புப் பெற்றோர் திட்டம் குறித்த குழுக் கூட்டம் 2021.08.24 ஆம் திகதியன்று நடத்தப்பட்டிருந்ததுடன். இந்நிகழ்வில் தொழில் திணைக்களம் அக்கறைதாரரொருவராகப் பங்கேற்றிருந்தது.

- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் நடாத்தப்பட்ட ”இலங்கையின் தினப்பராமரிப்பு வசதிகள் தொடர்பான தேசிய கொள்கை” என்ற தலைப்பில் 2021.09.28 ஆம் திகதி ‘சூம்’ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கலந்துரையாடலொன்று நடத்தப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் தொழில் திணைக்களம் பங்குதாரராக பங்குபற்றியிருந்தது.

- சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான சர்வதேச ஆண்டு 2021 இற்கு இணையாக உறுப்பு நாடு என்ற வகையில் அபாயகரமான வேலைகளின் பட்டியலைத் திருத்துவதற்கு கூட்டணி 8.7 தொடர்பில் 2021.01.26 ஆம் திகதி சம்மதம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக நடத்தப்பட்ட இணையவழி செயலமர்வுகளில் தொழில் திணைக்களம் பங்குபற்றியிருந்தது.

- சிறுவர் தொழிலை இல்லாதொழிக்கும் நோக்கில் ‘கேர்ல்ஸ் கைட்’ மற்றும் ஆணையாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்கள். இந்த நிகழ்ச்சி 2021.11.28, 2021.12.04, 2021.12.11 மற்றும் 2021.12.12 ஆகிய திகதிகளில்

**5. கையேடுகளை அச்சிடுதல்**

குறைந்த வயதுடைய பிள்ளைகள் தொழில் புரிவதைத் தடுப்பதற்காக குறைந்தபட்ச தொழில் வயதை 14 இலிருந்து 16 ஆக உயர்த்துவதற்கான திருத்தம் தொடர்பான கையேடும், ஆபத்தான தொழில்களுக்கான வயதெல்லையை 16 இலிருந்து 18 ஆகவும் உயர்த்துவதற்கான திருத்தம் தொடர்பான கையேடு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவினால் அச்சிடப்பட்டு பிரதேச அலுவலகங்கள் ஊடாகவும், விசேட நிகழ்வுகளிலும் கையேடுகள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

18 வயதிற்குட்பட்ட எவரும் வேலைக்கு அமர்த்த முடியாத அபாயகரமான தொழில்களின் எண்ணிக்கையை 51 இலிருந்து 71 ஆக அதிகரிப்பது குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கையேடுகள் வடிவமைக்கப்பட்டு அச்சிடப்பட்டிருந்தன. இந்த துண்டுப் பிரசுரங்களை பிராந்திய அலுவலகங்கள் மூலம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.



- **71 அபாயகரமான தொழில்களின் பட்டியல் பற்றி செய்தித்தாள் கட்டுரைகளை வெளியிடுதல்**

71 அபாயகரமான தொழில்களின் பட்டியல் பிரபல பத்திரிகைகளான தினமின, தினகரன், டெய்லி நியூஸ், திவைன மற்றும் லங்காதீப ஆகிய பத்திரிகைகளில் தொழில் அமைச்சர் கௌரவ நிமல் சிறிபால டி சில்வா அவர்களின் செய்தியுடன் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

**6. சட்டங்களின் திருத்தம்**

தற்போதிருக்கின்ற சட்டவாக்கங்களின் திருத்தம் பற்றிய அவதானிப்புகளை மேற்கொண்டு, முன்மொழிவுகளை சமர்ப்பித்து, புதிய சட்டவாக்கங்களை அறிமுகப்படுத்தி தொழில் அமைச்சுக்கு உதவுதல்.

**7. ஏனைய விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

- சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான சர்வதேச தினத்திற்கான விசேட நிகழ்ச்சித் திட்டம் 2021 - 14.12.2021

சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான சர்வதேச தினம்-2021” இனைக் குறிக்குமுகமாக தொழில் அமைச்சர் கௌரவ நிமல் சிறிபால டி சில்வா அவர்களின் தலைமையின் கீழ் விசேட நிகழ்வொன்றை தொழில் திணைக்களத்தின் பெண்கள் மற்றும் சிறுவர்கள் பிரிவு ஒழுங்கமைத்திருந்தது.

தொழில் அமைச்சர் கௌரவ நிமல் சிறிபால டி சில்வா அவர்களின் ஏற்பாட்டில், தொழில் அமைச்சின் செயலாளர், சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான தேசிய வழிகாட்டல் குழுவின் பங்குதாரர்கள், தொழில் திணைக்களத்தின் அலுவலர்கள் மற்றும் தொடர்பு பட்டுள்ள அனைத்து அக்கறைதாரர்களின் பங்கேற்புடன் இந்த இணையவழி நிகழ்ச்சித்திட்டம் 2021 டிசெம்பர் 14 ஆம் திகதி நடைபெற்றிருந்தது.

“சலன ரூ” குறும்படப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு ரொக்கப் பரிசுகள், கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், இலங்கை சாரணர் சங்கத்தின் ‘பட்ஜூ களை’ வடிவமைப்பதற்கான போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டிருந்தன. சிறுவர்கள் தொடர்பான எண்ணக்கரு கீதத்தை வெளியிட்டிருந் தமை, சிறுவர் தொழில் பற்றிய கையேட்டைவெளியிட்டிருந்தமை, மலிபன் பிஸ்கட் பிறைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமை இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க ஏனைய நிகழ்வுகளாகும்.

- சிறுவர்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் பற்றிய கலந்துரையாடல் - 2021

சிறுவர்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் TV1 தொலைக் காட்சியின் சட்டான’ என்ற நிகழ்ச்சியில் 2021.01.20 ஆம் திகதி கலந்துரையாடப்பட்டிருந்தது. தொழில் திணைக்களத்தின் பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகாரப் பிரிவின் முன்னாள் தொழில் ஆணையாளர் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தார்.

- களனியில் பிரின்ற் கேயர் நிறுவகத்தின் வளாகத்தில் அதன் பணியாளர்களுக்காக 2021.02.12 ஆம் திகதி வேலைத் தலங்களில் பெண்களின் பணிபுரிகின்ற சூழலும் பாலியல் துன்புறுத்தலும் என்பது பற்றிய விழிப்புணர்வொன்று நடத்தப்பட்டிருந்தது.

- ‘இலங்கையின் தொழில் சட்டங்கள் பெண்களின் பொருளாதாரத்திற்கு சாதகமாகவுள்ளதா’ என்ற தலைப்பின் கீழ் 2021.03.05 ஆம் திகதி நடத்தப்பட்டிருந்த கலந்துரையாடலில் திணைக்களம் பங்குபற்றியிருந்தது.

**2.2.8 வேலையாட்களுக்கான சமூகப் பாதுகாப்பு**

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம், பகுதியளவிலான அரச மற்றும் தனியார் துறைகளிலுள்ள நாட்டின் உழைக்கும் மக்களின் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொடுப்பதனை உறுதிப்படுத்தும் நோக்கில் தாபிக்கப்பட்டிருந்தது. இந்த நிதியம், தொழில் திணைக்களத்தால் நிருவகிக்கப்படுவதுடன், மத்திய வங்கியின் நாணயச் சபை இந்த நிதியத்தை முகாமை செய்வதற்கு பொறுப்பு வாய்ந்ததாகும். 2021.12.31 இல் நிதியத்தின் ஒட்டுமொத்த பெறுமதி 2,540,438 ரூபா என்பதுடன், நிதியத்தின் செயலுறு மற்றும் செயற்படாத கணக்குகளின் எண்ணிக்கை 19 மில்லியன் ஆகும்.

### I. ஊழியர் சேமலாப நிதியத்தில் வேலைத்தலங்களைப் பதிவு செய்தல

அனைத்து பகுதியளவிலான அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களும் ஊழியர் சேமலாப சட்டத்தினால் நிதியத்தில் பதிவுசெய்துகொள்ளப்படுவதற்கு வேண்டப்படுகின்றன. இதன்படி, 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை 2407 ஆகும். 2021 ஆம் ஆண்டில் நிதியத்திற்கு உதவுதொகையாக வரவு வைத்துள்ள செயலுறு தொழில்தருநர்களின் எண்ணிக்கை 84,874 என்பதுடன், நிதியத்துக்கு உதவுதொகையாக வரவு வைத்துள்ள தொகை 99,587 மில்லியன் ரூபாவாகும்.

### II. ஊழியர் சேமலாப நிதியத்தில் உறுப்பினர்களைப் பதிவு செய்தல்

ஊ.சே.நி. சட்டத்தின் கீழ் அனைத்து பணியாளர்களையும் உள்ளடக்கி இலக்கங்களை ஒதுக்கியமை மற்றும் அவற்றை நிதியத்தில் பதிவுசெய்கின்றமை திணைக்களத்தின் ஆதரவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. இதன்படி, 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 314,058 என்பதுடன், தற்போது மத்திய வங்கியில் 2.5 மில்லியன் செயலுறு கணக்குகள் உள்ளன.

குறிப்பிட்டவாறு உதவுதொகைகளைச் செலுத்தாத பணியாளர்களுக்கு முதலாவது அறிவித்தல் மற்றும் சிவப்பு அறிவித்தல் வழங்கப்படுகின்றது. அத்தகைய அறிவித்தல்களுக்கு முறையாக பதிலளிக்கப்படாதுவிட்டால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், மேலதிக கட்டணத்துடன் அறவிடப்பட்டு கணக்கில் வைக்கப்படும். 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 8,491 முதலாவது அறிவித்தல்களை வழங்கி 4242 மில்லியன் ரூபா அறவிடப்பட்டதுடன், 7,858 சிவப்பு அறிவித்தல்களை வழங்கி 4,198 மில்லியன் ரூபா அறவிடப்பட்டிருந்தது.

### III. ஊ.சே.நி அனுகூலக் கொடுப்பனவுகள்

2021 ஆம் ஆண்டில் அனுகூலங்களைப் பெற்றுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை பின்வருமாறு.

**அட்டவணை 2-11** ஊ.சே.நி பயனாளிகளின் எண்ணிக்கை-2021

| அனுகூலங்களின் தன்மைகள் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| பொது அனுகூலங்களைச் செலுத்துதல் | 95,474 |
| இறந்த உறுப்பினர்களின் அனுகூலங்களைச் செலுத்துதல் | 4,607 |
| 30% முன் அனுகூலங்களைச் செலுத்துதல் | 16,015 |

### IV. அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியங்களை மேற்பார்வையிடுதல்

ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியங்களுடன் 117 நிறுவனங்கள் உள்ளன. உதவுதொகைகளை வரவு வைத்தல் மற்றும் அனுகூலக் கொடுப்பனவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கின்ற அத்தகைய நிதியங்களைத் தொழிற்படுத்துதல் தொழில் திணைக்களத்தால் கண்காணிக்கப்படுவதுடன், சரியாக தொழிற்படாத அந்த நிறுவனங்கள் தொழில் ஆணையாளர் அதிபதியின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்படுகின்றன.

**அட்டவணை 2-12** அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியங்களைக் கண்காணிப்பதிலுள்ள முன்னேற்றம் - 2021

| விடயம் | எண்ணிக்கை |
|---|---|
| 2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 41 |
| 2021 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் மற்றும் மூடப்பட்ட கோப்புகளின் எண்ணிக்கை | 35 |
| 2021 ஆம் ஆண்டில் கள அலுவலர்களால் தனியார் சேமலாப நிதியங்கள் பற்றிய அறிக்கைகளின் எண்ணிக்கை | 81 |
| 2021 ஆம் ஆண்டில் கண்காணிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | 88 |



### V. நிதியத்திலிருந்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அனுகூலங்கள்

- **உறுப்பினர்களின் ஊ.சே.நி கணக்கு நிலுவையிலுள்ள தொகையின் அடிப்படையில் வீடமைப்புக் கடன்களை வழங்குதல்**

உறுப்பினர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் நோக்கில், ஊ.சே.நி கணக்கின் நிலுவையை பிணைப்பொறுப்பாக வைப்பதற்கும் ஆகக்கூடியது 75% இற்கமைவாக வீடமைப்புக் கடனைப் பெறுவதற்கும் வசதிகள் காணப்படுகின்றது. இதன்படி, ஆண்டு காலப்பகுதியில் 6,792 வீடமைப்பு கடன் விண்ணப்பப்படிவங்களுக்கு அனுமதி அளிக்கப் பட்டிருந்தது. அனுமதி அளிக்கப்பட்ட தொகை 3.8 பில்லியன் ரூபாவாகும்.

- **நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்**

ஊ.சே.நிதி பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் 2021.12.18 ஆம் திகதி நுவரெலியாவிலுள்ள லபுக்கல்லை பெருந்தோட்டத்தில் நடமாடும் சேவையொன்று நடத்தப்பட்டிருந்ததுடன், அதன் மூலமான பயனாளிகளின் எண்ணிக்கை 518 ஆகும். தலைமை அலுவலகத்தால் வழங்கப்பட்ட சேவைகளைப் பிராந்திய அலுவலகங்களுக்கு பரவலாக்குவதனூடாக, உறுப்பினர்களுக்கு அதிக வசதிகள் கிடைக்கப்பெறச் செய்யப் பட்டிருந்தன.

கோவிட்-19 தொற்றுநோய் பரவலுடன் ஊ.சே.நி சேவைநாடுநர்களுக்கு தடங்கலற்ற சேவைகளின் ஏற்பாடுகளுக்காக, சேவை அறிவுறுத்தல்கள் தொலைபேசி மூலம் வழங்கப் பட்டிருந்ததுடன், அனுகூல விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளுதல் உள்ளடங்கலான பல சேவைகள் இணையவழி மூலம் நேரத்தையும் திகதியையும் ஒதுக்கிவழங்கப்பட்டிருந்தன.


ஊ.சே.நிதியத்தை மேம்படுத்தும் நோக்கில் ஊ.சே.நிதியம் பற்றி உறுப்பினர்களுக்கு அறிவூட்டுவதற்கு திணைக்களத்தின் 'யூ ரியூப்' அலைவரிசையில் பதிவிடுதற்காக காணொளியொன்று தயாரிக்கப்படுகின்றது. மேலும், ஊ.சே.நிதியத்தை மேம்படுத்துகின்ற விளம்பரம், தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதனைப் பரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

### 2.2.9 வேலையாட்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டப் பாதுகாப்பு

இத்திணைக்களம், பெண்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டவாக்கங்களின் தொகுதியொன்றை வலுப்படுத்தப்படுகின்றது. இதன்படி, தொழில் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்துவதற்கு தேவைப்பட்டுள்ள அத்தகைய சட்டவாக்கங்களின் ஏற்பாடு களை ஒத்தவகையில் நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்தும் நோக்கில், பணியாளர்கள் மற்றும் தொழில்தருநர்கள் இருவரதும் உரிமைகளைப் பாதுகாப்பதன் மூலம், இரு தரப்பினர்களுக்குமிடையில் ஒத்துழைப்பினை மேம்படுத்துவதன் மூலம் அத்தகைய மீறல் களின் குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதன்படி, 2021 ஆம் ஆண்டில் திணைக்களத்தால் உருவாக்கப்பட்ட சட்டங்களின் முன்னேற்றம் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 2-13** வழக்குகளின் நீதிமன்றச் செயலாற்றுகை - 2021

| நீதிமன்றம் | 2021 ஆம் ஆண்டுக்குக் கொண்டுவரப்பட்ட நிலுவை | 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2021 ஆம் ஆண்டில் நிறைவுசெய்யப்பட்ட வழக்குகள் | அறிவுறுத்தல் கடிதங்கள் மற்றும் அறிவுறுத்தல் கோப்புகள் |
|---|---|---|---|---|
| மேல் நீதிமன்றம் | 124 | 14 | 19 | |
| மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் | 160 | 132 | 12 | |
| உயர் நீதிமன்றம் | 97 | 33 | 20 | |
| மாவட்ட நீதிமன்றங்கள் / வர்த்தக உயர் நீதிமன்றம் | 277 | 3 | 0 | |
| நீதவான் நீதிமன்றம் | 93 | 170 | 154 | 77 |
| **மொத்தம்** | **751** | **352** | **205** | **77** |




**வரைபடம் 2-3** அனைத்து மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளும் தீர்க்கப்பட்ட வழக்குகளும் - 2021

இத்திணைக்களத்தின் சட்டப் பிரிவினால் பெறப்பட்ட செயலற்ற வழக்குகளின் எண்ணிக்கை 5151 ஆகும். அதன் நிதி மதிப்பு 3,108,693.249.34 ரூபாவாகும். திறந்த பிடியாணை வழக்குகளின் எண்ணிக்கை 2822 ஆகவும், அதன் நிதி மதிப்பு 879,249,209.85 ரூபாவாகவும் இருந்தது. இந்த வழக்குகளை செயல்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

- வெளிநாட்டிற்குச் சென்ற தொழில்தருநர்கள் மீது திறந்த பிடியாணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ள நிலையில் விமான நிலைய பொலிஸாருக்கு தெரியப்படுத்துதல் மற்றும் வெளிநாட்டில் உள்ள முகவரிக்கு பிடியாணைகளை அனுப்புவதற்கு முகவரிகளை கிடைக்கப்பெறச்செய்தல்.
- திறந்த பிடியாணை வழக்குகள் தொடர்பாக பிரதி தொழில் ஆணையாளரிடமிருந்து திறந்த பிடியாணைகளின் பிரதிகளைக் கோருதல் மற்றும் அவற்றை பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி பிடியாணையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளல்.
- திறந்த பிடியாணை வழக்குகளை செயல்படுத்துதல் மற்றும் செயலற்ற வழக்குகளை சரிபார்ப்புப் பட்டியலாக செயல்படுத்துவதற்குத் தேவையான அறிவுறுத்தல்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை வலய அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்புதல்.



கீழே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளவாறு சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் புதிய சட்டவாக்கங்களை உருவாக்குவதற்கும் தொழில் அமைச்சுக்கு உதவுதல்.

- புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை வரைதல்
- தற்போதுள்ள சட்ட நிலைமையை பகுப்பாய்வு செய்தல் மற்றும் பொருத்தமான அவதானிப்புக்களை வழங்குதல்.
- தற்போதைய நிலைமை மற்றும் தேவைப்பாடுகளை ஆராய்தல் மற்றும் புதிய சட்டங்களை உருவாக்குவதற்கான அவதானிப்புகளை மேற்கொள்ளல்.

### 2.2.10 சேவைகளை வழங்குவதற்கு தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்

சேவைநாடுநர்களுக்கு சேவையை வழங்குவதில், திணைக்களமானது, தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி கணனி முறைமையினூடாக அத்தகைய சேவைகளை வழங்குவதன் மூலம் சேவைகளை அடைவதனைப் பெறுகின்ற வசதியை செம்மைப்படுத்துவதற்கு அதிகம் கவனம் செலுத்தியுள்ளது. இத்திணைக்களம், மத்திய வங்கியின் ஊ.சே.நிதிய தரவு முறைமை யுடனும் உ.சே.நி கண்காணிப்பு முறைமையுடனும் தொடர்புபட்டுள்ளது.

மேலும், திணைக்களத்தின் அகத் தொடர்பாடல்களுக்காக 2020 ஆம் ஆண்டில் “ஸ்லாக் அப்ளிகேஷன்” அறிமுகப்படுத்தப்பட்டது, இதன் மூலம் உள்ளக தொடர்பாடல் உடனடியாக மேற்கொள்ளப்படுவதுடன், ஆவணங்களின் பயன்பாட்டைக் குறைப்பதன் மூலம் அகத் தொடர்பாடல் உடனடியாக மேற்கொள்ளப்படுவதுடன், வீட்டிலிருந்து வேலை செய்யும் காலப்பகுதியில் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் கடமைகளை மேம்படுத்துவதற்கும் இது பங்களித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக, சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு மக்களுக்குத் தேவையான மாதிரி விண்ணப்பப்படிவங்கள் மற்றும் படிவங்கள், பல்வேறு சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் அத்துடன் தொழில்தருநர்களினால் கவனம் செலுத்தப்பட வேண்டிய சம்பளச் சபைகளின் தீர்மானங்கள் போன்ற ஆவணங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், தேவைப்படும் போது பதிவிறக்கம் செய்துகொள்ளவும் முடியும். இதேபோன்று, பொதுமக்களுக்குப் புதுப்பிக்கப்பட்ட தகவல்களை வழங்குவதற்காக அதிகாரப்பூர்வ யூடியூப் சேனல், முகப்புநூல் பக்கம் மற்றும் ருவிட்டர் கணக்கை இத்துறை பராமரித்து வருகின்றது.

இதன்படி, 2021 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப வலைத்தளங்கள், ஸ்லாக் அப்ளிகேஷன், யூடியூப் சேனல், முகப்பு நூல் பக்கம் மற்றும் ருவிட்டர் கணக்கு ஆகியவற்றின் மூலம் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சேவைகள் பின்வருமாறு.

- அனைத்து படிவங்களும் (பாதுகாப்பு சேவைகளுக்குரிய அனுமதிச் சான்றிதழ் உள்ளடங்கலாக).
- புள்ளிவிபரவியல் தகவல் (தொழில் புள்ளி விபரவியல், வருடாந்த தொழில் ஆய்வுகள், ஆண்டறிக்கைகள், கோவிட்-19 ஆய்வு அறிக்கைகள் போன்றவை).
- அனைத்து நிருவாகத் தகவல்கள்.
- ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலக் கொடுப்பனவுகளுக்குரிய விண்ணப்பத்தினை அனுப்புவதற்கு இணையத்தினூடாக நேரத்தை ஒதுக்குதல்.
- இரவில் பெண்களைப் பணிக்கமர்த்துவதற்கான அனுமதியைப் பெறுவதற்காக இணையவழியில் விண்ணப்பங்களை அனுப்புதல்.
- ‘கத்திக்காவ’, ‘பிறைம் வோர்க்’, ‘அத் தட்டு அஸ் இ.நூல்கள் போன்ற அத்தகைய சஞ்சிகைகளை ஆரம்பித்தல்.
- கோவிட்-19 தொற்றுநோய் காலப்பகுதியில் வீட்டிலிருந்து பணிபுரிகையில் திணைக்களத்தின் அகத் தொடர்பாடலுக்கு ஊடகமாக ‘SLACK‘ விண்ணப்பத்தைப் பயன்படுத்துதல்.
- ‘யூ ரியூப் அலைவரிசை, முகநூல் மற்றும் ருவிற்றர் ஆகியவற்றினூடாக இற்றைப் படுத்தப்பட்ட தகவல்களைப் பரப்புதல்.

### 2.2.11 சிறந்த தொழில் உறவுகளுக்காக முத்தரப்பு பங்குதாரர்களுக்கு கல்வியளித்தல்

**தொழில் சட்டம், கைத்தொழில் உறவுகள் மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய கற்கை**

**தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்,** வேலையாட்களின் அறிவு, மனப்பான்மை மற்றும் திறன்களை விரிவுபடுத்துவதற்காக கைத்தொழில் உறவுகள் மற்றும் மனித வள முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா கற்கைநெறிகளை நடத்துகின்றது. இந்நிறுவகம் தனியார் துறையிலும், பகுதியளவிலான


அரசாங்கத் துறையிலும் உள்ள பணியாளர்கள், தொழில்தருநர்கள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களின் இயலுமையைக் கட்டியெழுப்பு வதற்குத் தேவையான கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புக்களை வழங்குகின்றது. இதற்கு மேலதிகமாக, இந்நிறுவகம் தொழில் கற்கைகள் குறித்த குறுகிய கால கற்கைநெறிகள் மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகளை நடத்துகின்றது.

**1. 2021.12.31 இலுள்ள நிதி முன்னேற்றம்**

**அட்டவணை 2-14** தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் முன்னேற்றம்

| | | மதிப்பிடப்பட்ட செலவீனம் (ரூபா) 000' | 2021.12.31 இல் உண்மையான செலவீனம் (ரூபா.) 000' |
|---|---|---|---|
| வருவாய் | | 31,300 | 28,489 |
| தே.தொ.க.நிறுவகத்தின் உழைப்புகள் | | | |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | | 20,975 | 18,730 |
| பரீட்சைகள் | | 8,000 | 7,226 |
| முதலீட்டு வருமானம் | | 2,325 | 2,533 |
| திறைசேரி ஏற்பாடுகள் | | 11,000 | |
| மீண்டெழுவது | 10,000 | | 10,000 |
| மூலதனம் | 1,000 | | 1,000 |
| மொத்த வருமானம் | | 42,300 | 38,489 |
| செலவீனம் | | 35,937 | 25,195 |
| **மிகை / பற்றாக்குறை** | | **6,363** | **3,294** |


**2. 2021 ஆம் ஆண்டில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்தான வருமானம்**




**வரைபடம் 2-4** 2021 ஆம் ஆண்டில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து தே.தொ.க.நிறுவகம் உருவாக்கியுள்ள வருவாய்.



**3. நடத்தப்பட்ட பயிற்சி கற்கைநெறிகள் மூலமான வருவாய்**




**வரைபடம் 2-5** பயிற்சி செயற்பாடுகளிலிலிருந்தான வருவாய்-தே.தொ.க.நி


**4. கருத்திட்டங்கள், ஆய்வு மற்றும் வெளியீடுகள்**

“வேலையில் பெண்கள்” என்று தலைப்பிடப்பட்ட ஆய்வுக் கருத்தரங்கொன்று வெற்றிகரமாக ஒழுங்கமைக்கப்பட்டு, 2021 மார்ச் 15 ஆம் திகதி நடத்தப்பட்டிருந்தது. இறுதிச் சுற்றுக்காக தெரிவுசெய்யப்பட்ட 10 ஆய்வுத் தாள்களின் ஆய்வாளர்களுக்கு அவர்களது முன்னளிக்கையை மேற்கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. இறுதி 10 ஆய்வுத் தாள்களின் மென்பிரதிகளின் தொகுப்பு தே.தொ.க.நிறுவகத்தின் இணையத் தளத்தில் அண்மையில் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்ததுடன், ஆர்வமுள்ள வெளித்தரப்புக்களுக்கும், பெண்களின் உழைப்பின் பங்களிப்பு அதிகளவிலுள்ள நிறுவனங்களுக்கும் மென்பிரதிகளைக் கொண்டிருக் கின்ற இறுவெட்டுக்களை வழங்குதவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.


### 2.2.12 தொழில்சார் விபத்துக்களுக்கான நட்டஈட்டைச் செலுத்துதல்

தொழிலின் நிமித்தம் காயமடைந்து, தொழிலின் தன்மை காரணமாக ஏற்பட்டுள்ள நோயினால் துன்புறுகின்ற நட்டஈடு செலுத்த வேண்டியுள்ள வேலையாட்களுக்கு நட்டஈடு செலுத்துவதே வேலையாளர் நட்ஈட்டு ஆணையாளர் அலுவலகத்தின் பிரதான குறிக்கோளாகும்.

1. 2021 ஆம் ஆண்டில் உயிராபத்தை ஏற்படுத்திய மற்றும் உயிராபத்தை ஏற்படுத்தாத விபத்துக்களின் எண்ணிக்கை




**வரைபடம் 2-6** 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட உயிராபத்தை ஏற்படுத்திய விபத்துக்களின் எண்ணிக்கை




**வரைபடம் 2-7** 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட உயிராபத்தை ஏற்படுத்தாத வீதி விபத்துக்களின் எண்ணிக்கை

2. அறிக்கையிடப்பட்டுள்ள உயிராபத்தை ஏற்படுத்திய மற்றும் உயிராபத்தை ஏற்படுத்தாத விபத்துக்களின் தன்மை

**அட்டவணை 2-15** உயிராபத்தை ஏற்படுத்திய மற்றும் உயிராபத்தை ஏற்படுத்தாத விபத்துக்களின் தன்மை


| துறை | உயிராபத்தை ஏற்படுத்திய விபத்துக்களின் எண்ணிக்கை | உயிராபத்தை ஏற்படுத்தாத விபத்துக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| உயரமான இடத்திலிருந்து விழுதல் | 20 | 18 |
| மின்னூட்டம் | 08 | 03 |
| தீ / இரசாயனங்கள் / கழிவுகள் | 02 | 09 |
| வீதி விபத்துக்கள் | 57 | 25 |
| விலங்குகளிடமிருந்து | 06 | 05 |
| பொருட்கள் விழுந்தமையால் ஏற்பட்ட விபத்துக்கள் | 13 | 08 |
| நோய்கள் | 13 | - |
| நீரில் மூழ்குதல் | 04 | - |
| இயற்கையான விபத்துகள் | 02 | - |
| இயந்திரமும் கைநழுவுதலும் | 05 | 28 |
| ஏனைய விபத்துகள் | 27 | 82 |
| தாக்குதல்கள் / காயங்கள் | - | 02 |
| **மொத்தம்** | **157** | **180** |

3. உயிராபத்தை ஏற்படுத்தாத விபத்துக்களால் ஏற்பட்ட சேதத்தின் தன்மை

**அட்டவணை 2-16** அறிக்கையிடப்பட்டுள்ள உயிராபத்தை ஏற்படுத்தும் மற்றும் உயிராபத்தை ஏற்படுத்தாத விபத்துக்களின் தன்மை

| துறை | விபத்துக்களின் எண்ணிக்கை |
|---|---|
| தற்காலிக சிறிய காயங்கள் | 53 |
| எரிகாயங்கள் | 10 |
| விரல்களை இழந்தமை | 23 |
| முறிவுகள் | 37 |
| கையின் ஒரு பகுதி / உள்ளங்கையின் ஒரு பகுதி ஊனமுற்றிருத்தல் | 18 |
| முதுகெலும்பு / முள்ளந்தண்டு சேதங்கள் | 17 |
| கை / கால் இழப்புகள் | 7 |
| கண்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் | 5 |
| ஏனையவை | 10 |
| **மொத்தம்** | **180** |

4. சுற்று நீதிமன்றங்களுக்கு அறக்கையிடப்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை




**வரைபடம் 2-8** சுற்று நீதிமன்ற பகுதிகளில் பதிவான விபத்துக்களின் எண்ணிக்கை - 2021

## 5. நட்டஈட்டுக் கொடுப்பனவு பற்றிய முன்னேற்றம்

அட்டவணை 2-17 நட்டஈட்டுக் கொடுப்பனவு பற்றிய பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் - 2021

| செயற்பாடு | பௌதீகம் | | நிதி (ரூபா.மில்.) | |
|---|---|---|---|---|
| | எதிர்பார்க்க-ப்பட்ட எண். | உண்மையான எண்ணிக்கை | எதிர்பார்க்க-ப்பட்ட எண். | எதிர்பார்க்க-ப்பட்ட எண். |
| உயிராபத்தை ஏற்படுத்தும் மற்றும் ஏற்படுத்தாத விபத்துக்கள் தொடர்பபில் நிறைவுசெய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 360 | 277 | 120 | 178.8 |
| உடன்படிக்கைகள் | 90 | 58 | 9 | 4.4 |
| பராயமடையாதோர் சார்பாக திறக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | 100 | 155 | 30 | 19.5 |
| விடுவிக்கப்பட்ட பராயமடையாதோர் கணக்குகளின் எண்ணிக்கை | 132 | 95 | 17.1 | 23.8 |

### 2.2.13 அரச மற்றும் தனியார் துறைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்

தேசிய உற்பத்தித்திறன் செயலகம் இலங்கையில் அரச மற்றும் தனியார் துறைகளில் வினைத்திறன் மிக்க மற்றும் தரமான சேவைகளை வழங்குவதை இலக்காகக் கொண்ட உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது. சேவை நாடுநர்கள் நிறுவனத்தின் வளாகத்திற்குள் செலவிடும் நேரத்தைக் குறைப்பதற்கு பொருத்தமான பொறிமுறைகளை உருவாக்குல், நிறுவனத்தின் பயனுறுதியையும் வினைத்திறனையும் அதிகரிப்பதன் மூலம் அதிகளவு திருப்திக்காகவும் பயனுள்ள வாடிக்கையாளர் சேவை செயன் முறைகளுக்காகவும் தற்போது விருத்தி செய்யப்படுகின்ற இந்த உரிய செம்மைப்படுத்தல் களானவை, செயல் முறைகளை பகுப்பாய்வு செய்தல், வாடிக்கையாளர் மற்றும் பணியாளர் திருப்தி பற்றிய கணக்கெடுப்பினை நடத்துதல், உயர் முகாமைத்துவம் மற்றும் பணியாட் டொகுதியினருடன் கலந்துரையாடல்களை நடத்துதல் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு செயன்முறை திருத்தங்களுடன் கூடிய அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2021 ஆம் ஆண்டில் நிறுவனத்தால் அடையப்பெற்ற முன்னேற்றம் கீழே வெளிக்காட்டப்பட்டுள்ளன.

1. **செயற்றிட்டத்திலுள்ள உரிய செயற்பாடுகளின் முன்னேற்றம்**

**விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

- **பிரதமர் அலுவலகத்திற்கான விசேட நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்**
  பிரதமர் அலுவலகத்திற்காக இணையவழி உற்பத்தித்திறன் சான்றிதழ் கற்கைநெறியொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. அதனுடன் தொடர்புடைய பரீட்சைகள் பூர்த்திசெய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. இந்த சிறப்பு நிகழ்ச்சி 42 பேரின் பங்கேற்புடன் நடத்தப் பட்டிருந்தது.

- **இலங்கை வங்கியின் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துக் கிளை களுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்**

இலங்கை வங்கியின் கிளைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறன்மிக்க மற்றும் தரமான சேவைகளை வழங்குவதை உறுதி செய்வதற்காக நாடளாவியரீதியில் உள்ள இலங்கை வங்கியின் 705 கிளைகளில் உற்பத்தித்திறனை ஊக்குவித்தல் மற்றும் ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

- **இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அதிகாரத்தின் கீழுள்ள நிறுவனங்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்**

நிறுவனம்சார் மற்றும் தனிப்பட்ட வினைத்திறன் ஊடாக பொதுமக்களுக்கு ஆக்கத்திறன்மிக்க சேவையை வழங்குவதற்காக, இலங்கை போக்குவரத்து சபையின் கீழ் உள்ள 107 பணிமனைகள், 4 வாகனம் செலுத்துவதற்கு கற்கும் பாடசாலைகள் மற்றும் 9 பிராந்திய பயிற்சிப்பட்டறைகளில் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டிருந்தன.

**துறைசார் நிகழ்ச்சித்திட்டங்கள்**

- **பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்**

அட்டவணை 2-18 தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழச்சித்திட்டங்கள்

| | கற்கைநெறி | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | செலவீனம் (ரூபா.மில்.) | வருமானம் (ரூபா.மில்.) |
|---|---|---|---|---|
| 1 | உற்பத்தித்திறன் மீதான டிப்புளோமா கற்கைநெறி | 01 | 0.35 | 1.66 |
| 2 | எஸ் 5 சான்றிதழ் கற்கைநெறிகள் | 21 | 0.08 | 0.04 |
| 3 | குறுகிய கால கற்கைநெறிகள் | 05 | 0.14 | |
| 4 | சான்றிதழ் கற்கைநெறிகள் | 24 | 0.65 | |
| 5 | பயிற்சியளிப்பவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 3 | | |

- ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் தலையீட்டுடன், மூன்று தொழில்நுட்ப நிபுணர் சேவைகள் நடத்தப்பட்டிருந்தன.

  சேவைத் துறைக்கான ஸ்மார்ட் உருமாற்றம்.
  செயலாற்றுகை முகாமைத்துவம்
  அரச துறைக்கான பெரிய தரவு.

- இணையவழி நவநாகரீக பேச்சு அமர்வினை நடத்துதல்.

வெற்றிகரமான வாழ்க்கைக்குத் தேவையான உற்பத்தித்திறன் கருத்துக்கள் மற்றும் நடைமுறைப் பயன்பாடுகள் பற்றிய அறிவை வழங்குவதற்காக "நவநாகரீக பேச்சு" என்ற தலைப்பில் 7 இணையவழி அமர்வுகள் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டிருந்தன. முதல் கட்டத்தின் கீழ், "உற்பத்தித்திறனூடான வெற்றி, நிலையான வீட்டு தோட்டக்கலை, தொற்று நோய் பரவலில் கலை நுகர்வு மற்றும் கோவிட் -19 தொற்றுநோயை எதிர்கொள்ளும் நேர்மறையான சிந்தனை" என்ற தலைப்புகளின் கீழ் அமர்வுகள் நடத்தப்பட்டிருந்தன. இரண்டாவது கட்டத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி பற்றிய அறிவை வளர்ப்பதற்காக "உற்பத்தித்திறன் மற்றும் தொழில்முயற்சியாண்மை" என்ற தலைப்பின் கீழ் 3 அமர்வுகள் நடத்தப்பட்டிருந்தன. மொத்தம் 435 இணையவழிப் பங்கேற்பாளர்கள் இணையவழி அமர்வுகளில் இணைந்திருந்தனர்.

- உற்பத்தித்திறனைச் செம்மைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

உற்பத்தித்திறன் கருவிகள் மற்றும் தொழில் நுணுக்கங்கள் மற்றும் நடைமுறைப் பாவனை பற்றிய விழிப்புணர்வின் ஊடாக நிறுவனங்களில் உற்பத்தித்திறன் கருத்தாக்கங்களைப் பதிய வைப்பதனூடாக நாடு பூராவும் உள்ள நிறுவனங்களில் உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் பரப்பும் குறிக்கோளுடன் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இது, செயன்முறைகளை தரமுயர்த்துவதனால் நிறுவனம்சார் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதனூடாக சேவை வினைத்திறனை அதிகரிப்பதற்கு அவசியமான பின்னணியை உருவாக்குகின்றது. 2021 ஆம் ஆண்டில், பின்வரும் நிறுவனங்களுக்காக உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

- லொத்தர் அபிவிருத்தி சபை
- பௌத்த அலுவல்கள் திணைக்களம்
- சுற்றுலாத்துறை அமைச்சு
- சமூக சேவைகள் திணைக்களம்
- இலங்கை தேசிய வைத்தியசாலை
- நீதி அமைச்சு
- மதுவரித் திணைக்களம்
- சிரம வாசனா நிதிய அலுவலகம்
- பதிவாளர் நாயக அலுவலகம்
- புனரமைப்பு ஆணையாளர் அதிபதி பணியகம்
- தொழில்நுணுக்க கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்
- தென்னை அபிவிருத்தி அதிகாரசபை
- ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய தலைமை அலுவலகம்
- அபிவிருத்தி லொத்தர் சபை
- சிறுவர்கள் செயலகம்
- இலங்கை ஆயுர்வேத மருந்தகக் கூட்டுத்தாபனம்
- சிறுவர் முற்பராய அபிவிருத்தி அதிகாரசபை
- இராஜகிரிய சனாதிபதி கல்லூரி
- தேசிய மனித வளங்கள் அபிவிருத்தி நிறுவகம்
- மேல் மாகாண கல்வித் திணைக்களம்
- தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப திணைக்களம்

- **பிரிவீனாக்களுக்கு தர குறிகாட்டிகளை அறிமுகப்படுத்துதல்**

பிரிவீனா கல்வியின் குறிக்கோள்களை உணர்ந்து கொள்வதற்காக பிரிவீனா முறைமைக்கு உற்பத்தித்திறன் எண்ணக்கருக்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் 2021 ஆம் ஆண்டில் 187 பிரிவீனாக்களுக்கும், பௌத்தம் அல்லாத 15 பிரிவீனாக்களுக்கும் தர குறிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

- **சிறிய அளவிலான தொழில் முயற்சியாளர்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து 20 தொழில் முயற்சியாளர்களுடன் 6620 தொழில் முயற்சியாளர்கள் பற்றிய உரிய தகவல்கள் தெரிவுசெய்யப்பட்டு, சேகரிக்கபட்டு இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பயனாளிகளைத் தெரிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்கள் மற்றும் பெண் தொழில்முயற்சியாளர்களுக்காக பதின்மூன்று (13) பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டு, அதன்மூலம் 93% பௌதீக முன்னேற்றம் பதிவுசெய்யப்படுகின்றது. அனைத்து விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும், 'சூம்' தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், கோவிட்-19 தொற்றுநோய் காலப்பகுதியிலும்கூட எதுவித தடங்கலுமின்றி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ச்சியாக நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

- **உற்பத்தித்திறன் மேம்பாட்டு அலுவலர்களை இலக்கு வைத்து உருவாக்குவதன் ஊடாக நிறுவனங்களில் உற்பத்தித்திறன் எண்ணக்கருவை நடைமுறைப்படுத்துதல்.**

மாவட்ட செயலகங்களுக்கு மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள உற்பத்தித் திறன் மேம்பாட்டு அலுவலர்களுக்குரிய வருடாந்த இலக்குகளை உருவாக்கி, உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் நிறுவனங்களுக்குள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள், புத்தாக்கம், பயனுறுதி, ஆக்கத் திறனுள்ள வேலைச் சூழல் என்பவற்றின் ஊடாக உச்சளவிலான சமூக சேவை என்பதாகும். மாவட்ட செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர்களுக்கு பின்வரும் நிறுவனங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தையும் நடத்துவதற்கான இலக்குகள் வழங்கப்பட்டுள்ளன.

- வைத்தியசாலைகள்
- காணிப் பதிவிடம்
- வலய கல்வி அலுவலகம்
- மாவட்ட செயலகம்
- நீதிமன்றங்கள் / பொலிஸ் நிலையங்கள்
- தனியார் துறை நிறுவனங்கள்

பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள உற்பத்தித்திறன் மேம்பாட்டு அலுவலர்களுக்கு ஒவ்வொரு அரச துறை நிறுவனங்களிலும் மற்றும் பிரிவீனாக்களிலும் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தையும், முன் பள்ளிகளில் இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்குமான இலக்குகள் வழங்கப்பட்டுள்ளன.

**வருவாயை உருவாக்குதல்**

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திற்கு 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடத்தப்பட்ட செயற்பாடுகளிலிருந்து 2.5 மில்லியன் ரூபாவினை வருமானமாக உருவாக்கக்கூடியதாகவிருந்தது.

**அட்டவணை 2-19** தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் வருவாய் உருவாக்கம்

| வருவாய் உருவாக்கத்திற்கு பங்களிப்பு செய்துள்ள துறைகள் | உருவாக்கப் பட்டுள்ள வருவாய் (ரூபா.மில்.) |
|---|---|
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினூடாக (டிப்புளோமா கற்கை நெறிகள், குறுகிய கால மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகள்) | 1.70 |
| எஸ் 5 சான்றிதழ் கற்கைநெறிகள் | 0.05 |
| உள்ளூராட்சி அலுவலர்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சி கற்கை நெறிகள் | 0.15 |
| தேசிய உற்பத்தித்திறன் செயலக விருதுகள் வைபவம் 2020 தொடர்பான செயற்பாடுகளிலிருந்து மற்றும் வெளியீடுகளை விநியோகிப்பதிலிருந்து | 0.60 |
| **மொத்தம்** | **2.5** |



கோவிட்-19 தொற்றுநோய்க்காக நடைமுறைப் படுத்தப்பட்ட சுகாதார, பாதுகாப்பு வழிகாட்டல்கள் (பொதுமக்கள் ஒன்றுகூடுதல், வீட்டிலிருந்து பணியாற்றுதல் போன்றவை) 2021 செப்ரெம்பர் வரை கைக்கொள்ளவேண்டியிருந்தமையால், தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் கீழ் வருகின்ற சில நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தமுடியவில்லை. இயலுமானவரையில் இணையவழி முறைகள் பின்பற்றப்பட்டிருந்த போதிலும், சில நிறுவனங்கள் இந்த முறையினூடாக கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கும், ஆலோசனைச் சேவைகளைப் பெறுவதற்கும் மறுத்திருந்தன.

### 2.2.14 சீரிய வேலைத்திட்ட நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை அபிவிருத்திக்கான பாதையை அடைவதற்கு சீரிய சேவை மேம்படுத்தப்பட வேண்டியிருக்கின்றது. இச்செயன்முறையின் கீழ், பணியாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்து கையில், சுதந்திரம், சமத்துவம், சமூகப் பாதுகாப்பு மற்றும் மனித கௌரவத்துடன் கூடிய சூழலொன்றில் ஆக்கத்திறனுள்ள வேலையைப் பெறுவதற்கு ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சமத்துவமான வாய்ப்புகளை சீரிய வேலை பேணுகின்றது. சீரிய வேலையுடன் தொடர்புபட்டுள்ள முக்கியமான காரணி வெறுமனே தொழிலை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கவில்லை என்பதுடன், அவ்வாறு உருவாக்கப்பட்ட தொழில்கள் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். முக்கியமான சீரிய வேலைத் திட்டநிகழ்ச்சித்திட்டம் நான்கு பிரதான கூறுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

- தொழிலை உருவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் தேசிய உற்பத்தித்திறன்
- வேலையில் உரிமைகள்
- சமூகப் பாதுகாப்பு
- சமூகக் கலந்துரையாடல்

இந்த பிரதான 4 ஆக்கக்கூறுகளுக்கும் மேலதிகமாக, பின்வருகின்ற விடயப் பரப்புகளை உள்ளடக்கியும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

- ஆக்கத்திறனை மேம்படுத்துதல்.
- பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்துதல்.

சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பின்வருகின்ற நிறுவனங்களுக்கு 33 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2-20** 2020.09.30 ஆம் நாளன்று சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் பின்வருமாறுள்ளது.

| நிறுவனம் | தேறிய ஒதுக்கீடு (ரூபா) | செலவீனம் (ரூபா) | செலவினம் வீதத்தில் (%) |
|---|---|---|---|
| தொழில் திணைக்களம் | 15.92 | 11.81 | 74% |
| தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | 10.14 | 10.14 | 100% |
| தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | 1.35 | 1.35 | 100% |
| தொழில் அமைச்சு | 3.38 | 3.38 | 100% |
| வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் | 2.09 | 2.09 | 100% |
| **மொத்தம்** | **32.88** | **28.77** | **87%** |
| திறைசேரியின் அறிவுறுத்தல்களின் பேரிலான சேமிப்புகள் | 12.12 | | |
| **ஒட்டுமொத்தம்** | **45.00** | | |

### 2.2.15 சிறந்த சேவையை வழங்குவதற்காக நிறுவனங்களைப் பாராட்டுதல்

**1. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகைமை விருது**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகைமை விருதுகள் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் பணிச் சூழலில் தேவையான சுகாதார மற்றும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள நிறுவனங்களை அங்கீகரித்து வெகுமதி வழங்கும் நோக்குடன் இரண்டு வருடத்திற்கு ஒருமுறை ஏற்பாடு செய்யப்படுகின்றன. தோழிலசார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கான சிறந்த முறைகளைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகள், விருது பெறுபவர்களால்

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கான மொத்த அர்ப்பணிப்பை அடையாளம் காண உதவுகின்ற தொகுதி செயல்முறையொன்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றன, இது சிறப்பு விருதுகள், துறைசார் விருதுகள் மற்றும் தகைமை விருதுகள் என மூன்று பிரிவுகளாக விருதுகள் வழங்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள விருது வழங்கும் வைபவத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

**2. தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் வைபவம்**

தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் வைபவம், உரிய சேவைநாடுநர்களுக்கு மிகவும் உற்பத்தித்திறன் மிக்க சேவைகளை வழங்குகின்ற அரச, பகுதியளவிலான அரச மற்றும் தனியார் துறைகளில் உள்ள நிறுவனங்களை கௌரவிப்பதற்காக தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடத்தப்படுகின்றது.

விருது வழங்கும் விழாவிற்கு 2020 ஆம் ஆண்டில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அரச, உற்பத்தி மற்றும் சேவைத் துறை நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளிலிருந்து 1,820 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்தன. மேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் 2022.03.28 ஆம் திகதி இந்த வைபவத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 2.2.16 திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள்

**1. தொழில் அமைச்சு**

I. இந்த அமைச்சானது, தளத்திலிருக்கின்ற பிரச்சனையொன்று பற்றி வருடாந்த புலமைசார் கருத்தரங்கொன்றினை ஒழுங்கமைத்து, அதனுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆய்வுத் தாள்களின் பொழிப்பினை கூட்டிணைத்து சஞ்சிகையொன்றினை பிரசுரிக்கின்றது. இதன்படி, 2021 ஆம் ஆண்டில் ஆய்வுத் தாள்கள் “தொழில் புரிபவர்களின் உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்” என்ற கருப்பொருளில் வரவேற்கப்பட்டுள்ளதுடன், தொழில் துறையில் ஆழ்ந்த அறிவுடைய நிபுணத்துவ குழாத்தினால் ஆய்வுத் தாள்கள் மதிப்பிடப்பட்டதன் பின்னர், அவை சஞ்சிகையாகப் பிரசுரிக்கப்படுகின்றன. தற்போது நாட்டில் நிலவுகின்ற நிலைமை காரணமாக, கருத்தரங்கினை நடத்தாது சஞ்சிகை மாத்திரமே பிரசுரிக்கப்படவுள்ளது.

II. ‘சீரிய வேலை’ நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அனைத்து ஒருங்கிணைப்பு செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றது.

III. இலங்கை தொழில் செய்திமடலின் பிரசுரிப்புடன் தொடர்புபட்டுள்ள அனைத்து விடயங்களையும் கையாளுதல். இதன்படி, ஆண்டுக்கு இரண்டு தரம் பிரசுரிக்கப்படுகின்ற தொழில் செய்திமடல் தற்போது ஆய்வாண்டுக்கான காலப்பகுதிக்கு தொடர் இலக்கம் 72 இன் தொகுதி I வெளியிடப்பட்டுள்ளதுடன், தொகுதி II வெளியிடு வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

IV. அமைச்சு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்களால் ஆற்றப்படுகின்ற அபிவிருத்திப் பணிகளை உள்ளடக்கியிருக்கின்ற வருடாந்த செயற்றிட்டங்களைத் தயாரித்தல் மற்றும் இத்திட்டங்களை உரிய தரப்பினருக்கு அனுப்புதல். செலவுகளற்ற வரவுசெலவுத்திட்டத்திற்கமைவாக வருடாந்த செயற்றிட்டத்தைத் தயாரித்து அதனை நடைமுறைப்படுத்துவதும், மாதாந்த முன்னேற்ற மதிப்பீடுகளை நடத்தி இலக்குகளை அடைவதை கண்காணித்தலும், ஊக்குவித்தலும்.

V. தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றிக்கை நியதிகளின்படி, சனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, கருத்திட்ட முகாமைத்துவ, கண்காணிப்புத் திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றுடனான ஒருங்கிணைப்புடன், மாதாந்த மற்றும் காலாண்டு செயலாற்றுகை அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

VI. அமைச்சினால் அடையப்பட்ட முன்னேற்றங்களை விபரிக்கின்ற வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல்.



VII. 2022 ஆம் ஆண்டுடன் தொடர்புபட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு வரவுசெலவுத் திட்டத்திற்காக பாராளுமன்ற குழு நிலை விவாதத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தல்.

**2. தொழில் திணைக்களம்**

**1. திணைக்களத்தின் தொழிற்பாடுகளைக் கண்காணிப்பதன் மூலம் இலக்குகளை நோக்கிச் செல்வதற்கு வழிகாட்டுதல்**

திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவின் பிரதான தொழிற்பாடுகள், திணைக்களத்தின் வருடாந்த செயற்திட்டத்தையும் மூலோபாயத் திட்டத்தையும் வரைதல், அனைத்துப் பிரிவுகளுக்கும் வழிகாட்டுவதற்கான செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல், திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள், அதன் கீழ் இலக்குகளை அடைவதற்காகவும், பல்வேறு பிரிவுகளின் முன்னேற்றம் குறித்து கலந்துரையாடுவதற்காகவும் நடாத்தப்படும் தொழில் ஆணையாளர்களின் மாதாந்த கூட்டத்தின் அலுவல்களை ஒருங்கிணைப்பதற்காகவும், திணைக்களத்தின் திட்டமிடப்பட்ட எதிர்காலச் செயற்பாடுகள், தொழில் அமைச்சினால் மாதாந்தம் கூட்டப்படுகின்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்திற்கான மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அத்தகைய கூட்டங்களை ஒருங்கிணைத்தல், தொழில் அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுக்களினால் கோரப்படும் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் ஆகியவையாகும்.

இப்பிரிவானது, திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகளை வழிநடத்துவதற்கான பொறுப்பைக் கொண்டிருப்பதுடன், அதன் கீழுள்ள பிராந்திய அலுவலகங்களின் வருடாந்த முன்னேற்ற மீளாய்வுத் திட்டத்தைத் தயாரித்து கண்காணித்தலும் இப்பிரிவினால் கையாளப்படுகின்றது. வலயங்களுக்குப் பொறுப்பான பிரதித் தொழில் ஆணையாளர்கள் முன்னேற்ற மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு, ஒவ்வொரு வலய அலுவலகத்திற்கும் கண்காணிப்புக் குழுக்கள் மூலம் முன்னேற்றம் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

திணைக்களத்தின் ஒட்டமொத்தப் பணியாட்டொகுதியினருக்கும் தேவையான பயிற்சிகளை வழங்குதல், வெளிநாட்டு நிறுவனங்களினால் நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அலுவலர்களை பரிந்துரைத்தல், பட்டங்களுக்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்தல் மற்றும் பட்டப்பின்படிப்புப் பட்டங்கள், பணியாளர்களைத் தொடர்ந்து வெளிநாட்டுப் பயிற்சிக்குத் தேவையான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் என்பன இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற மனிதவள அபிவிருத்திப் பணிகளாகும்.

மேலும் இப்பிரிவானது, தொழில் சட்டங்கள் தொடர்பான சட்டங்களை பதிப்பிடுதல் மற்றும் திணைக்கள அலுவலர்களுக்குத் தேவையான சம்பளச் சபைகளின் தீர்மானங்கள் மற்றும் தொழில் அலுவலர்களின் களச் செயற்பாடுகளுக்குத் தேவையான தொழில் பரிசோதனை அறிக்கைகள், மாதாந்த நாட்குறிப்புகள் மற்றும் பொதுப் படிவங்களை அச்சிடுதல் போன்ற அச்சிடும் செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றது.

- **மாவட்ட/உப தொழில் அலுவலகங்களை கண்காணித்தல்**

2021 ஆம் ஆண்டில், 57 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் உப தொழில் அலுவலகங்களின் முன்னேற்றம் கண்காணிக்கப்பட்டிருந்தது. இதன்படி, தொழில் அலுவலர்களின் களப் பரிசோதனை நடவடிக்கைகள் மற்றும் நீதித்துறை செயற்பாடுகள், நிலுவையிலுள்ள ஊ.சே.நி.யை மீளப்பெறும் செயன்முறை மற்றும் ஊ.சே. நி. அனுகூலங்களை கொடுப்பனவு செய்தல் தொடர்பான செயற்பாடுகள், கைத்தொழில் பிணக்குகள் தொடர்பான முறைப்பாடு களை வினைத்திறன்மிக்க முறையில் தீர்த்தல் மற்றும் திணைக்களத்தினால் பெறப்பட்ட நியதிச்சட்ட உரிமை மீறல்கள் மற்றும் அலுவலகங்களின் நிருவாக செயற்பாடுகள் என்பன கண்காணிக்கப்பட்டு, மேலும் நெறிப்படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டிருந்தன.

கோவிட் -19 தொற்றுநோய் காரணமாக, பிராந்திய தொழில் அலுவலகங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கு 2021 ஆம் ஆண்டில் வலய அளவிலான கூட்டங்களை நடத்த முடியவில்லை.


- **தொழில் அலுவலர்களின் களப் பரிசோதனைகள்**

களப் பரிசோதனைகள், அவற்றுக்கான அனுமதியைப் பெறுதல், களப் பரிசோதனை

களில் முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டிய நிறுவனங்களைத் தெரிவு செய்தலும் உதவித் தொழில் ஆணையாளரிடமிருந்து அனுமதி பெறுதலும், களப் பரிசோதனைகளின் தரத்தை வகைப்படுத்துதல், உரிய திகதியில் தொழில் ஆணையாளரால் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் மற்றும் இந்த அறிக்கைகளாலும் செய்யப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைபடுத்துதல் ஆகியவை ஆற்றப்பட்டுள்ளதுடன், இதன்படி அவற்றின் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடத்தப்பட்ட தொழில் பரிசாதனைகளில் நிலையான அதிகரிப்பொன்று காணப்பட்டபோதிலும், குறிப்பிட்ட சில மாதங்களில் தொழில் பரிசோதனைகள் முற்றாக நிறுத்தப்பட்டமையாலும், ஏனைய மாதங்களில் மட்டுப்படுத்தல்கள் விதிக்கப்பட்டிருந் தமையாலும். 2020 ஆண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடுமிடத்து 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடத்தப்பட்ட தொழில் பரிசோதனைகள் குறைவானதாகும்.

**கடந்த ஆறு ஆண்டு காலப்பகுதியில் நடத்தப்பட்ட தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கை**




**வரைபடம் 2-9** 2016 முதல் 2021 வரை நடத்தப்பட்ட தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கை

- **சே.நி. அனுகூக் கொடுப்பனவுகள்**


ஊ.சே.நி. அனுகூலங்களை செலுத்துவதில் ஊக்குவிப்புசார் அதிகரிப்பு காணப்படுவதுடன், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 14 நாட்களுக்குள் நன்மைகள் செலுத்தப்பட்டவர்களின் சதவீதம் 2021 ஆம் ஆண்டிறுதியளவில் அனுகூலக் கொடுப்பனவுகளில் அதிகரித்த பயனுறுதியைக் காட்டி வரைபு 2-7 இல் தரப்பட்டவாறு 43% இலிருந்து 65% ஆக அதிகரித்துள்ளது.

- **மேன்முறையீடுகள் தொடர்பான செயற்பாடுகள்**

ஒவ்வொரு மாவட்டத்திலும், உப அலுவலகங்களிலும் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கான செயன்முறையில் ஏற்படும் காலதாமதங்கள் மற்றும் தீர்வு தாமதமாகியுள்ள கோப்புகளின் எண்ணிக்கை என்பவற்றைக் கண்டறிந்து அவற்றை விரைவாகக் கையாள்வதற்கு உரிய அறிவுறுத்தல்களும் பரிந்துரைகளும் வழங்கப்பட்டிருந்தன. திணைக்களத்தால் பெறப்பட்ட மனுக்களைக் கையாள்வதற்காக 2021 நவம்பர் முதல் நிலையானதொரு தொழிற்பாட்டு நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதன் முன்னேற்றம் 2022 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேபோன்று, அனைத்து மாவட்ட மற்றும் உப அலுவலகங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக தொழில் ஆணையாளர் அதிபதி தலைமையில் இணையவழிக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.






**வரைபடம் 2-10** ஊ.சே.நி அனுகூலங்களைச் செலுத்துவதற்காக எடுத்த நேரம் - 2017 – 2021

## II. மனித வளங்கள் அபிவிருத்தி

திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கு அலுவலர்களின் இயலுமையை விருத்தி செய்வதன் மூலம் திணைக்கள அலுவலர்கள் ஆற்ற வேண்டிய வகிபாகங்கள் மற்றும் நடைமுறைரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அவர்களின் திறன் பற்றிய அறிவை விருத்தி செய்தல் இன்றியமையாததாகும். இதற்கமைவாக, திணைக்களமானது அலுவலர்களின் பயிற்சித் தேவைகளை இனங்கண்டு வளவாளர்களின் உதவியுடன் தேவையான பயிற்சிகளை வழங்குகின்றது. இதற்கு மேலதிகமாக, வெளிநாட்டு நிறுவனங்களினால் நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு வெளிநாட்டுப் பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெறும் போதெல்லாம் தேவையான ஒருங்கிணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிதி ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்படு கின்றன.

02/2018 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை நியதிகளின்படி, எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கான திணைக்களத்தின் மனிதவள அபிவிருத்தித் திட்டம் 2020 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு, இதற்கிணங்க 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

2021 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்கள் பின்வருமாறு. இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய மேலதிக விபரங்கள் மனித வள அபிவிருத்தியின் கீழ் ஆறாம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளன.

தொழில் திணைக்களமானது, அலுவலர்களுக்கு 19 பயிற்சி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடாத்தியிருந்ததுடன் அவற்றில் பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை 2328 ஆகும். திணைக்களத்தின் 69 அலுவலர்களுக்கு பட்டப்பின்படிப்பு மற்றும் சட்டப்பட்டங்கள் உள்ளிட்ட வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக திணைக்களம் ஏற்பாடுகளை ஒதுக்கியுள்ளது.

**அட்டவணை 2-21** 2021.12.31 இல் இயலுமையை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகளுக்கான ஒட்டுமொத்த செலவீனம் - 2021

| செலவினத் தலைப்பு | ஆண்டுக்கான ஏற்பாடு 2021 (ரூபா) | 2021.21.31 இலுள்ளவாறு செலவினம் (ரூபா) | 2021.21.31 இலுள்ளவாறு நிலுவை (ரூபா) | ஏற்பாடுகளின் செலவீனம் |
|---|---|---|---|---|
| 221-01-01-2401 | 5,500,000 | 2,232,264 | 3,267,736 | 41% |
| 221-02-02-2401 | 300,000 | - | 300,000 | 0% |
| 221-02-03-2401 | 1,500,000 | 103,500 | 1,396,500 | 7% |
| 221-02-04-2401 | 1,500,000 | 19,790 | 1,480,210 | 1% |
| **மொத்தம்** | **8,800,000** | **2,355,554** | **6,444,446** | **27%** |

### 2.2.17 புள்ளிவிபரவியல் செயற்பாடுகள்

இலங்கையின் தொழில் துறைசார் புரிதலை விருத்திசெய்வதற்கும், கொள்கைரீதியான தீர்மானங்களை எடுப்பதற்கும், தொழில் சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கான தேவையை இனங்கண்டறிவதற்கும், எதிர்காலத்திற்கான கணிப்பீடுகளை உருவாக்குவதற்கும் தொழில் துறையுடன் தொடர்புடைய தரவுகளைச் சேகரித்தலும் பகுப்பாய்வு செய்வதும் திட்டமிடல் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவின் தொழில் ஆணையாளரின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற புள்ளிவிபரப் பிரிவின் பிரதான பணிகளாகும். இதன்படி, 2021 ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

I. தொழில் புள்ளிவிபரங்கள் - 2019 (ஆண்டறிக்கை) - அறிக்கையின் 150 பிரதிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டிருந்தன.
II. தொழில் புள்ளிவிபரங்கள் -2020 (ஆண்டறிக்கை) தயாரிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது.
III. வேலை செய்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை மற்றும் தொழில் செலவு-2020 பற்றிய கணக்கெடுப்பு தொடர்பான தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, இறுதி வடிவம் பெற்று, அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
IV. வேலை செய்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை மற்றும் தொழில் செலவு -2021 தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக கேள்வித் தாள்கள் தயாரிக்கப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.
V. தொழில் செய்திமடலுக்குத் தேவையான தரவுகள் வழங்கப்பட்டன.
VI. குறைந்தபட்ச ஊதிய விகித சுட்டெண்ணுக்கான தரவுகளைச் சேகரித்தல் மற்றும் சுட்டெண்ணைத் தயாரித்தல் என்பவை மேற்கொள்ளப்பட்டிருந்தன.
VII. குறைந்த பட்ச சம்பள விகித சுட்டெண்ணுக்கான தரவு களைச் சேகரித்தல் மற்றும் சுட்டெண்ணைத் தயாரித்தல் என்பவை மேற்கொள்ளப் பட்டிருந்தன. 2020 ஆம் ஆண்டிற்கான அனைத்து பதிவுகளையும் புதிய ஊ.சே.நி பதிவுகளை கணினி மயமாக்குவதற்காக வடிவமைக்கப்பட்ட தரவு முறைமைக்கு குறியீடு இடல் மற்றும் கணினிமயமாக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.
VIII. சர்வதேச தொழில் தாபனத்தின் நியமங்களுக்கு உட்பட்டு, 14 தொழில் சந்தையின் முக்கிய குறிகாட்டிகளை (KILM) தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### 2.2.18 நிருவாக மற்றும் தாபனச் செயற்பாடுகள்

#### 1 தொழில் அமைச்சு

I. இந்த அமைச்சு 2021 ஆம் ஆண்டில் 26 அமைச்சரவை விஞ்ஞாபனங்களை அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்ததுடன், 26 விஞ்ஞாபனங்களும் அங்கீகரிக்கப் பட்டிருந்தன. அவற்றில் விதப்புரைகள் 205 மற்றும் 206 மற்றும் சமவாயம் 190 இனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல், புலம்பெயர்ந்த இலங்கை பணியாளர்களுக்காக சமூகப் பாதுகாப்பு நிதிய மொன்றைத் தாபித்தல், கோவிட் -19 தொற்றுநோயால் ஏற்பட்ட நெருக்கடியை அடுத்து தனியார் துறை ஊழியர்களுக்கு சம்பளங்களை வழங்குதல், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச சம்பளத்தை அதிகரித்தல், தனியார் துறை ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஓய்வூதிய வயதை அறிமுகப்படுத்துதல் மற்றும் கைத்தொழில் பிணக்குகள் சட்டம், ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் மற்றும் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ஆகியவற்றின் திருத்தம் ஆகியவை உள்ளடங்குகின்றன.

II. யூலை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்கான நிவாரண ஏற்பாட்டின் கீழ், 65 வயதை அடைந்துள்ள யூலை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 23 பேர்களுக்கு ஒரேயொரு தடவை நிவாரண படிக் கொடுப்பனவுக்கு தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதிக்கு பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

III. ஆய்வாண்டு காலப்பகுதியில் பொது மக்களிடமிருந்து 1,396 முறைப்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன், இந்த முறைப்பாடுகள் அனைத்தும் மேலதிக நடவடிக்கைகளுக்காக உரிய பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.



IV. தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பதின்மூன்று (13) வேண்டுகோள்கள் பெறப்பட்டிருந்ததுடன், அவற்றில் 10 இற்கு பதிலளிக்கப்பட்டிருந்ததுடன், 03 வேண்டுகோள்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

V. பல்வேறு நிறுவனங்களால் நடத்தப்பட்ட 18 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுவதற்கு அமைச்சின் 364 அலுவலர்களுக்கு வாய்ப் பளிக்கப்பட்டிருந்தது. இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், பெறுகைச் செயல்முறைகள், நுகர்வோர் சேவை ஏற்பாடு, தொழில் சார் அபிவிருத்தி, அலுவலக முகாமைத்துவமும் நிதி ஒழுங்குவிதிகளும் ஒழுக்காற்று நடவடிக்கை முறை போன்ற அத்தகைய பல்வேறு விடயங்கள் பற்றியதாக இருந்திருந்தன.

VI. மெஹெவர பியெச கட்டடத்தின் 06 மற்றும் 07 ஆம் தளங்கள் அமைச்சுக்கு ஒதுக்கப் பட்டதன் பின்னர், தேசிய உற்பத்தித்திறன் செயலகம் ஆக்கத்திறனுள்ள, பயனுறுதி வாய்ந்த சேவையை அதிகரிப்பதற்கும், நிறுவனத்தின் சூழலை மிகவும் வசிகரமானதாக்கு வதற்குமாக உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டமொன்றை நடத்தியிருந்தது.

VII. நாட்டில் நிலவும் நிலைமையை கருத்தில் கொண்டு, ”மெஹேவர பியெச” கட்டிட வளாகத்தில் பல்வேறு நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு மூன்று கோவிட் -19 தடுப்பூசிகளை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதில் பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் பராமரிப்பு ஊழியர்கள் அத்துடன் பிற முன்னணி அலுவலர்களும் உள்ளடங்கியிருந்தனர்.

VIII. இந்த அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் மற்றும் தொழில் திணைக்களத்தின் அலுவலர்கள் வெளிநாட்டு புலமைப்பரிசில்கள், செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில், பதினேழு அலுவலர்கள் இணையவழி மூலம் வெளிநாட்டு பயிற்சி கற்கை நெறிகள் மற்றும் செயலமர்வுகளில் இணைந்திருந்தனர் என்பதுடன், பெண் அலுவலரொருவர் யப்பானிய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட முதுமாணிப் பட்டப்படிப்பு உதவித்தொகையினைப் பெற்றிருந்தார்.

IX. இதற்கு மேலும், ஆய்வாண்டு காலப்பகுதியில் பின்வரும் நிறுவனங்களின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**அட்டவணை 2-22** தாபனச் செயற்பாடுகளின் முன்னேற்றம்

| தொ.இ | செயற்பாடுகள் | முன்னேற்றம் |
|---|---|---|
| 01 | வாய்மூல வினாக்களுக்கான பதில்கள் | 16 |
| 02 | ஒத்திவைக்கப்பட்ட பிரேரணைகள் மற்றும் நிலையியல் கட்டளைக-ளின் கீழ் எழுப்பப்பட்ட வினாக்களுக்கான விடைகள் | 06 |
| 03 | பொது மேன்முறையீட்டுக் குழுக்கான அறிக்கைகள் | 04 |
| 04 | தேசிய தொழில் ஆலோசனைச் சபைக்கான அறிக்கைகள் | 05 |
| 05 | அமைச்சரவை விஞ்ஞாபனத்துக்கான அவதானிப்புகள் | 03 |
| 06 | புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட சம்பளச் சபைகள் | 04 |
| 07 | தீர்மானங்கள் திருத்தப்பட்ட சம்பளச் சபைகள் | 07 |

#### 2. தொழில் திணைக்களம் தொழில்

நிருவாகப் பிரிவானது நிருவாகக் கிளை, தாபனக் கிளை, கட்டிடப் பராமரிப்பு அலகு மற்றும் நூலகம் ஆகிய 04 கிளைகளைக் கொண்டுள்ளது.

##### I. தொழில் திணைக்களத்தின் நிருவாகத் தொழிற்பாடுகள்

அவற்றுள் நிருவாகப் பிரிவானது திணைக்களத்தின் சகல சேவைகளையும் வழங்கல்களையும் மேற்கொள்கின்றது.

திணைக்களத்தின் கட்டிடங்களை நிருமாணிப்பதற்கான காணித் தேவைப்பாடுகளை இனங்காணல், கட்டிட நிருமாணப் பணிகளை வழிநடத்துதல், கட்டிடங்களை புனரமைத்தல் மற்றும் தரமுயர்த்துதல், தேவைக்கேற்றவாறு வாடகைக்கு கட்டிடங்களை கொள்வனவு செய்தல், திணைக்களத்தின் வாகனங்களை நிருவகித்தல், திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் என்பவற்றுடன் தொடர்புடைய நடவடிக்கைகளைக் கையாளுதல், மூலதனப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை நிருவகித்தல், கூடுதல் நேரம், விடுமுறைக் கொடுப்பனவுகள், அக்ரஹார காப்புறுதி மற்றும் இடர்க் கடன்களை அங்கீகரித்தல் ஆகியன இக்கிளையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

தாபனக் கிளையானது, திணைக்களத்தின் பணியாட்டொகுதித் தேவைப்பாடுகளை இனங்காணல், ஆட்சேர்ப்புக்கள், அலுவலர்களின் பதவியுயர்வு, வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளை நடத்துதல், செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல், சம்பள ஆண்டேற்றங்களை வழங்குதல், இடமாற்ற நடைமுறைகளை நடைமுறைப்படுத்துதல், அலுவலர்களின் ஓய்வு பெறுகையைக் கையாளுதல், அலுவலர்களின விடுமுறை மற்றும் ஒழுக்காற்று விடயங்கள் என்பவற்றுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் கையாள்வதற்கு பொறுப்பாகவுள்ளது.

இதற்கமைவாக, 2021 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட வினைத்திறன் காண் தடைப்பரீட்சைகளின் விபரங்கள் பின்வருமாறு.

- உதவித் தொழிலாளர் ஆணையாளர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2021
- பொறியியல் சேவையின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை -1
- தொழில் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2021 - 1 மற்றும் 2
- மனிதவள அபிவிருத்தி அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை-I மற்றும் II
- அலுவலக ஊழியர் சேவை I,II மற்றும் III இன் ஊழியர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள்
- சாரதிகளுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் - I, II மற்றும் III

இவ்வாண்டில் வழங்கப்பட்ட அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் பதவி உயர்வுகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு.

- தகைமைகளை பூர்த்தி செய்த அனைத்து தொழில் அலுவலர் களையும் தரம் 1 இற்கு தரமுயர்த்துதல்.
- சுருக்கெழுத்தாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சையை நடாத்தியதன் பின்னர், 02 சுருக்கெழுத்தாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.
- 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற போட்டித் தேர்வின் அடிப்படையில், பத்து உதவித் தொழிலாளர் ஆணையர்கள் (திணைக்களம்) நியமிக்கப்பட்டிருந்தனர்.
- இலங்கை தொழில்நுட்ப சேவை - திறந்த மற்றும் வரையறுக்கப்பட்ட பரீட்சையை மீளவும் நடாத்துமாறு தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக, கோவிட்-19 தொற்றுநோயை அடுத்து திணைக்களத்தின் சேவைகளை தடையின்றி தொடர்வதற்கு பின்வரும் நடவடிக்கைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

- கர்ப்பிணி அலுவலர்கள் தவிர்ந்த அனைத்து அலுவலா்களும் 2021.11.01 முதல் கடமைக்கு அழைக்கப்பட்டிருந்ததுடன், 2022.01.01 முதல் பயனுக்கு வரும் வகையில் கர்ப்பிணி அலுவலர்கள் உள்ளடங்கலாக அனைத்து அலுவலர்களும் கடமைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். சுகாதார வழிகாட்டுதல்களுக்கு இணங்க கடமைகளை நிறைவேற்றுவதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.
- பணியாளர்கள் மற்றும் சேவை பெறுநர்கள் பின்பற்ற வேண்டிய சுகாதார வழிகாட்டுதல்களை காட்சிப்படுத்துதல்.
- கருமபீடங்கள், சாப்பாட்டுப் பகுதிகள் மற்றும் கழிவறைகள் போன்ற அத்தகை பிரிவுகள் / அலுவலகங்களின் பயன்படுத்தப்படுகின்ற இடங்கள் தினசரி சுத்திகரிக்கப்பட்டு சுகாதாரமாக பராமரிக்கப்பட்டிருந்தன.
- அலுவலக வளாகத்திற்குள் நுழைவதற்கு முன் உடல் வெப்பநிலையை பரிசோதித்தல், கை கழுவும் வசதிகளை ஏற்படுத்துதல்.



- சேவைகளைப் பெறுவதற்காக அலுவலகங்களுக்குச் சென்று மட்டுப்படுத்தப்பட்ட இடங்களுக்குள் பொதுமக்கள் ஒன்றுகூடுவதன் விளைவாக ஏற்படக்கூடிய அபாயங்களைத் தடுப்பதற்கு முறையான முறைமைகள் பின்பற்றப்பட்டு, இச்செயல்முறையை முறையாகக் கண்காணிப்பதற்காகப் பொருத்தமான மேற்பார்வை அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.
- இயலுமானவரையில் அலுவலர்களின் ஒன்றுகூடலையும், பிரிவுகளுக்கிடையிலான நடமாட்டத்தையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- திணைக்களத்தின் அலுவலர்களுக்கு கோவிட் -19 தடுப்பூசியின் முதல் மற்றும் இரண்டாவது தடுப்பூசிகளை ஏற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- பௌதீகரீதியாக நடத்தப்பட்ட கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் விவாதங்களை குறைத்தல் மற்றும் ஏனைய ஒன்றுகூடல்களுக்கு பதிலாக சூம், அணிகள் மற்றும் இதே போன்ற தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்துதல்.

## II. தொழில் திணைக்களத்தின் நிருமாணச் செயற்பாடுகள்

கட்டிடப் பராமரிப்பு அலகானது, திணைக்களத்தின் தற்போதுள்ள கட்டிடங்களை நிருமாணிப்பதற்கும், புனரமைப்பதற்கும் தரமுயர்த்துவதற்கும் வருடாந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் மற்றும் கொள்வனவுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கு உதவுகின்றது, கட்டிடங்கள் திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்கின்றது, கட்டிடங்களைப் புனரமைத்தல், தரமுயர்த்துதல் தொடர்பான செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் தலைமை அலுவலகம், பிராந்திய அலுவலகங்களின் அனைத்து பராமரிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது.

இதன்படி, 2021 ஆம் ஆண்டில் பின்வரும் அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டிருந்தன.

**அட்டவணை 2-23** தொழில் திணைக்களத்தின் நிருமாணச் செயற்பாடுகளின் முன்னேற்றம்

| திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் / கருத்திட்டங்கள் (பிரதானமானவை) | 2021 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடுகள் (ரூபா) | 2021 டிசெம்பர் 31 இல் நிதி முன்னேற்றம் ரூபா மில். | 2021 டிசெம்பர் 31 இல் பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| பதுளை மாவட்ட தொழில் அலுவலக நிருமாணம் (நிலை 1) | 126,080,000.00 | 126,080,000.00 | 95% |
| ஹட்டன் மாவட்ட தொழில் அலுவலக நிருமாணம் (நிலை 1) | 71,719,000.00 | 71,719,000.00 | 95% |
| குருணாகல் மாவட்ட தொழில் அலுவலகத்தின் மேலதிகமான வேலைகளின் மதிப்பீடு மற்றும் தீ பாதுகாப்பு முறைமையை நிறுவுதல் | 2,200,000.00 | 2,200,000.00 | 96% |

புதிதாக நிருமாணிக்கப்பட்ட குருநாகல் மாவட்ட தொழில் அலுவலகம் மற்றும் அம்பலாங்கொடை மாவட்ட தொழில் அலுவலகம் என்பன 2021 ஆம் ஆண்டில் தொழில் அமைச்சர் கௌரவ நிமல் சிறிபால டி சில்வா அவர்களினால் திறந்து வைக்கப்பட்டு அலுவலக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதேபோன்று, மெஹெவர பியெச கட்டிடத்தின் 8, 9, 10, 11 மற்றும் 12 ஆவது தளங்களின் அகப் பணிகளுக்காக ஒப்பந்ததாரரைத் தெரிவுசெய்து ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## III. நூலகம், அரும்பொருட் காட்சியகம் மற்றும் தகவல் சேவை

தொழில் திணைக்களத்தின் நூலகம், தொழில் துறை தொடர்பான சட்டங்கள், நூல்கள், வெளியீடுகள் மற்றும் சஞ்சிகைகள் பற்றிய பாரிய சேகரிப்புடன் இலங்கையின் முன்னணி நுலகமாகும். இந்த நூலகம் தொழில் திணைக்களம்

மற்றும் தொழில் அமைச்சுடன் இணைந்த ஏனைய நிறுவனங்களின் பணியாட்டொகுதியினருக்கும், அனைத்து சட்டங்கள், புத்தகங்கள் மற்றும் வெளியீடுகளை ஆய்வு செய்வதற்கும் உசாத்துணை நோக்கங்களுக்காகவும் வெளிநாட்டு வாசகர்களுக்கும் வசதிகளை வழங்குகின்றது. தொழில் திணைக்களத்தின் நூலகத்தில் 180,000 இற்கும் மேற்பட்ட புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் ஏனைய வெளியீடுகள் அடங்கியுள்ளன. இந்த நூலகம் கடன் புத்தகங்கள், குறிப்புச் சேவை, நிழற்படப் பிரதிச் சேவை, செய்தித்தாள் கட்டுரைகளைச் சேகரித்தல், பக்கச் சேவை மற்றும் நூலகங் களுக்கிடையிலான கடன் சேவை போன்ற அத்தகைய சேவைகளை வழங்குகின்றது. 2021 ஆம் ஆண்டில், 246 உள்ளூர் புத்தகங்கள், 05 உள்ளூர் பத்திரிகைகள் மற்றும் 36 வெளிநாட்டு பத்திரிகைகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொழில் திணைக்களமானது, தொழில் விடயத்துடன் தொடர்புபட்டுள்ள பழைய சட்டங்கள், கட்டளைச் சட்டங்கள் மற்றும் ஆவணங்களைப் பேணிப்பாதுகாப்பதற்கான அரும்பொருட் காட்சியகத்தை பராமரிக்கின்றது. இந்த அரும்பொருட் காட்சியகம், இலங்கையின் தொழில் துறை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரையான பரிணாமத்தை விபரிக்கின்றது.

### 2.2.19 தொழில் அமைச்சின் நிதிசார் முன்னேற்றம்

அமைச்சுக்கான மற்றும் அரச கொள்கைகளுடன் இணங்கும் வகையிலான அதன் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்களின் 2021 வரவுசெலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட நிதிசார் வளங்களை பயனுறுதியுடன், வினைத்திறனுடன் சிக்கனமான நிருவாகத்திற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2-24** தொழில் அமைச்சின் ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்


| | நிறுவனம் | கணக்குத் தலைப்பு | | மொத்த ஒதுக்கீடுகள் (ரூ.000') | மொத்த செலவீனம் (ரூ.000') | காணப்படுகி-ன்ற நிலுவை (ரூ.000') | செலவீன வீதம் % |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அமைச்சு அலுவலகம் | 193 | மீண்டெழுவது | 209,151 | 160,668 | 47,483 | 77% |
| | | | மூலதனம் | 55,000 | 50,007 | 4,993 | 91% |
| 2 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | | மீண்டெழுவது | 10,000 | 10,000 | 0 | 100% |
| | | | மூலதனம் | 1,000 | 1,000 | 0 | 100% |
| 3 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | | மீண்டெழுவது | 4,000 | 4,000 | 0 | 100% |
| | | | மூலதனம் | 3,500 | 3,500 | 0 | 100% |
| 4 | தேசிய உற்பத்தித்திறன் செயலகம் | | மீண்டெழுவது | 475,200 | 465,556 | 9,644 | 98% |
| | | | மூலதனம் | 25,700 | 21,823 | 3,877 | 85% |
| 5 | வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் | | மீண்டெழுவது | 33,595 | 33,282 | 313 | 99% |
| | | | மூலதனம் | 6,405 | 6,222 | 183 | 97% |
| | **உப மொத்தம்** | | **மீண்டெழுவது** | **731,946** | **673,506** | **58,440** | **92%** |
| | | | **மூலதனம்** | **123,105** | **82,552** | **40,553** | **67%** |
| 5 | தொழில் திணைக்களம் | 221 | மீண்டெழுவது | 2,511,565 | 2,079,466 | 432,099 | 83% |
| | | | மூலதனம் | 1,733,830 | 784,402 | 949,428 | 45% |
| | **மொத்தம்** | | **மீண்டெழுவது** | **3,243,511** | **2,752,972** | **490,539** | **85%** |
| | | | **மூலதனம்** | **1,856,935** | **866,954** | **989,981** | **47%** |
| | **முழு மொத்தம்** | | | **5,100,446** | **3,619,926** | **1,480,520** | **71%** |

### 2.2.20 அகக் கணக்காய்வுச் செயற்பாடுகள்

#### 1. தொழில் அமைச்சு

ஏனைய அனைத்து அரச நிறுவனங்களைப்போன்று, தொழில் அமைச்சும், அரசாங்கத்தாலும், அகச் சுற்றறிக்கைகளாலும் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற நிதி ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகளின் நியதிகளின்படி அதன் அனைத்து செயற்பாடுகளையும் ஆற்ற வேண்டியிருக் கின்றது. அத்தகைய செயற்பாடுகள் ஆதாயமான வளப்பயன்பாட்டுடனும், உச்சளவில் வெளிப் படைத் தன்மையுடனும் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை தொழில் திணைக்கள ஆணையாளர் அதிபதியின் நேரடி மேற்பார்வையின் கீழுள்ளது. இதன்படி, 2021.01.01 முதல் 2021.12.31 வரை ஆற்றப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு.

**கண்காய்வு, முகாமைத்துவ கூட்டங்கள் மற்றும் நடத்தப்பட்ட விசாரணைகள்**




| | தொழில் அமைச்சு | தொழில் திணைக்களம் | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் | தேசிய உற்பத்தித்திறன் செயலகம் |
|---|---|---|---|---|---|---|
| நடத்தப்பட்ட கணக்காய்வு முகாமைத்துவக் குழக்கூட்டத்தின் எண்ணிக்கை | 4 | 3 | 4 | 3 | 4 | 4 |
| நடத்தப்பட்ட கணக்காய்வு விசாரணைகளின் எண்ணிக்கை | 4 | 9 | 4 | 4 | 4 | 4 |
| கணக்காய்வு கேள்விகள் தவிர்ந்த ஏனைய அறிக்கைகள் | 19 | 6 | 9 | 9 | 9 | 9 |

**வரைபடம் 2-11** அகக் கணக்காய்வுச் செயற்பாடுகளின் முன்னேற்றம்

குறிப்பு:

i. தொழில் திணைக்களத்திற்காக அமைச்சினால் நடத்தப்பட்ட 2 விசேட கணக்காய்வு கேள்விகளின் அறிக்கைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ii. கூட்டங்களுக்காக தயாரிக்கப்பட்ட அறிக்கைகளும், விசேட கணக்காய்வு விசாரணை அறிக்கைகளும் மற்றும் ஆரம்ப அறிக்கைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

#### 2. தொழில் திணைக்களம்

ஏனைய அனைத்து அரச நிறுவனங்களைப்போன்று, தொழில் திணைக்களமும், அரசாங்கத் தாலும், அகச் சுற்றறிக்கைகளாலும் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற நிதி ஒழுங்கு விதிகள், சுற்றறிக்கைகளின் நியதிகளின்படி அதன் அனைத்து செயற்பாடுகளையும் ஆற்ற வேண்டியிருக்கின்றது. அத்தகைய செயற்பாடுகள் ஆதாயமான வளப் பயன்பாட்டுடனும், உச்சளவில் வெளிப்படைத்தன்மையுடனும் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை மேற்பார்வையிடுதல் திணைக்களத் தலைவரின் நேரடி மேற்பார்வையின் கீழுள்ளது. இதன்படி, 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு.

- உரிய ஆண்டு தொடர்பில் அகக் கணக்காய்வுப் பிரிவினால் 2021 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தின்படி, மாவட்ட தொழில் அலுவலகங்கள் தலைமை அலுவலகப் பிரிவுகள் ஆகியவவற்றை உள்ளடக்கி 09 அகக் கணக்காய்வுப் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.
- திணைக்களத்தின் பல்வேறு அலுவலகங்களைப் பரிசோதித்ததன் பின்னர் அரச கணக்காய்வுப் பிரிவினால் கேட்கப்பட்ட 12 கணக்காய்வு கேள்விகளுக்கு பதில்கள் வழங்கப்பட்டிருந்தன.
- 2021 ஆய்வாண்டு காலப்பகுதியில் 03 காலாண்டு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.



# அத்தியாயம் மூன்று

## 2021 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான மொத்த நிதிச் செயலாற்றுகை

## 3.1 2021 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

| பாதீடு 2021 | | குறிப்பு | உண்மை 2021 (ரூபா) | உண்மை 2020 (ரூபா) | ஏ.சீ.ஏ-எவ். |
|---|---|---|---|---|---|
| - | வருவாய் பெறுகைகள் | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏ.சீ.ஏ-1 |
| - | உள்நாட்டு பொருட்கள்,சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏ.சீ.ஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரி | 3 | - | - | ஏ.சீ.ஏ-1 |
| - | வருவாய் அல்லாதவையும் ஏனையவையும் | 4 | - | - | ஏ.சீ.ஏ-1 |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானம் அல்லாத பெறுகைகள்** | | | | |
| - | திறைசேரி கட்டுநிதிகள் | | 709,243,000 | 597,229,588 | ஏ.சீ.ஏ-3 |
| - | வைப்புகள் | | 185,421,121 | 145,447,356 | ஏ.சீ.ஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 18,019,240 | 10,393,617 | ஏ.சீ.ஏ-5 |
| - | ஏனைய பெறுகைகள் | | - | 28,682,525 | |
| **-** | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **912,683,361** | **781,753,086** | |
| **-** | **மொத்த வருமான, வருமானம் அல்லாத பெறுகைகள் இ = (அ) + (ஆ)** | | **912,683,361** | **781,753,086** | |
| | திறைசேரிக்கு அனுப்பிய தொகை (ஈ) | | | | |
| - | தேறிய வருவாய் பெறுகைகள் மற்றும் வருவாய் அல்லாத பெறுகைகள் உ=(இ)-(ஈ) | | | | |
| | **கழிக்க: செலவீனம்** | | | | |
| | **மீண்டெழும் செலவீனம்** | | | | |
| 502,440,000 | சம்பளங்கள், வேதனங்கள் மற்றும் ஏனைய தொழில் அனுகூலங்கள் | 5 | 483,931,657 | 448,056,510 | ஏ.சீ.ஏ-2 (ii) |
| 169,642,000 | ஏனைய பொருட்கள்,சேவைகள் | 6 | 111,842,416 | 127,232,243 | ஏ.சீ.ஏ-2 (ii) |
| 78,513,000 | அளிப்புகள், மானியம் மற்றும் மாற்றல்கள | 7 | 77,435,090 | 54,723,510 | ஏ.சீ.ஏ-2 (ii) |
| - | வட்டி கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏ.சீ.ஏ-2 (ii) |
| 400,000 | ஏனைய மீண்டெழும் செலவீனம | 9 | 297,910 | - | |
| **750,995,000** | **மொத்த மீண்டெழும் செலவீனம் (ஈ)** | | **673,507,073** | **630,012,263** | |
| | **மூலதனச் செலவீனம்** | | | | |
| 11,300,000 | லதனச் சொத்தின் புனரமைப்பும் மேம்பாடும் | 10 | 8,551,062 | 3,007,462 | ஏ.சீ.ஏ-2(ii) |
| 18,905,000 | மூலதன சொத்துக்களின் கொள்முதல் | 11 | 17,456,540 | 2,078,047 | ஏ.சீ.ஏ-2(ii) |
| 4,500,000 | மூலதன மாற்றீடுகள் | 12 | 4,500,000 | 2,200,000 | ஏ.சீ.ஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்முதல் | 13 | - | - | ஏ.சீ.ஏ-2(ii) |
| 67,300,000 | திறனைக் கட்டியெழுப்புதல் | 14 | 21,613,741 | 6,023,249 | ஏ.சீ.ஏ-2(ii) |
| 47,000,000 | ஏனைய மூலதனம் | 15 | 30,431,303 | 4,465,785 | ஏ.சீ.ஏ-2(ii) |
| **149,005,000** | **மொத்த மூலதனம் (உ)** | | **82,552,646** | **17,774,542** | |
| - | மொத்த பேரேட்டுச் செலவீனம் (ஊ) | | 191,277,136 | 151,093,603 | ஏ.சீ.ஏ-4 |
| - | வைப்பு கொடுப்பனவு | | 20,563,393 | 5,229,218 | ஏ.சீ.ஏ-5 |
| - | முற்பணங்கள் | | - | - | |
| **-** | **கொடுப்பனவுகள் (ஊ)** | | **211,840,529** | **156,322,821** | |
| | மொத்த செலவீனம் எ = (ஈ+உ+ஊ) | | 967,900,249 | 804,109,627 | |
| - | மொத்த செலவீனம் எ = (ஈ+உ + ஊ) | | (55,216,888) | (22,356,541) | |
| | ஒப்பீட்டுக் கூற்றின்படி நிலுவை | | (55,216,888) | - | ஏ.சீ.ஏ-7 |
| | டிசெம்பர் 31 இலுள்ளவாறான உச்ச நிலுவை | | - | - | ஏ.சீ.ஏ-3 |
| | | | (55,216,888) | (22,356,541) | |

## 3.2 2021 டிசெம்பர் 31 இல் நிதி நிலவரக் கூற்று

| | | ஏ.சீ.ஏ-பி | |
|---|---|---|---|
| | | உண்மை | |
| | குறிப்பு | 2021 (ரூபா) | 2020 (ரூபா) |
| **நிதிச் சொத்துக்கள் அல்லாதவை** | | | |
| ஆதனம்,பொறித்தொகுதியும் உபகரணமும் | ஏ.சீ.ஏ-6 | 665,072,565 | 582,687,237 |
| **நிதிச் சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏ.சீ.ஏ-5 | 58,068,525 | 55,524,372 |
| பணமும் பணத்திற்குச் சமனானவையும் | ஏ.சீ.ஏ-3 | | |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **723,141,090** | **638,211,609** |
| **நிகரச் சொத்து / பங்கு** | | | |
| திறைசேரியின் தேறிய பெறுமதி | | 47,449,805 | 38,779,611 |
| ஆதனம், பொறித்தொகுதியும் **உபகரணமும் ஒதுக்கமும்** | | 665,072,565 | 582,687,237 |
| **நடைமுறைப் பெறுப்புகள்** | | | |
| வைப்புக் கணக்குகள | ஏ.சீ.ஏ-4 | 10,618,721 | 16,474,737 |
| கட்டுநிதி மீதி | ஏ.சீ.ஏ-3 | | 270,024 |
| **மொத்தப் பெறுப்புகள்** | | **723,141,091** | **638,211,609** |

பக்க இலக்கம் 09 முதல் 55 வரை ஏசீஏ 01 முதல் ஏசீஏ 07 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 56 முதல் 67 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பொதுவாக எற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ளஅதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக்கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

அறிக்கையிடப்படுகின்ற தாபனத்தில் தற்போது நிதிக் கட்டுப்பாட்டுக்காக பயனுள்ளஅகக் கட்டுப்பாட்டு முறைமையுள்ளதென்பதையும், நிதிக் கட்டுப்பாட்டுக்காக பயனுள்ள அகக்கட்டுப்பாட்டினை கண்காணிப்பதற்கு காலாந்தர மீளாய்வு மேற்கொள்ளப்படுகின்றதென்பதையும், அதன்படி, அத்தகைய முறைமை பயனுறுதியாக மேற்கொள்ளப்படுவதற்கு தேவைப்பட்டவாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றதென்பதையும் நாம் இத்தால் சான்றுப்படுத்துகின்றோம்.

............................
**பிரதம கணக்காளர்**
திகதி : 2022.06.30

M P D U K Mapa Pathirana
Secretary
Ministry of Labour
7th Floor, "Mehewara Piyesa"
Narahenpita
Colombo - 05

............................
**கணக்கீட்டு அலுவலர்**
திகதி : 2022.06.30

J. A. D. S. Nishamini
Chief Accountant
Ministry of Labour
6th Floor, "Mehewara Piyesa"
Narahenpita,
Colombo 05.



## 3.3 2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான பண ஓட்டக் கூற்று

| | ஏ.சீ.ஏ-சீ | |
|---|---|---|
| | உண்மை | |
| | 2021 (ரூபா) | 2020 (ரூபா) |
| **இயக்கச் செயற்பாட்டிலிருந்தான பண ஓட்டங்கள்** | | |
| மொத்த வரி பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், அபராதங்கள், தண்டப்பணம் மற்றும் உரிமங்கள | - | - |
| இலாபம் | | |
| வருமானமல்லாத பெறுகைகள் | 27,145,688 | 28,682,525 |
| திறைசேரி பெறுகைகள் | 709,243,000 | 628,523,532 |
| முற்பண அறவீடு | 17,971,754 | 7,517,242 |
| வைப்புப் பெறுகைகள் | 185,421,121 | 145,447,356 |
| **செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த பணம் (அ)** | **939,781,563** | **810,170,655** |
| **கழி - பின்வருவனவற்றுக்கு விநியோகிக்கப்பட பணம் :** | | |
| தனிநபர் வேதனாதிகள் மற்றும் செயற்பாட்டுக் கொடுப்பனவுகள | 627,442,551 | 612,095,558 |
| மானியங்கள் மற்றும் மாற்றீட்டு கொடுப்பனவுகள் | 81,935,090 | 11,200,000 |
| ஏனைய தலைப்புகள் | 974,412 | 2,134,705 |
| நிதிச்செலவுகள் - திறைசேரிக்கான கட்டுநிதி | | 31,293,944 |
| முற்பண கொடுப்பனவுகள் | 20,695,833 | 6,856,889 |
| வைப்புப் கொடுப்பனவுகள் | 191,277,136 | 151,093,603 |
| **செயற்பாடுகளுக்கு விநியோகிக்கப்பட்ட மொத்த பணம் (ஆ)** | **922,325,023** | **814,674,699** |
| **இயக்கச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய பண ஓட்டம் (இ)=(அ)-(ஆ)** | **17,456,540** | **(4,504,044)** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான பண ஓட்டம்** | | |
| வட்டி | - | - |
| பங்கிலாபங்கள் | - | - |
| தள்ளுபடி வருமானம் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| கடன் அறவீடு | | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான பண ஓட்டம் (ஈ)** | **-** | **-** |
| **கழி – பின்வருவனவற்றுக்கு விநியோகிக்கப்பட்ட பணம்** | | |
| பௌதீக சொத்து கொள்முதல் அல்லது நிருமானம் மற்றும் ஏனை முதலீட்டு கொள்முதல் | 17,456,540 | 6,788,450 |
| **முதலீட்டு செயற்பாடுகளுக்கு விநியோகிக்கப்பட்ட மொத்த பணம்(உ)** | **17,456,540** | **6,788,450** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய பண ஓட்டம் (ஊ)=(ஈ)-(உ)** | **(17,456,540)** | **(6,788,450)** |
| **இயக்கச் செயற்பாடுகளிலிருந்தான, முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய பண ஓட்டம் (எ)=(இ)-(ஊ)** | | **(11,292,494)** |
| **நிதி செயற்பாடுகளிலிருந்தான பண ஓட்டம்** | | |
| வெளிநாட்டு கடன்கள் | - | - |
| வைப்புக்களின் வருவாய் | - | - |
| பெறப்பட்ட மானியங்கள் | - | - |
| **நிதி செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்தப் பணம் (ஏ)** | **-** | **-** |
| **நிதி செயற்பாடுகளுக்கு விநியோகிக்கப்பட்ட பணம் :** | | |
| உள்ளூர் கடன் மீள்கொடுப்பனவு | - | - |
| வெளிநாட்டு கடன் மீள்கொடுப்பனவு | | |
| வைப்புக் கணக்குகள் மற்றும் ஏனைய பொறுப்புகளில் மாற்றம் | | |
| **நிதி செயற்பாடுகளுக்கு விநியோகிக்கப்பட்ட மொத்தப் பணம் (ஐ)** | **-** | **-** |
| **நிதி செயற்பாடுகளிலிருந்தான தேறிய பண ஓட்டம் (ஒ)=(எ)-(ஏ)** | **-** | **-** |
| **காசோட்டத்தின் தேறிய பெயர்ச்சி (ஓ)= (ஏ) - (ஐ)** | **-** | **-** |
| **சனவரி 01 அன்று ஆரம்ப பண மீதி** | **-** | **-** |
| **டிசெம்பர் 31 அன்று இறுதிப் பண மீதி** | **-** | **-** |

## 3.4 நிதி கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தலானது, பொதுவாக ஏற்றுக்காள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இறுதிக் கணக்கிலுள்ள, அத்துடன் தொடர்புபட்டுள்ள கணக்கீட்டுக் குறிப்புகளிலுள்ள தொகைகள் மற்றும் ஏனைய கணக்கீட்டு தகவல்கள் திறைசேரி கணக்குகளுடன் ஒப்பிடப்பட்டுள்ளதுடன், அவை அவற்றுடன் இணங்குகின்றன.

1) **அறிக்கையிடல் காலப்பகுதி**
இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2021 சனவரி 01 முதல் 2021 டிசம்பர் 31 வரையானதாகும்.

2) **அளவீட்டுக்கான அடிப்படை**
நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில் ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மாற்றியமைக்கப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.
நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படுதல் வேண்டும்.

3) **வருமானத்தை அடையாளங்காணுதல்**
நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவற்றின் வரியிடக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கள் கிடைக்கக் கூடிய காசின் அடிப்படையில் அடையாளங்காணப்படுகின்றது.

4) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.**
கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**
இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்குடன் தொடர்புபட்டதாகும்.

6) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**
காசு மற்றும் காசுக்கு சமமானவை 2021 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

7) **நிதிக் கூற்றுக்களின் மாதிரிகளில் மாற்றங்கள் மற்றும் ஒப்பீட்டு தொகைகளில் சீராக்கம்**
2021 ஆம் ஆண்டுக் நிதிக் கூற்றுக்களில் மாற்றங்கள் மேற்கொண்ட அதே வேளையில் 2020 ஆம் ஆண்டுக்கான ஒப்பீட்டு தொகைகளிலும் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 3.5 வருவாய் சேகரிப்பின் செயலாற்றுகை தொடர்புடையதல்ல (செலவீனத் தலைப்பில்லை)

**அட்டவணை 3-1** வருவாய் சேகரிப்பில் செயலாற்றுகை

ரூபா ,000

| வருவாய் குறியீடு | வருவாய் குறியீட்டின் விளக்கம் | வருவாய் மதிப்பிடு | | சேகரிக்கப்பட்ட வருவாய் | |
|---|---|---|---|---|---|
| | | மூல மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா) | இறுதி வருவாய் மதிப்பீட்டின் % |
| அறிக்கையில்லைள | | | | | |

## 3.6 ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதிலுள்ள செயலாற்றுகை

**அட்டவணை 3-2** ஒதுக்கத்தை பயன்படுத்துவதிலுள்ள செயலாற்றுகை

ரூபா ,000

| ஒதுக்கீட்டின் வகை | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டில் ஒதுக்கீட்டு பாவனை % ஆக |
|---|---|---|---|---|
| | மூல மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | | |
| மீண்டுடெழுவது | 753,600 | 750,995 | 673,507 | 90 |
| மூலதனம் | 146,400 | 149,005 | 82,553 | 55 |



## 3.7 நி.ஒ. 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களத்தின் ஒரு முகவராக இந்த அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள்

**அட்டவணை 3-3** ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் ஒரு முகவராக இந்த அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள்.

ரூபா ,000

| தொ.இல. | ஏற்பாடுகள் பெறப்பட்ட அமைச்சு/ திணைக்களம் | ஏற்பாட்டுக்கான குறிக்கோள. | ஏற்பாடு | | உண்மையான செலவினம் | இறுதி ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகளின் % ஆக |
|---|---|---|---|---|---|---|
| | | | மூல ஏற்பாடு | இறுதி ஏற்பாடு | | |
| 01 | அரச அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சு | புதிய பட்டதாரி பயிலுநர்களுக்கான படிக் கொடுப்பனவு | - | 600 | 540 | 90 |
| 02 | ஓய்வூதியத் திணைக்களம் | ஓய்வூதியப் பணிக்கொடை | - | 434 | 434 | 100 |

## 3.8 நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதில் செயலாற்றுகை

**அட்டவணை 3-4** நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதில் செயலாற்றுகை

ரூபா ,000

| சொத்து குறியீடு | குறியீட்டு விவரணம் | 2021.12.31 அன்று உள்ளவாறான கணக்கெடுப்பு சபையின் அறிக்கை பிரகாரம் மீதி | 2021.12.31 அன்று உள்ளவாறான நிதி நிலவர அறிக்கை பிரகாரம் மீதி | எதிர்காலத்தில் கணக்கீடு செய்யப் படவேண்டியவை | % ஆக அறிக்கையிடல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டடமும் கட்டமைப்பும் | 31,823 | 31,823 | - | - |
| 9152 | இயந்திரங்களும் உபகரணங்களும் | 633,249 | 633,249 | - | - |
| 9153 | காணிகள் | - | - | - | - |
| 9154 | தொட்டுணர முடியாத சொத்துக்கள | - | - | - | - |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | - | - | - |
| 9160 | நடந்து கொண்டிருக்கும் வேலை | - | - | - | - |
| 9180 | குத்தகை சொத்துக்கள் | - | - | - | - |

3.9 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } LSW/B/MOL/SR/01/2021 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 22 யூன், 2022

இது சிங்களப் பிரதியின் மொழிபெயர்ப்பாகும்.

**செயலாளர்,**

**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு.**

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் நியதிகளின்படி 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை**

---

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கை மற்றும் நிதிக் கூற்றின் மூலப்பிரதி (சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கிலம்) ஆகியன இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.**

**கே.சீ.பி.சேனாரத்ன,**

**சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் அதிபதி,**

**கணக்காய்வாளர் அதிபதிக்காக.**

**பிரதி- பணிப்பாளர் அதிபதி, அரச கணக்குகள் திணைக்களம்**

இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.

+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk



ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } LSW/B/MOL/SR/01/2021 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 22 யூன், 2022

செயலாளர்,

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு.

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் நியதிகளின்படி 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 தகுதியுள்ள கருத்துக்கள்**

2021 திசெம்பர் 31 இலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் உள்ளடங்கலாக 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை கூற்றுக்களும், நிதி ஓட்டக் கூற்றும், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின்படி, இந்த அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் மீதான எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் உள்ளடங்கலான சுருக்க அறிக்கை 2020 யூன் 30 ஆம் திகதி பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின்படி, இந்த அமைச்சுடன் தொடர்புபட்டுள்ள விபரமான வருடாந்த கணக்காய்வு அறிக்கை உரிய காலத்தில் பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு வழங்கப்படும். இந்த அறிக்கை, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு நியதிகளில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கம் தவிர்ந்த, 2020 டிசெம்பர் 31 இலுள்ள தொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் இந்நிறுவகத்தின் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் அதன் பண ஓட்டம் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியதிகளின்படி உண்மையான, நியாயமான நிதி நிலைமையைப் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.

+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

### 1.2 தகுதியுள்ள கருத்துரைகளுக்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் தகுதியானவை என்பது எனது அபிப்பிராயமாகும். இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக எனது கணக்காய்வினை நான் நடத்தியுள்ளேன். அந்த நியமங்களின் கீழ் எனது பொறுப்புகள், எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் பிரிவில் மேலும் விபரிக்கப்படுகின்றன. நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகள் எனது தகுதியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமானவையும், பொருத்தமானவையென்றும் நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் பிரதம கணக்கீட்டு அலுவலரின் பொறுப்புக்கள்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ள கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் உண்மையான, நியாயமான பார்வையைத் தருகின்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது மற்றும் மோசடி அல்லது தவறுகளினால் ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்க தவறுகளற்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலச்செய்வதற்கு தேவையான அத்தகைய அகக்கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது பிரதம கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாகும்.

இந்த அமைச்சு 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உட் பிரிவின்படி, அதன் வருடாந்த மற்றும் காலாந்தர நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அதன் வருவாய், சொவீனம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய உரிய புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (1) (இ) உட்பிரிவின் படி, அமைச்சின் நிதி முகாமைத் துவத்திற்காக ஆக்கத்திறனுள்ள ஆகக் கட்டுப்பாட்டு முறைமை வகுத்தமைக்கப்பட்டு பேணப்படு கின்றது என்பதை பிரதம கணக்கீட்டு அலுவலர் உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், மேலே சொல்லப்பட்ட முறைமையின் பயனுறுதி தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வுகளை நடத்தி முறைமையை ஆக்கத்திறனுள்ள வகையில் பேணும் நோக்கில் மேலும் தேவையான மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்வது தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையிலமைந்த இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயத்தைத் தெரிவிப்பது உள்ளடங்கலாக, இந்த நிதிக்கூற்றுக்கள், முழுவதுமாக, பொருட் படுத்தக்கூடிய மோசடி, தவறுகளை கொண்டிருக்கக்கூடிய பொருட்படுத்தத்தக்க பிழைகள் அற்றவை என்ற நியாயமான உத்தரவாதத்தை முன்வைப்பதே எனது நோக்கமாகும். இந்த நியாயமான உத்தரவாதம் உயர்ந்த பட்சமானதாக இருக்கின்ற போதிலும், இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக் கமைவான கணக்காய்வொன்றினை மேற்கொள்கின்றபோது பொருட்படுத்தத்தக்க தவறான கூற்றுக்களை அது எப்போதும் வெளிப்படுத்தும் என்ற உத்தரவாதமாகாது. பொருட்படுத்தத்தக்க தவறான கூற்றுக்கள் என்பது, தனித்த அல்லது கூட்டான மோசடி மற்றும் தவறுகளின் பாதிப்புகளால் ஏற்படுத்தப்பட முடியும் என்பதுடன், இதனைப் பயன்படுத்துபவர்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் நிதிசார் தீர்மானங்களை எடுப்பதை அது பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைவாக தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் ஐயத்துடன் இந்தக் கணக்காய்வினை மேற்கொண்டுள்ளேன். மேலும்,

- மோசடிகள் மற்றும் பிழைகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருட்படுத்தத் தக்க தவறான கூற்றுக்களின் ஆபத்தை இனங்காணுதல் மற்றும் மதிப்பிடுதலின் போது, நிறுவனத்திற்கு பொருந்தத்தக்க உரிய கணக்காய்வு நடைமுறைகளைப் பயன்படுத்தி மோசடிகள் மற்றும் பிழைகளினால் ஏற்பட்டுள்ள ஆபத்தைக் குறைக்கும் நோக்கில் எனது கருத்திற்கான அடிப்படை, போதியளவு, உரிய கணக்காய்வு சான்றுகளைப் பெறுவதாகும். பொருட்படுத்தத்தக்க கூற்றொன்றினால் ஏற்படுகின்ற ஆபத்திலும் பார்க்க மோசடியின் தாக்கம் அதிகமானதாகும் என்பதுடன் மோசடிக்கான காரணிகள், பிழையான கூற்றுக்களைத் தயாரித்தல், வேண்டுமென்று தவிர்த்தல் அல்லது அகக் கட்டுப்பாட்டினைத் தவிர்த்தல் என்பவையாகும்.

- உரிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வு தொடர்பான அகக் கட்டுப்பாட்டின் புரிந்துணர்வினைப் பெற்றுக்கொள்ளுதல், ஆனால், அது அகக்கட்டுப்பாட்டின் பயனுறுதி தொடர்பான கருத்தை வழங்கும் நோக்கத்திற்காகவல்ல.

- பொருத்தமான, நியாயமான விதத்தில் வெளிப்படுத்தல்களைக் கொண்டிருக்கின்ற நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையை ஏற்படுத்தியுள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை மதிப்பிடுதல்.

- வெளிப்படுத்தல் உள்ளடங்கலாக ஒட்டு மொத்த முன்னளிக்கையை, நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பினையும் உள்ளடக்கத்தையும் மற்றும் நியாயமான முன்னணிக்கையினை அடையும் வகையில் குறிப்பிடத்தக்க கொடுக்கல் வாங்கல்களை, நிகழ்வுகளை நிதிக் கூற்றும் பிரதிநிதத்துவப்படுத்துகின்றனவா என்பதையும் மதிப்பிடுதல்.

எனது கணக்காய்வின் போது நான் இனங்கண்டுள்ள அகக் கட்டுப்பாட்டில் மற்றும் ஏனைய விடயங்களிலுள்ள ஏதேனும் முக்கியமான குறைாடுகள் உள்ளடங்கலாக முக்கியமான கணக்காய்வு காண்பிப்புகள் பற்றி பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு நான் அறியச் செய்கின்றேன்.

### 1.5. ஏனைய சட்ட தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் உட்பிரிவு 6(1) (ஈ) நியதிகளில் பின்வரும் விடயங்களை நான் இத்தால் தெரிவிக்கின்றேன் :

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் பற்றிய கருத்துக்கள்

### 1.6.1 நிதி மற்றும் செயலாற்றுகைக் கூற்று

### 1.6.1.1 நிதிச் சொத்துக்கள் அல்லாதவை

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

(அ) நிதிச் சொத்துக்கள் அல்லாதவற்றின் நிலுவை 2020 டிசெம்பர் 31 இல் நிதி நிலவரக் கூற்றில் 528,687,237 ரூபாவாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிதிச் சொத்துக்கள் அல்லாதவை பற்றிய கூற்றில் 647,939,499 ரூபாவாக குறிப்பிடப் பட்டிருப்பதன் விளைவாக 65,252,262 ரூபா வேறுபாடு அவதானிக்கப்பட்டிருந்தது. இந்த வேறுபாட்டுக்கான காரணம் கணக்குக் குறிப்பொன்றினூடாகவேனும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2021 ஆம் ஆண்டில் ஆசிய உற்பத்தித்திறன் தாபனத்தால் தேசிய உற்பத்தித் திறன் செயலகத்திற்கு உதவியாக அமெரிக்க டொலர் பெறுமதியான கணினி உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தமை வெளி வளங்கள் திணைக்களத்தினூடாக பெறப்பட்டிருக்கவில்லை என்பதுடன், நிதிச் சொத்துக்கள் அல்லாதவை பற்றிய கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக் கூற்றுக்களில் படிவத்தினூடாக நிதிச் சொத்துக்கள் அல்லாதவற்றின் பொறுமதி 633,226,812 ரூபாவாக இருப்பதன் விளைவாகவும், கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி நிதிச் சொத்துக்கள் அல்லாதவற்றின் பொறுமதி 57,602,016 ரூபாவாக அவதானிக்கப்பட்டுள்ளது. இதன்படி, நிதி நிலபரக் கூற்றிலுள்ள மொத்தச் சொத்துக்கள் 2021 டிசெம்பர் 31 இலுள்ள தொகையால் மேலதிகமாக கணிக்கப்பட்டிருந்தது.

### 1.6.2 சரிப்படுத்தப்படாத நிலுவைகள்

2021 டிசெம்பர் 31 இல் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தொழில் அமைச்சின் ஐந்தொகையில் ஆய்வாண்டு காலப்பகுதியில் திறைசேரியிடமிருந்து 709,243,000 ரூபா பெறப்பட்டிருந்ததுடன், ஐந்தொகையில் உள்ளடக்கப்பட்டிருந்த 249/21 கட்டுநிதிக் கணக்கின் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளுக்கிடையில் 707,153,000 ரூபா வேறுபாடு அவதானிக்கப்பட்டிருந்தது. தகவல்களின்படி

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகளை முகாமைசெய்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அ) அமைச்சரவை செயலாளரின் 2021 ஒகஸ்ட் 31 ஆம் திகதியிடப்பட்ட 21/1596/304/134 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்திற்கமைவாக 17 செலவீன விடயங்கள் தொடர்பாக





மேற்கொள்ளப்பட்ட 32,500,000 ரூபா வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகளிலிருந்து 10 செலவீன விடயங்களுக்கான 24,287,000 ரூபா ஏற்பாடுகள் மீண்டும் திரும்பியிருந்தது. இது, 5 செலவீன விடயங்களுக்கான நிதி ஏற்பாடுகளை உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 4 செலவீன விடயங்களுக்கான ஏற்பாடுகளின் மாற்றல்களின் பின்னர் எஞ்சியிருந்த 1,013,000 ரூபாவிலிருந்து செலவீனம் உறப்படவில்லை என்பதுடன், எஞ்சியிருக்கின்ற 7 செலவீன விடயங்களின் 1,650,000 ரூபா ஒட்டுமொத்த ஏற்பாடுகள் மொத்தமாக 2,663,000 ரூபாவாகும். அது 100 விகித சேமிப்பாகும்.

(ஆ) 27 செலவின விடயங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட 104,400,000 ரூபா ஏற்பாட்டில் 45,122,000 ரூபா திரும்பியுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 32,813,486 ரூபா பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) செலவீன விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளமை 4,000,000 ரூபா என்று நிதிக்கூற்றுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும், 193-02-05-2001, 100 விகிதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கொடுப்பனவு, வேலையாளர் நட்ஈட்டு ஆணையாளர் அலுவலகத்தில் பிரிப்புகளை நிறுவுவதற்காக கட்டடங்கள் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டுள்ளதுடன், இந்தக் கருத்திட்டம், 2022 யூன் 17 ஆம் திகதியளவிலும்கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2021 ஆம் ஆண்டில், 193-2-5-2013 ஆம் செலவீன விடயத்தின் கீழ் இயந்திரங்கள் மற்றும் பொறித் தொகுதிகளின் பெறுகைக்கான மதிப்பீடு மற்றும் 193-2-5-2013 ஆம் செலவீன விடயத்தின் கீழ் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளுதல் 400 விகிதத்திற்குமதிகமாக அதிகரிக்கும் வகையில் திருத்தப் பட்டுள்ளதுடன், அதற்குத் தெரிவிக்கப்பட்டுள்ள காரணம், அலுவலர்கள் தமது கடமைகளை உரியமுறையில் ஆற்றுவதற்கு போதுமானளவு கணினிகள் இல்லை யென்பதாகும். இதன்படி, இந்த ஆண்டின் ஆரம்பத்திற்கு முன்னர் இது இனங்காணப்படவில்லையாகையால், நி.ஒ.3 இன்படி செலவீனத்தைத் திட்டமிடுதல் சரியாக மேற்கொள்ளப்படவில்லை.

### 2.2 அதிகாரமின்றி நட்டங்களை ஏற்படுத்துதல்

அரச அலுவலர்களின் முற்பண பீ கணக்குக்கான குறைந்தபட்ச பெறுகை வரையறை 20,000,000 ரூபாவாக இருந்தபோதிலும், 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பெறுகைகளின் பெறுமதி 13,916,095 ரூபாவாக இருந்தது. பெறுகைகளின் வரையறை 12,000,000 ரூபா வரை திருத்தப்படுதல் வேண்டுமென்று நிதிக் கூற்றில் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், திறைசேரி கணக்குகளில் பெறுகைகளின் குறைந்த பட்ச வரையறை 20,000,000 ரூபா என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த வரையறை களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று 2021 டிசெம்பர் 31 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், திறைசேரி கணக்குகளில் சொல்லப்பட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை. அதே போன்று, 2022 மே 20 ஆம் திகதியிலிருந்து வலுப்பெறும் வகையில் வரைறறை வேறுபாட்டுக்கு அதிகாரமளித்து- 2022 யூன் 08 ஆம் திகதியன்று 2021 ஆம் ஆண்டுக்கு அரச அலுவலாகளுக்கு முற்பணங்கள் தொடர்பா முற்பணக் கணக்கு களின் வரையறைகளின் வேறுபாடு பாராளுமன்றத்திற்கு நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3 பொறுப்புகளையும் கடப்பாடுகளை மேற்கொள்ளுதல்

திறைசேரிப் புத்தகங்களில் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 153,730 ரூபா பதிவுசெய்யப்படாத பொறுப்புகள், நிதிக் கூற்றுக்களில் மேலதிகமாக காட்டப்பட்டிருக்கின்ற 193-1-7-0-2401 ஆம் செலவீன விடயத்தின் கீழ் தனியார் நிறுவனமொன்றுக்குச் செலுத்தவேண்டிய 308,800 ரூபா மற்றும் நிதிக் கூற்றுக்களில் அதே செலவீன விடயத்தின் கீழ் திறைசேரிக்கு பதுளை மாவட்ட அலுவலகத்தால் அறிக்கையிடப்பட்ட 4,518,165 ரூபா உள்ளடக்கப்படாமை காரணமாக, திறைசேரி குறிப்புகளிலும் பார்க்க நிதிக்கூற்றுக்களில் 4இ056இ435 ரூபா என்று குறைவாக பொறுப்புக்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன.

### 2.4 சட்டங்கள், ஒழுங்குகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்காமை

| சட்டங்கள், ஒழுங்குகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் தொடர்புபட்டவை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) வெளி வளங்கள் திணைக்களத்தின் ஞஊ ரு PMU/Grant/20 ஆம் இலக்க, 2020 ஓகஸ்ட் 14 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் தரப்படுகின்ற விதிகள் மற்றும் நி.ஒ 610 முதல் 626 வரை | சொல்லப்பட்ட கடிதத்திலுள்ள அறிவுறுத் தல்களைப் பின்பற்றாது, தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் அதிபதிக்கு தெரிவிக்காது 2021 ஆம் ஆண்டில் ஆசிய உற்பத்தித்திறன் தாபனத்திடமிருந்து 18,427,300 ரூபா தொகைக்கு வெளிநாட்டு உதவியை நேரடியாக தேசிய உற்பத்தித்திறன் செயலகம் பெற்றுள்ளது. இத்தொகையில், 12,757,400 ரூபா 2021 ஆம் ஆண்டிலும், 5,669,900 ரூபா 2022 ஆம் ஆண்டிலும் பொது வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்ததுடன், பயன்படுத்துவதற்கு முன்னராக மதிப்பீட்டு ஏற்பாடுகள், பதிலீட்டின் மூலம், விளக்க நடவடிக்கைமுறை மூலம் மேற்கொள்ளப் படவில்லை. |

### 2.5. முற்பணங்களை வழங்குதலும் தீர்த்தலும்

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் சேவையிலிருந்து விலகியிருந்த முகாமைத்துவ உதவியாளரொருவரிடமிருந்து அறவிட வேண்டிய 138,501 ரூபா தொகை 2022 மே 04 ஆம் திகதியளவிலும்கூட அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.6 வைப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) 2021 ஆம் ஆண்டில், தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் பொது வைப்புக் கணக்குக்கு வெளிநாட்டு உதவியாக 12,757,400 ரூபா வரவு வைக்கப் பட்டுள்ளது.

(ஆ) 2021 டிசெம்பர் 31 இலுள்ளவாறு, பெறப்பட்டதிலிருந்து 2 வருடங்களுக்கு மேலதிகமாக 536,326 ரூபா பெறுமதியான நட்டஈட்டுக்காக 6000-0-0-17-0-26 ஆம் இலக்கத்தைக் கொண்ட பொது வைப்புக் கணக்கில் 10,014,543 ரூபா நட்டஈடு தடுத்துவைக்கப்பட்டிருந்ததுடன், 1 முதல் 2 வருடங்களுக்கு முன்னராக வைப்புச்செய்யப்பட்ட நட்டஈட்டுப் பெறுமதி 1,371,986 ரூபாவாகும். 6 மாதத்திற்கும் 1 வருடத்திற்குமிடையில் வைப்புச் செய்யப்பட்ட நட்டஈட்டுப் பெறுமதி 2,971,667 ரூபாவாகும்.

(இ) நட்டஈடாக பெறப்பட்ட ஆனால், பல்வேறு காரணங்கள் காரணமாக கேருநர் களுக்குச் செலுத்தப்படாத 2,023,096 ரூபாவுக்கு வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் பெயரில் தேசிய சேமிப்பு வங்கியில் கணக்குகள் திறக்கப் பட்டிருந்தன. கணக்குகளில் பணம் வைப்புச் செய்யப்பட்டதிலிருந்து 22 மாதங்கள் முதல் 48 மாதங்கள் வரையான காலப்பகுதியொன்றுக்கு நீடிக்கப் பட்டிருந்தபோதிலும், நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவுபெறாததன் காரணமாக கோருநர்களுக்கு அவை விடுவிக்கப்படவில்லை.

### 2.7 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துதல்

அமைச்சின் 1001590256 ஆம் இலக்க கணக்கிலிருந்து 2021 டிசெம்பர் 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் 5 நிறுவனங்கள் சார்பாக எழுதப்பட்டிருந்த 9,724,913 ரூபா பெறுமதியான 7 காசோலைகளிலிருந்து (5) உரிய தனிப்பட்டவர்களுக்கு 2022 மே மாதத்திலும், 2 காசோலைகள் 2022 மார்ச் மாதத்திலும் வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக, நிறைவுசெய்யப்படாத பணி இலக்குகளுக்காக தடுத்துவைக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் நோக்கத்துடன் காசோலைகள் எழுதப்பட்டுள்ளமை வெளிப்படையாக விருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வுகள்

### 3.1 செயலாற்றுகை

#### 3.1.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

தொழில் அமைச்சின் அதிகாரத்தின் கீழுள்ள விடயங்கள் தொடர்பான கொள்கை கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தல், நடைமுறைப் படுத்துதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவை மற்றும் அமைச்சின் பிரதான தொழிற்பாடொன்றாக ஊழியர் சேமலாப நிதியத்தின் நிருவாகம் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லையென்பதை பின்வரும் விடயங்களிலிருந்து வெளிப் படுத்தப்படுகின்றது.

(அ) 2021 டிசெம்பர் 31 இலுள்ளவாறு தொழில் ஆணையாளரின் பங்களிப்போர் கணக்கில் காணப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியத்தின் 9,933,449,162 ரூபா மற்றும் ஊ.சே.நி வைப்புக் கணக்கிலும், மாவட்ட அலுவலகங்களின் வைப்புக் கணக்குகளிலுமுள்ள 301,779,837 ரூபா தனித்த கணக்குகளுக்கு வரவு வைக்கப்படவில்லை.

(ஆ) 2021 ஆம் ஆண்டளவிலும்கூட தனியார் சேமலாப நிதியத்தில் முறையான மேற்பார்வை இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) 2021 செப்ரெம்பர் மாதமளவில் 2015 முதல் 2020 வரையான காலப் பகுதிக்கு விசேட புலன்விசாரணைப் பிரிவினால் பெறப்பட்ட 308 முறைப்பாடுகளில் 57 விகிதம் அல்லது 178 தீர்க்கப்படவில்லை.

(ஈ) 2021 டிசெம்பர் 31 இலுள்ளவாறு செயலற்று காணப்படுகின்ற வழக்குகளின் எண்ணிக்கை 5,151 என்பதுடன், அதிலிருந்து அறவிடப்பட்ட பெறுமதி 3,108,693,249 ரூபாவாகவிருந்தது. திறந்த பிடியாணை வழக்குகளின் எண்ணிக்கை 2,822 என்பதுடன், பெறக்கூடிய பெறுமதி 879,249.209 ரூபாவாகும். இது, 1 முதல் 30 வருட காலப்பகுதியுடன் தொடர்புபட்ட வழக்குகளை உள்ளடக்கியுள்ளது.

(உ) 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்ட ஈட்டுக் கட்டளைச்சட்டத்தின் தாபிக்கப்பட்ட வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தின் தொலைநோக்காக,

“காயம் அல்லது மரணம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் பணியாளர்களுக்கு விரைவாக நட்டஈட்டினை தொழில் தருநர்களை செலுத்தச் செய்வதன் மூலம் பணியாளரின் திருப்தியைத் தோற்றுவித்தல்” என்று தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், தொழிலின் நிமித்தம் ஏற்படுகின்ற மரணத்தை ஏற்படுத்துகின்ற மற்றும் மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக்களுக்கு நட்டஈட்டை அறவிடுகின்ற செயல்முறையில் நீண்ட காலதாமதங்கள் ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.1.2 கருத்திட்டங்களை மேற்கொள்வதில் காலதாமதம்

அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழான இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களான 193-1-2-2509 மற்றும் 193-2-5-2001 இன் கீழ் ஆக்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்தி வேலையாளர் நட்டு ஈட்டு அலுவலகத்தின் நட்டஈட்டுத் தீர்ப்பாயம் பிரிப்புகளை நிறுவுவதற்கான ஒப்பந்தத்துக்காக கட்டடங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதிக்கு 6,090,000 ரூபா செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் எழுத்திலான ஒப்பந்தம் இருக்கவில்லையென்பதுடன், 2022 மார்ச் 15 ஆம் திகதியளவில் பணி இலக்கு நிறைவுசெய்யப்படுமென்று அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், கருத்திட்டத்தை மேற்கொள்வதில் நீண்ட காலதாமதத்தை ஏற்படுத்தி 2022 மே 25 ஆம் திகதியளவிலும் பணி இலக்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.1.3 ஆண்டு செயலாற்றுகை அறிக்கை

2020 ஓகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட 2/2020 ஆம் இலக்கத்தைக் கொண்டிருக் கின்ற அரச நிதிச் சுற்றிக்கையின் 10.2 ஆம் பந்தியின்படி, அரச நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 14 ஆம் வழிகாட்டல் இலக்கம் 14 இன் 01 ஆம் பந்தியின் 1.5 ஆம் நியதிகளின்படி ஆண்டு செயலாற்று அறிக்கையில் ஏதேனும் வெளிநாட்டு நிதியிடப்பட்ட கருத்திட்டங்கள் இருப்பின் அதன் விபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டியிருந்த போதிலும்,ஆசிய உற்பத்தித்திறன் தாபனத்தால் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திற்கு வழங்கப்பட்ட 90,000 அமெரிக்க டொலரிலிருந்து மஹியங்கனை வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் செயலாற்றுகை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.



### 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) அம்பாறை ஹொலிடேய் றேசோர்ட் அமைந்துள்ள காணியில், சாரதிகள் தங்குமிடத்தை நிருமாணிப்பதற்கான ஒப்பந்தம், 5,095,983 ரூபா பெறுமதிக்கு 2021 ஓகஸ்ட் மாதத்தில் தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின்படி, செலுத்தவேண்டிய முற்பணக்கொடுப்பனவின் பெறுமதி 20% ஆக இருந்த போதிலும், ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறி, ஒப்பந்தத்தின் மொத்தப் பெறுமதியும் முற்பணமாக 2021 டிசெம்பர் 29 ஆம் திகதியன்று 1,149,855 ரூபா மற்றும் 2021 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று 3,617,753 ரூபா (பணத்தை கழித்ததன் பின்னர்) செலுத்தப்பட்டுள்ளது.

(ஆ) 2022 சனவரி மாதமளவில் நிறைவுசெய்யப்பட்டிருக்க வேண்டிய இந்த ஒப்பந்தம், 2022 மே 25 ஆம் திகதியளவிலும்கூட நிறைவுசெய்யப்பட்டிருக்க வில்லை என்பதுடன், உடன்படிக்கை நியதிகளின்படி காலதாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சேதங்கள் மற்றும் இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) சேதங்கள் ஏற்பட்டு 6 முதல் 8 வருடங்கள் கடந்த பின்னரும், 2013 முதல் 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 5 வாகனங்களுக்கு ஏற்பட்ட 403,939 ரூபா பெறுமதியான சேதங்களை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்காது அல்லது நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் புத்தகங்களிலிருந்து பதிவழிப்புச் செய்யப்படாது அது தொடர்ச்சியாக நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சம்பளப் பிரிவின் முகாமைத்துவ உதவிப் பெண் அலுவலர் ஒருவர், 2022 சனவரி 11 ஆம் திகதி வெளியிடப்பட்ட தேசிய உற்பத்தித்திறன் செயல கத்தின் பதவியினரின் சம்பளத்தைத் தயாரிப்பதில் மோசடியில் ஈடுபட்டுள்ளார். 2018 ஓகஸ்ட் மாதம் முதல் 2020 டிசெம்பர் வரையான காலப்பகுதியில் 5,133,520 ரூபா பெறுமதியான இந்த சம்பள மோசடி இடம்பெற்றுள்ளது. மாதங்கள் கடந்தும் இது தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் தெரிவிக்கப்பட வில்லை யென்பதுடன், ஆரம்ப விசாரணைகளும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

அமைச்சுப் பதவியினரின் உணவருந்தும் இடமொன்றைத் தயாரிப்பதற்கு 2021 டிசெம்பர் 06 ஆம் திகதி அரச மரக்கூட்டுத்தாபனத்திற்கு 1,159,662 ரூபா செலுத்தப்பட்டுள்ளது. மெஹெவர பியெச கட்டடத்தின் 8 ஆவது மாடியில் 11,286 சதுர அடிப்பரப்பளவில் சிற்றுண்டிச்சாலையொன்று இருந்தபோதிலும், அமைச்சின் அலுவலர்கள் உணவருந்துவதற்கான இடமொன்றுக்கு 1,159,662 ரூபா செலவிடப்பட்டுள்ளது. (கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் இதற்குத் தேவையான ஏற்பாடுகள்

193-01-02-2001 ஆம் செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 193-01-02-2102 ஆம் செலவின விடயத்திலிருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன).

### 3.5 முகாமைத்துவ குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) குத்தகைத் தவணைத் தொகை செலுத்தப்பட்டு தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் பயன்படுத்தப்பட்டுவந்த 5 வாகனங்களின் உரிமையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் விளைவாக, பழுதடைந்த வாகனங்களின் முழு உரிமையும் இலங்கை வங்கியிடம் இருந்திருந்ததுடன், மேலும் 4 வாகனங்களின் உரிமைத்துவம் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் பெயரில் இல்லை.

(ஆ) 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டத்தின் XII ஆம் பகுதியின் 57(1) ஆம் பிரிவு நியதிகளின்படி, தொழிலின் நிமித்தம் பணியாளருக்கு விபத்தொன்று ஏற்பட்டு 14 நாட்களுக்குள் தொழில்தருநர் தொழில் ஆணையாளருக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்ற போதிலும், அத்தகைய நோக்கத்திற்காக வழிமுறையொன்றை உருவாக்காததன் விளைவாக வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு அறிவிக் கப்பட்ட விபத்துக்கள் 5 மாதங்களிலிருந்து 12 வருடங்களுக்கு காலதாமதம் செய்யப்பட்டதாக ஆவணங்களின்படி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) தொழில் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 8 வாகனங்களிலொன்று 2018 ஆம் ஆண்டில் விபத்தொன்றின் பின்னர் கைவிடப்பட்டதன் பின்னர் காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு மாற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டில் புதிய வருமான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு, குறித்த வாகனம் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், தகவல்களைப் பெற்றதன் பின்னர் குறித்த நிறுவனங்களுக்கு ஏனைய வாகனங்களை மாற்றுவது 2021 ஆம் ஆண்டின் இறுதி வரைகூட மேற்கொள்ளப்படவில்லையென்றும் தெரியவந்துள்ளது.

(ஈ) சீரிய வேலைக்கான தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக வருடாந்த மதிப்பீடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட 45,000,000 ரூபா ஏற்பாடுகளிலிருந்து, 14,884,644 ரூபா செலவிடப்பட்டு, 03 ஏனைய மூலதனச் செலவின விடயங்களுக்காக 11,856,138 ரூபா செலவிடப்பட்டதுடன், 3,028,506 ரூபா 2021 ஆண்டில் ஏற்பாடுகள் ஒதுக்கப்படாத செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

(உ) தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் 690 உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர்கள் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டில் அந்த அலுவலர்களுக்கு வேதனமாக 383,416,233 ரூபா வழங்கப்பட்டுள்ளது. உற்பத்தித்திறன் எண்ணக்கருக்களை நடைமுறைப்படுத்துவது இந்த அலுவலர்களின் முக்கிய கடமைகளிலொன்றாக இருந்தபோதிலும், அத்தகைய கருத்தாக்கங்களை நடைமுறைப்படுத்துவது குறைந்தபட்ச மட்டமாக இருந்துள்ளதுடன், சில அலுவலர்களுக்கு உற்பத்தித்திறன் எண்ணக்கரு பற்றி சரியான புரிதல்கூட இருக்கவில்லை. இந்த அலுவலர்களின் வகிபாகம் தலைமை அலுவலகத்தால் முறையாக ஒழுங்குபடுத்தப் படாமையால், இந்த அலுவலர்களின் வகிபாகம் குறித்த உற்பத்தித்திறன் மிகவும் மோசமான மட்டத்தில் இருந்தது.

(ஊ) 138 உற்பத்தித்திறன் மேம்பாட்டு அலுவலர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த 75 மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் 2020 ஆம் ஆண்டின் உற்பத்தித்திறன் விருது வழங்கும் வைபத்தில் பங்குபற்றியிருக்கவில்லை.

(எ) உரிய தரவுத்தளம் சரிசெய்யப்பட்டதாக 1980 யூலை வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்காக தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு விண்ணப்பங்களைப் பரிந்துரை செய்வதில் அமைச்சினால் பரிந்துரைசெய்யப்பட்டு பயனாளியொருவரிடமிருந்து பெறப்பட்ட இரண்டு விண்ணப்பங் களின் விளைவாக 1,000,000 ரூபா மிகையாகச் செலுத்தப்பட்டதாக கடந்த கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் கணக்காய்வுக்கு அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் பிரகாரம், தரவுத்தளம் இற்றைப்படுத்தப்பட்ட போதிலும், தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட 2022 ஆம் ஆண்டிற்கு முன்னர் பணம் செலுத்தப்பட்ட பயனாளிகள் பற்றிய தகவல்களின் பிரகாரம் தரவுத்தளம் இற்றைப்படுத்தப்பட்டதன் விளைவாக, மீண்டும் ஒரே நபர்களுக்கு விண்ணப்பங்கள் பரிந்துரை செய்யப்படுவதற்கான ஆபத்து காணப்படுகின்றது.

(ஏ) அம்பாறை விடுமுறை விடுதி அமைந்துள்ள காணி 2022 மே மாதமளவிலும்கூட தொழில் அமைச்சினால் சுவீகரிக்கப்படவில்லை.

## 4. சிறந்த ஆளுகை

### 4.1 பொது மக்களுக்கு சேவை வழங்குதல்

(அ) நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தில் அறிக்கையிடப்பட்ட 140 மரணத்தை ஏற்படுத்தும் விபத்துக்கள் மற்றும் 424 மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக்களுக்காக நட்டஈட்டினை அறவிடுவதற்கான செயன்முறை மற்றும் விபத்துக்கள் அறிக்கையிடப்பட்டதிலிருந்து 5 ஆண்டுகள் கழிந்துள்ள 5 மரணத்தை ஏற்படுத்திய விபத்துக்கள் 2021 நவம்பர் 30 ஆம் திகதியளவிலும் முடிவாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொழில் அமைச்சின் அகக்கணக்காய்வாளரின் 2021 மார்ச் 22 ஆம் திகதி யிடப்பட்ட அறிக்கையின்படி, எழுமானமாக தெரிவுசெய்யப்பட்ட 5 ஆண்டுளை விஞ்சிய கோப்புகள் 10 பரிசோதிக்கப்படுகையில், 03 முதல் 09 வருடங்களைக் கொண்ட காலப்குதியில் 13 தடவைகள் முதல் 52 தடவைகள் வரை சில வழக்குகள் அழைக்கப்பட்டிருந்த போதிலிலும், 2021 சனவரி மாதமளவிலும்கூட தீர்வுகள் வழங்கப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், நட்டஈட்டிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்களைப் பெறக்கூடிய நட்டஈட்டுக்கான விண்ணப்பமொன்றை மேற்கொண்டதன் பின்னர் நட்டஈட்டினைப்

பெற்றுக்கொள்வதற்கான நீண்டகால காலதாமதத்துக்கான காரணங்களை விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தொழில் நட்டஈட்டு நியாயசபையின் முடிபுகளுக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடுகள் தொடர்பான 13 கோப்புகள் தொடர்பாக நட்டஈட்டு அலுவல கத்தில் தொழில்தருநர்களால் வைப்புச்செய்யப்பட்ட 4,947,535 ரூபாவுக்காக கணக்குகள் திறக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 3,729,505 ரூபா தொகைக்காக 10 சேமிப்பு கணக்குகள் திறக்கப்பட்டமையால், 1 முதல் 4 வருடங்கள் வரையான காலப்பகுதியொன்றுக்கு காவாவதியாகியிருந்தது.

(ஈ) தொழிலின் நிமித்தம் மரணத்தை ஏற்படுத்திய விபத்துக்கள் காரணமாக இறந்த பணியாளர்களின் பராயமடையாதோர்களுக்கான உரித்தான நட்டஈடு, அவர்கள் பராயமடையும் வயதை அடையும் வரை நட்டஈட்டு ஆணையாளரின் பெயரில் தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான கணக்கொன்றில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அவர்கள் பராயமடைகின்ற வயதை அடைந்ததன் பேரில் அவர்களக்கு விடுவிக்கப்படுதல் வேண்டும் என்ற போதிலும், பராயமடைகின்ற வயதை அடைந்ததன் பின்னர் அவ்வாறு விடுவிக்கப்படாத அடையும் வரை நட்டஈட்டு ஆணையாளரின் பெயரில் தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்புகளின் தொகை 2021 டிசெம்பர் 20 இல் 6,100,788 ரூபாவாகும்.

(உ) பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு இழப்பீடு வழங்கவேண்டுமென்று தொழில் நியாயசபை தீர்ப்பளித்துள்ள போதிலும், தொழில்தருநர்கள் இழப்பீடு வழங்காததால், 2021 டிசெம்பர் 31 இல் 46 வழக்குகள் பிடியாணைகளாக இருந்தன. அவற்றில் செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகை 13,419,197 ரூபா ஆகும். அவற்றுள் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலுள்ள 10 வழக்குகளுக்கு 1,873,352 ரூபாவும், 5 முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 21 வழக்குகளுக்கு 6,917,546 ரூபாவும், 1 முதல் 4 ஆண்டுகளுக்கிடைப்பட்ட 15 வழக்குகளுக்கு 4,628,298 ரூபாவும் உள்ளடங்குகின்றன. பயன்பெறுகின்ற பணியாளருக்கு தொழில் நியாயசபை நட்டஈடு வழங்கியிருந்த போதிலும், பயன்பெறுகின்ற பணியாளர் இத்தொகையைப் பெற்றிருக்காமையானது, வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தின் குறிக்கோள் அடையப் பெற்றிருக்கவில்லை.

## 5. மனித வள முகாமைத்துவம்

### 5.1 சம்பளங்கள் மற்றும் வேதனங்களுக்காக இணைக்கப்பட்டுள்ள பதவியினர் மற்றும் உண்மையான பதவியினரும் செலவீனங்களும்

(அ) வேலையாளர் நட்டஈட்ட ஆணையாளர் அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ள நீதி அலுவலர்களாக வேலையாளர் நட்டஈட்ட ஆணையாளர், மேலதிக வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர், பிரதி வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் ஆகிய மூன்று பதவிகளும், உதவித் தொழில் ஆணையாளர் பதவி 1 ஆகியவை இருந்த போதிலும், இந்த 3 பதவிகளும் நீண்ட காலமாக வெற்றிடமாக உள்ளதுடன், இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை இதுவரை எடுக்கப்படவில்லை.





நட்டஈட்டு வழங்குகளை விசரிப்பதற்கு நீண்ட காலப்பகுதி எடுத்துள்ளதுடன், நாடு முழுவதும் காணப்படுகின்ற 14 தொழில் நியாயசபைகளில் ஒரேயொரு நீதிபதியினால் வழக்குகளை விசாரிப்பதற்காக நட்டஈட்டு வழக்குகள் அழைக்கப்படுவதனால் நீண்ட காலப்பகுயொன்று எடுத்துள்ளமையே இதற்கு காரணமாகும். உதாரணமாக, கொழும்பு வலயத்தில் மட்டும் உயிராபத்தை ஏற்படுத்திய விபத்துக்களில், தீர்ப்புகள் வழங்கப்பட்டாத 26 கோப்புகள் மற்றும் 2 முதல் 7 வருடங்களுக்கு முன்னர் இறுதி விசாரணை அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2021 ஆம் ஆண்டில் தொழில் அமைச்சின் தனிப்பட்ட வேதனாதிகளுக்காக 483,931,657 ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன், அங்கீகரிக்கப்பட்டுள்ள மற்றும் உண்மையான பதவியணி பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | பணியாளர்களின் வகைப்பாடு | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உண்மையான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 45 | 22 | 23 |
| (ii) | உயர் மட்டம் | 10 | 06 | 04 |
| (iii) | இரண்டாவது மட்டம் | 897 | 783 | 114 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 57 | 32 | 25 |
| | **மொத்தம்** | **1,009** | **843** | **166** |

**கே.சீ.பி.சேனாரத்ன**
சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் அதிபதி,
கணக்காய்வாளர் அதிபதிக்காக.

# அத்தியாயம் நான்கு

## செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

## 4.1 அமைச்சின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (செயற்றிட்டத்தின் அடிப்படையில்)

**அட்டவணை 4-1** அமைச்சின் செயலாற்றுகை குறிகாட்டிகள்

| | குறிப்பிட்ட குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்பட்ட விளைவில் உண்மை விளைவு வீதமாக (%) | | |
|---|---|---|---|---|
| | | 100% - 90% | 75% - 89% | 50% - 74% |
| 1 | தொழில் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்ட / திருத்தப்பட்ட சட்டங்களின் எண்ணிக்கை * | 13 | 5 | 1 |
| 2 | சர்வதேச தொழில் தாபனத்தின் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட சமவாயங்களுக்காக ஆக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | 100% | | |
| 3 | தொழிற்றுறை அமைதியை அதிகரிக்கும் நோக்கில் எடுக்கப்பட்ட கொள்கை முடிபுகளின் எண்ணிக்கை * | 7 | | |
| 4 | இந்த ஆண்டிற்குள் நடத்தப்பட்ட மொத்த தொழில் விசாரணைகளால் நிருபிக்கப்பட்ட தொழில் விசாரணைகளின் (ஏ மற்றும் பீ) விகிதம். | | ** | |
| 5 | இலக்குவைக்கப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கையின் விகிதமாக நடத்தப்பட்ட தொழில் விசாரணைகளின் எண்ணிக்கை. | | | ** |
| 6 | சிறுவர் தொழில் பற்றி பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை விகிதமொன்றாக தீர்க்கப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை விகிதம் | | 69% | |
| 7 | இலக்கின் விகிதமொன்றாக சமூக கலந்துரையாடலுக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணிக்கை. | | | 17%** |
| 8 | 14 நாட்களுக்குள் ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலக் கொடுப்பனவு விகிதமாக | | | 65% |
| 9 | தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு பணியாளர் களுக்காக உருவாக்கப்பட்ட தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு அலுவலர்களது எண்ணிக்கை. | 100% | | |
| 10 | தொழில் சட்டங்கள் பற்றி அறிவூட்டுவதற்காக தொழிலணிக்காக நடத்தப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | | | 72% |
| 11 | தீர்க்கப்பட்ட வழக்குகளில் தொழில்சார் விபத்துக்கள் (உயிராபத்தை ஏற்படுத்தும் மற்றும் உயிராபத்தை ஏற்படுத்தாத) பற்றி நிறைவுசெய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | | 77% | |
| 12 | உற்பத்தித்திறன் எண்ணக்கரு பற்றிய பயிற்சி மற்றும் கல்வியறிவு வழங்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை. | 108% | | |

குறிப்பு

* இச்செயற்பாடுகள் தேவைப்பாட்டினைப் பொறுத்து மேற்கொள்ளப்படுகின்றதாகையால், இறுதிப் பெறுபேறு குறிப்பிடப்படவில்லை. ஆகவே, விகிதாசாரமாக தகவல்களை சமர்ப்பிப்பது சாத்தியமற்றது.

** கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக எழுந்த நிலைமைக்கு முகம்கொடுத்ததில் சில மாதங்கள் கள விசாரணைகளின் இலக்கு எண்ணிக்கையை நடத்துவதற்கு சிரமமாக வந்திருந்ததனால் முற்றாக நிறுத்த அல்லது மட்டுப்படுத்த வேண்டியிருந்தது. அதேபோன்று மாவட்ட மற்றும் உப மாவட்ட தொழில் அலுவலகங்களின் முன்னேற்ற அறிக்கைகள் தற்போதும் பெறப்பட்டுக் கொண்டிருப்பதனால் சரியான எண்ணிக்கையை வழங்குவது சிரமமாக உள்ளது.

** சமூகக் கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டங்களின் இலக்குவைக்கப்பட்ட விகிதாசாரத்தை, கோவிட்-19 தொற்றுநோய் நிமித்தம் விதிக்கப்பட்டுள்ள மட்டுப்படுத்தல்களைக் கவனத்தில் கொண்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களது செயற்பாடின்மை காரணமாக ஆய்வாண்டு காலப்பகுதியில் அடையமுடியவில்லை.

# அத்தியாயம் ஐந்து

## நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயலாற்றுகை

### 5.1 இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள

**அட்டவணை 5-1** அமைச்சுடன் தொடர்புபட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| இலக்கு / குறிக்கோள் | | இலக்குகள் | | சாதனையின் குறிகாட்டிகள் | | இன்றுவரை சாதனையின் முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| 05 | பாலின சமத்துவத்தை அடைதல் மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை வலுப்படுத்துதல் | 5.1 | அனைத்திடங்களிலும் அனைத்துப் பெண் களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் எதிரான அனைத்து வடிவிலான பாகுபாடு களையும் முடிவுறுத்துதல். | 5.1.1. | பாலின அடிப்படையில் சமத்துவத் தையும் பாகுபாடின்மையையும் மேம்படுத்துவதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் சட்டக்கட்டுக் கோப்புகள் உரியமுறையில் உள்ளனவா இல்லையா. | • 2021 தொழில் திணைக்களத்தின் பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகாரப்பிரிவினால் பெறப்பட்ட முறைப்பாடுகளில் 2021 ஆம் ஆண்டுடன் தொடர்புபட்ட 02 முறைப்பாடுகளின் விசாரணை நிறைவுசெய்யப்பட்டு, கோப்புகள் மூடப்பட்டிருந்தன. 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகள் தொடர்பான 11 கோப்புகளின் விசாரணை முடிவு செய்யப்பட்டு கோப்புகள் மூடப் பட்டிருந்தன. சேவை நிபந்தனை மீறல் தொடர்பாக 11 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை முறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (2020 ஆம் ஆண்டிலிருந்து விசாரிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான இந்த வழக்குகள் 2021 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப் பட்டிருந்தன). |
| | | 5.2 | அரச மற்றும் தனியார் துறை களின் அனைத்து மட்டங்களிலும் அனைத்துப் பெண் களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் எதிரான அனைத்து வடிவத்திலுமுள்ள வன்முறைகளை இல்லாதொழித்தல் | 5.2.1 | உடல், பாலியல் அல்லது உளவியல் ரீதியில் தற்போதைய அல்லது முன்னைய நெருக்கமான நபரால் கடந்த 12 மாதங்களில் வன்முறை வடித்தில் மற்றும் வயது என்றரீதியில் வன்முறைக் குள்ளான எப்போதும் திருமண மாகாத பெண்கள் மற்றும் 15 வயதினை அடைந்த பெண் பிள்ளைகளின் மற்றும் முதியவர் கள் விகிதாசாரம். | • 302 நிறுவனங்கள் பரிசோதிக் கப்பட்டிருந்தன. நிறுவகம்சார் நிபந்தனை மீறல்கள் 30 அறிவிக் கப்பட்டிருந்தது. நிபந்தனைகளை மீறியமைக்காக 2 நிறுவனங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. சிறிய நிபந்தனை மீறல்களுக்காக ஏனைய 28 நிறுவனங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 5. C | சிறந்த கொள்கைகளை கைக்கொள்ளுதலும் பலப்படுத்துதலும் மற்றும் பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான சட்டவாக்கங்களை நடைமுறைப்படுத்துதல் அத்துடன் அனைத்து மட்டங்களிலும் அனைத்துப் பெண்களையும், பெண் பிள்ளைகளையும் வலுப்படுத்துதல். | 5.C.1 | பாலின சமத்துவத்தையும், பெண் களையும் வலுப்படுத்துவதற்கு மான பொறிமுறைகள் மற்றும் அரச நிதியிடலுடனான நாடுகளின் எண்ணிக்கை. | • உரிய பிரதேசங்களிலிருந்து 11 வலய தொழில் அலுவலகங் களினூடாக தனியார் துறை ஒவ்வொன்றினதும் 30 பெண் வேலையாட்களை உள்ளடக்கிய 08 குழுக்களுக்கு பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்புடையதான தொழில் சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருந்தது.<br>• தொழில் திணைக்களமானது, தொழில் சட்டம் பற்றி வழிகாட்டி பெண் பிள்ளைகளுக்கு அறிவூட்டுவதன் மூலம் சமூக விழிப்புணர் வினை ஏற்படுத்துவதற்கு 'ஸ்ரீலங்கா கேர்ல் கைட்ஸ் அசோசியேசன்' என்ற அமைப்புடன் இணைந்துள்ள துடன்,'கேர்ல்ஸ் கைட்ஸ்' இனை வலுப்படுத்தும் குறித்த குறிக்கோள்களை இலக்கு வைத்து இரு தரப்புகளுக்கு மிடையில் புரிந்துணர்வு ஒப்பந்த மொன்று ஒப்பமிடப்பட்டுள்ளது.<br>• முக நூல் சமூக ஊடக தளத்தில் நேரடியாக காட்சிப்படுத்தப்பட்ட 'இலங்கை தொழில் சட்டம் பெண்களின் பொருளாதாரத் திற்கு சாதகமானதா' என்ற தலைப்பின் கீழ் 2021.03.05 ஆம் திகதி நடத்தப்பட்ட கலந்துரை யாடலில் திணைக்களம் பங்கு பற்றியிருந்தது. சேவைக் காலப் பகுதியில் தொழில் சட்டங்களின் தாக்கம் பற்றி அதில் விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டிருந்தது.<br>• பெண்கள் பணிபுரியும் சூழல் பற்றியும், வேலைத்தலத்தில் பாலியல் துன்புறுத்தல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிதிட்ட மொன்று களனி தனியார் நிறுவனமொன்றில் நடத்தப்பட்டிருந்தது.<br>• கொக்கல்லை கட்டுநாயக பெண்கள் தங்கும் விடுதிகளுக்கு உளவியல் ஆலோசனை மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டிருந்தது. |
| 08 | நிலைபேறான, பிரத்தியோகமான பொருளாதார வளர்ச்சி, முழுமையான ஆக்கத்திறனுள்ள தொழில் மற்றும் அனைவருக்கும் சீரிய வேலையை மேம்படுத்துதல். | 8.5. | இளைஞர்கள் மற்றும் அங்கவீனமுடையவர்கள் உள்ளடங்கலாக அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கு ஆக்கத் திறனுள்ள தொழில் மற்றும் சீரியவேலை அத்துடன் சமமான மதிப்புள்ள வேலைக்கு சமமான ஊதியம் என்பவற்றை 2030 ஆம் ஆண்டளவில் அடைதல் | 8.5.1 | தொழில், வயது மற்றும் அங்கவீனத்துடன் என்றரீதியில் பெண், ஆண் பணியாளர்களின் மணித்தியால சராசரி உழைப்பு. | தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறையில் சேவையாற்றுகின்ற பணியாளர்களது மணித்தியால மொன்றிற்கான சராசரி வருமானம் தொழில் சட்டங்களின்படி தொழில், வயது மற்றும் குறித்த நபரொருவரின் அங்கவீனம் போன்றவற்றினைப் பொறுத்து வேறுபடாது.<br><br>சிறுவர் செயற்பாட்டு ஆய்வு-2016 இன்படி, நாட்டில் இருக்கின்ற சிறுவர் தொழில் 1% என்பதுடன், அதனை இல்லாதாக்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| | | 8.7 | வலுக்கட்டாய தொழிலை இல்லாதொழித்தல், நவீன அடிமைத்தனத்தையும், ஆட் கடத்தலையும் முடிவுறுத்துதல், சிறுவரை படைக்கு ஆட்சேர்ப்புச் செய்தல், பயன்படுத்துதல் உள்ளடங்கலாக தீங்கிளைக்கின்ற வடிவத்திலான சிறுவர் தொழிலை தடைசெய்தல் மற்றும் இல்லாதொழித்தல் போன்றவற்றுக்கு உடனடியானதும் பயனுள்ளதுமான நடவடிக்கைளை எடுத்தல் மற்றும் 2025 ஆம் ஆண்டளவில் அனைத்து வடிவங்களிலு மான சிறுவர் தொழிலை இல்தொழித்தல். | 8.5.2 | பாலினம், வயது மற்றும் அங்கவீனத்துடன் என்றரீதியில் தொழில்வாய்ப்பின்மை வீதம். | |
| | | | | 8.7.1 | பால்ரீதியில் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 5 முதல் 17 வயது வரையான சிறுவர்களின் எண்ணிக்கை. | |
| | | 8.8 | குடிபெயர் குறிப்பாக பெண் குடிபெயர் வேலை யாளர்கள் உள்ளடங் கலாக அனைத்து வேலையாளர்களதும் தொழில் உரிமையைப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பான வேலைச் சூழலை மேம்படுத்துதல் | 8.8.1 | பாலினம் மற்றும் புலம்பெயர் நிலையினால் 100,000 வேலை யாட்களுக்கு உயிராபத்தை ஏற்படுத்தும், உயிராபத்தை ஏற்படுத்தாத தொழில்சார் காயங்கள். | தொழில்களுடன் தொடர்புபட்டுள்ள உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய மற்றும் ஏற்படுத்தாத விபத்துக்கள் பற்றி அறிக்கையிடப்பட்டுள்ள போதிலும் பால் மற்றும் நடமாடுதல் தொடர்பில் பதிவுகள் இல்லை யென்பதுடன், எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| 8.8.2 | சர்வதேச தொழில் தாபனத்தின் ஆவணங்கள் மற்றும் தேசிய சட்டவாக்கங்களின் அடிப்படையில் பால் மற்றும் குடிபெயர் நிலை என்றரீதியில் தொழில் உரிமை களுடன் (ஒன்று கூடுவதற்கான, பேரம் பேசுவதற்கான சுதந்திரம்) தேசிய இணக்கத்தின் மட்டம். | ஒன்றுகூடுவதற்கான மற்றும் பேரம் பேசவதற்கான சுதந்திரம் உறுதிப் படுத்தப்படுவதுடன், 2021.12.31 இலுள்ளவாறு நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழில் சங்கங் களின் எண்ணிக்கை 1936 ஆகும்.<br><br>அதேபோன்று, 2021 ஆம் ஆண்டுடன் தொடர்புபட்டுள்ள ஆண்டறிக்கை களை சர்வதேச தொழில் தாபனத் திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களிலுள்ள குறைபாடுகள் ஆகக்குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது என்று சர்வதேச தொழில் தாபனத்தின் நிபுணத்துவக் குழு அவதானிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. |

### 5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதில் சாதனைகள் மற்றும் சவால்கள்

2030 ஆம் ஆண்டளவில் இலங்கையால் உணரப்படவுள்ள நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில், இந்த அமைச்சின் செயற்பணி நியதிகளின்படி அமைச்சுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ள இலக்கு, பிரத்தியேகமான, நிலைபேறான அபிவிருத்தி வளர்ச்சியை மேம்படுத்துதல், தொழில்வாய்ப்பு மற்றும் அனைவருக்கும் சீரிய வேலை என்ற இலக்கு 08 ஆகும். இதன்படி, தொழில் அமைச்சின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி இந்த இலக்குக்கமைவானது என்பதுடன், தொழில் அமைச்சினதும், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்களினதும், அனைத்துச் செயற்பாடுகளினதும் இறுதிப் பெறுபேறு, இந்த இலக்கினை வெற்றிகரமாக உணர்வதாகும். ஆகையால், இந்த அமைச்சின் ஒட்டுமொத்த 08 ஆவது இலக்கினை அடைவதிலுள்ள முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கின்றது. அதற்கப்பால், பாலின சமத்துவத்தை அடைதல், அனைத்துப் பெண்களையும், பெண் பிள்ளைகளையும் வலுப்படுத்துதல் என்பவற்றைக் கொண்டிருக்கின்ற 05 ஆவது இலக்கும் அமைச்சுக்கு குறித்தொதுக்கப்பட்ட தொழிற்பாடுகளுடன் தொடர்புபடுகின்றது.



# அத்தியாயம் ஆறு

## மனிதவள விபரம்

## 6.1 பதவியணி முகாமைத்துவம்

**அட்டவணை 6-1** 2021.12.31 இலுள்ளவாறு அமைச்சினது பதவியணி

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | 2021.12.31 இல் தற்போதுள்ள பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வீதமாக வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 273 | 171 | 102 | 37% |
| உயர் மட்டம் | 694 | 494 | 200 | 29% |
| இரண்டாவது மட்டம் | 2,679 | 2,342 | 337 | 13% |
| ஆரம்ப மட்டம் | 558 | 467 | 91 | 16% |
| மொத்தம் | **4,204** | **3,474** | **730** | **17%** |

## 6.2 மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மேலதிகம் அமைச்சின் செயலாற்று கையில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது.

அமைச்சினதும், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்களினதும் மனிதவளங்களின் பற்றாக்குறை பின்வருமாறு :

**பற்றாக்குறை**

- சிரேஷ்ட மட்டம் 102
- உயர் மட்டம 200
- இரண்டாவது மட்டம் 337
- ஆரம்ப மட்டம் 91

**மொத்தம் 730**

மனிதவளங்களின் பற்றாக்குறை காரணமாக அலுவலர்கள் அவர்களது உண்மையான பதவியின் கடமைகளுக்கு மேலதிகமாக வெற்றிடப் பதவிகளின் கடமைகளை ஆற்றுவதற்கு அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். விசேடமாக, பதவி படிநிலையில் முடிபெடுத்தல், நிதிசார் அதிகாரம், பணிப்புரைகளை எளிதாக்குதல் முறைப்படுத்துதல் போன்ற பொறுப்புகளை ஏற்றல் போன்ற அத்தகைய சந்தர்ப்பங்களில் நிறைவேற்றுத் தரத்திலுள்ள அலுவலர்களின் பற்றாக்குறை கரணமாக நடைமுறைப் பிரச்சினைகள் எழுகின்றன. அத்தகைய சந்தர்ப்பங்களின் கீழ், அலுவலர்கள் உடல், உளரீதியில் பாதிக்கப்படுவதுடன், அதனால் அலுவலர்களிடமிருந்து உச்ச வினைத்திறனை உறுதிப்படுத்த முடியாது. இந்த நிலைமை, இந்த அமைச்சின் ஒட்டுமொத்த செயலாற்று கையை பாரியளவில் பாதிப்பதுடன், அமைச்சின் வினைத்திறனைக் குறைப்பதற்கான சாத்தியமுள்ளதென்று அவதானிக்கப்படுகின்றது.

## 6.3 மனிதவளங்கள் அபிவிருத்தி

### 6.3.1 உள்நாட்டு பயிற்சி பாடநெறிகளில் அமைச்சின் அலுவலர்கள் பங்குபற்றியமை

**அட்டவணை 6-2** உள்நாட்டு பயிற்சி பாடநெறிகளில் அமைச்சின் அலுவலர்கள் பங்குபற்றியமை

| | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றுவிக் கப்பட்ட பதவி யினரின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டத்தின் காலப் பகுதி | ஓட்டு மொத்த முதலீடு (ரூபா) | பெறுபேறு / பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
|---|---|---|---|---|---|
| 1 | ஒழுக்காற்று நடவடிக்கைமுறை | 1 | 06 மணித்தியாலங்கள் | 3,500.00 | குறித்தொதுக்கப்பட்ட விடயங்களை அதிகளவு பயனுள்ள வகையிலும், சரியாகவும் கையாளுதல் |
| 2 | அலுவலக முகாமைத்துவமும் நிதி ஒழுங்குவிதிகளும் | 1 | 24 மணித்தியாலங்கள் | 7,000.00 | குறித்தொதுக்கப்பட்ட விடயங்களை அதிகளவு பயனுள்ள வகையிலும், சரியாகவும் கையாளுதல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | ஆதனங்கள் / உபகரணங்கள் உள்ளடங்கலாக சொத்துக்களை வைத்திருத்தலும் பாதுகாத்தலும் | 1 | 06 மணித்தியாலங்கள் | 3,500.00 | குறித்தொதுக்கப்பட்ட விடயங்களை அதிகளவு பயனுள்ள வகையிலும், சரியாகவும் கையாளுதல் |
| 4 | பெறுகைத் திட்டத்தைத் தயாரித்தல் | 1 | 06 மணித்தியாலங்கள் | 3,500.00 | குறித்தொதுக்கப்பட்ட விடயங்களை அதிகளவு பயனுள்ள வகையிலும், சரியாகவும் கையாளுதல் |
| 5 | பயிற்சியும் அபிவிருத்தியும் | 1 | 06 மணித்தியாலங்கள் | 3,500.00 | குறித்தொதுக்கப்பட்ட விடயங்களை அதிகளவு பயனுள்ள வகையிலும், சரியாகவும் கையாளுதல் |
| 6 | அகக்கணக்காய்வு அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 1 | 08 மணித்தியாலங்கள் | - | குறித்தொதுக்கப்பட்ட விடயங்களை அதிகளவு பயனுள்ள வகையிலும், சரியாகவும் கையாளுதல் |
| 7 | மகளிர் இயலுமை விருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 9 | 03 மணித்தியாலங்கள் | - | நேர்மறை மனப்பாங்கு சார் மாற்றத்தை உருவாக்குதல் |
| 8 | ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் (கோட்பாட்டு அறிவும் கள விஜயமும்) | 22 | 34 மணித்தியாலங்கள் | 25,000.00 | அரச துறையில் வேலைச் சூழலை அறிமுகப்படுத்தி கடமை களில் அடிப்படை அறிவினை வழங்கி மிகவும் வினைத் திறனுடனும் சரியாகவும் விடயங்களைக் கையாள முடிதல் |
| 9 | அலுவலக மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத் துவதற்கான உபாயத் திட்டத்தின் பயன்பாட்டுக்காலத்திற்கான பயிற்சிசெயலமர்வு | 1 | 06 மணித்தியாலங்கள் | 19,240.00 | அரச கரும மொழிக் கொள்கையை பயனுறுதி வாய்ந்ததாகவும், வினைத்திறனுடனும் நடைமுறைப்படுத்துதல் |
| 10 | பொது முகாமைத்துவ முதுமாணிப் பட்டம் | 1 | முதலாவது வருடம் | 175,000.00 | விடயப்பரப்பில் பரந்த அறிவினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் சிறந்த வினைத் திறனுடன் கடமைகளை ஆற்றுதல் பிரமாணக் குறிப்பு களின்படி தேவைப்பாடு நிறைவேற்றப்படவுள்ளது. |
| 11 | அரச பெறுகைத் திட்டம் பற்றிய பயிற்சி | 6 | 45 மணித்தியாலங்கள் | 7,200.00 | குறித்தொதுக்கப்பட்ட விடயங்களை அதிகளவு பயனுள்ள வகையிலும், சரியாகவும் கையாளுதல் |
| 12 | நுகர்வோர் சேவைகள் ஏற்பாடு பற்றிய பயிற்சி | 3 | 51 மணித்தியாலங்கள் | 3,600.00 | குறித்தொதுக்கப்பட்ட விடயங்களை அதிகளவு பயனுள்ள வகையிலும், சரியாகவும் கையாளுதல் |
| 13 | பௌதீக சொத்துக்களைச் சரிபார்ப்பது பற்றிய பயிற்சி அரச துறை | 4 | 37 மணித்தியாலங்கள் | 4,000.00 | குறித்தொதுக்கப்பட்ட விடயங்களை அதிகளவு பயனுள்ள வகையிலும், சரியாகவும் கையாளுதல் |
| 14 | பணியாளர்களின் ஒழுக்கம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 6 | 35 மணித்தியாலங்கள் | 4,200.00 | குறித்தொதுக்கப்பட்ட விடயங்களை அதிகளவு பயனுள்ள வகையிலும், சரியாகவும் கையாளுதல் |
| 15 | தொழில்சார் விருத்தி பற்றிய பயிற்சி | 6 | 25 மணித்தியாலங்கள் | 4,200.00 | குறித்தொதுக்கப்பட்ட விடயங்களை அதிகளவு பயனுள்ள வகையிலும், சரியாகவும் கையாளுதல் |
| 16 | தலைமைத்துவம் மற்றும் ஊக்குவிப்பு பற்றிய பயிற்சி | 6 | 50 மணித்தியாலங்கள் | 9,600.00 | குறித்தொதுக்கப்பட்ட விடயங்களை அதிகளவு பயனுள்ள வகையிலும், சரியாகவும் கையாளுதல் |
| 17 | சேவைத் துறைக்கான சிறந்த உருமாற்றம் பற்றிய செயலமர்வு | 20 | 03 நாட்கள் | - | குறித்தொதுக்கப்பட்ட விடயங்களை அதிகளவு பயனுள்ள வகையிலும், சரியாகவும் கையாளுதல் |
| 18 | உயர் செயலாற்றுகை முகாமைத்துவம் பற்றிய செயலமர்வு | 10 | 03 நாட்கள் | - | குறித்தொதுக்கப்பட்ட விடயங்களை அதிகளவு பயனுள்ள வகையிலும், சரியாகவும் கையாளுதல் |
| 19 | தொழில்நுணுக்க நிபுணத்துவ சேவை நிகழ்ச்சித்திட்டம் - அரச துறைக்காக பாரிய தரவு பற்றிய செயலமர்வு | 2 | 03 நாட்கள் | - | குறித்தொதுக்கப்பட்ட விடயங்களை அதிகளவு பயனுள்ள வகையிலும், சரியாகவும் கையாளுதல் |
| 20 | தலைமைத்துவம் மற்றும் ஆளுமை பற்றிய வெளிவாரிப் பயிற்சி | 50 | 02 1/2 நாட்கள் | 440,000.00 | அதிகரிக்கப்பட்ட அணி உணர்வினூடாக ஒட்டுமொத்த பயனுறுதியையும் ஆக்கத்திறனையும் அதிகரித்தல் |

### 6.3.2 உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் தொழில் திணைக்கள அலுவலர்களின் பங்கு பற்றுதல் உள்நாட்டு

**அட்டவணை 6-3** உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் தொழில் திணைக்கள அலுவலர்களின் பங்கு பற்றுதல்

| | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்று விக்கப்பட்ட பதவியினரின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலப் பகுதி | ஓட்டுமொத்த முதலீடு (ரூபா) | பெறுபேறு / பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
|---|---|---|---|---|---|
| 1 | சர்வதேச மகளிர் தினத்தைக் குறிக்கு முகமாக நடத்தப்பட்ட இயலுமை விருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 150 | 01 நாள் | 95,720.00 | அலுவலர்களின் கலை ரசனை மற்றும் இயலுமை விருத்தியை மேம்படுத்துதல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | தொழில் பரிசோதனை அறிக்கைகளின் திருத்தம் பற்றிய விழிப்புணர்வு அத்துடன் தொழில்சார் சுகாதாரம் மற்றும் தொழிற்றுறைப் பாதுகாப்பு பற்றி அலுவலர்களுக்குப் பயிற்சியளித்தல். | 175 | 02 நாள் | 162,650.00 | திருத்தப்பட்ட தொழில் பரிசோதனை அறிக்கைகளுக்கு முயற்சிப்பதற்கு தேவைப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் நடவடிக்கைமுறை. |
| 3 | ஊ.சே.நி தரவு முறைமை பற்றி அலுவலக மட்டத்தில் அலுவலர்களிடையே விழிப்புணர்வினை எற்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம். | 68<br>68 | 01 நாள்<br>01 நாள் | 128,875.00 | ஊ.சே.நி தரவு முறைமை மற்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றி அலுவலர்களின் அறிவை நாளது வரைப்படுத்துதல். |
| 4 | பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களுக்கான ஆற்றுப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டம். | 18 | 01 நாள் | 11,740.00 | கடமைகளை ஆற்று வற்குத் தேவைப்பட்ட அறிவினை வழங்குதல். |
| 5 | விசேட புலன் விசாரணைப் பிரிவின் அபிவிருத்தி அலுவலர் களுக்கான பயிற்சி. | 04 | 02 நாள் | 8,280.00 | விசாரணை அணியின் செயற்பாடுகளை கற்பித்தல் |
| 6 | புதிய அபிவிருத்தி அலுவலர்களுக்கான ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் (இணைவழி). | 91 | 07 நாள் | 21,900.00 | கோப்பு முகாமைத்துவம் மற்றும் அலுவலக முறைகள் பயிற்சி பயிற்சியளிக்கும் அலுவலர்கள். |
| 7 | உதவித் தொழில் ஆணையாளர்களுக் கான ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | 08 | 02 நாள் | 112,055.00 | கடமைகளை ஆற்றுதல் மற்றும் ஆற்றுப்படுத்தல் பயிற்சிக்குத் தேவைப் பட்ட அறிவினை வழங்குதல். |
| 8 | தொழில் திணைக்களத் தால் பெறப்பட்ட முறைப்பாடுகள், மேன் முறையீடுகளைத் தீர்ப்பதற்கு நிலையியல் தொழிற்பாட்டு நடவடிக்கைமுறையை நடைமுறைப்படுத்துவது பற்றிய SOP விழிப்புணர்வு (இணைய வழி). | 118 | 02 நாள் | - | முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகளைத் தீர்ப்பதற்கான SOP விழிப்புணர்வு |
| 9 | 30% கொடுப்பனவு மற்றும் 'எல்'பிரிவின் சேவைகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (இணைய வழி) | 100 | 02 நாள் | 3,870.00 | 30% கொடுப்பனவு மற்றும் 'எல்'பிரிவின் சேவைகள் பற்றிய அலுவலர்களின் அறிவினை இற்றைப்படுத்துதல். |
| 10 | பொது நிதி முகாமைத்துவ செயன்முறை மற்றும். பெறுகை செயன்முறை பற்றிய அறிவினை அலுவலர்களுக்கு ஏற்படுத்துதல் (இணைய வழி) | 75 | 03 நாள் | 11,850.00 | பொது நிதி முகாமைத்துவ செயன் முறை மற்றும். பெறுகை செயன்முறை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல். |
| 11 | சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மறைக்கப்பட்ட தொழில் உறவுகள் பற்றிய அறிவினை அலுவலர்களுக்கு ஏற்டுத்துதல் - 2021 (இணைய வழி) | 520 | 06 நாள் | 35,515.00 | மறைக்கப்பட்ட தொழில் உறவுகள் பறறி அறிமுகப்படுத்துதல். |
| 12 | ஊ.சே.நி தரவு முறைமை மற்றும் அனுகூலக் கொடுப்பனவுப் பிரிவு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம். | 526 | 04 நாள் | 18,900.00 | ஊ.சே.நி தரவு முறைமையை மற்றும் அனுகூலக் கொடுப்பனவினைக் கையாள்கின்ற அலுவலர்களின் அறிவினை இற்றைப் படுத்துதல் மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்தல். |
| 13 | சட்டங்களின் அறிமுகம், சட்டங்களின் திருத்தம், முறைப்பாட்டு விசாரணை, சான்றுகளை சேகரித்தல் மற்றும் வழக்குகளைத் தாக்கல் செய்தல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்- மத்திய வலயம் மற்றும் தென் வலயம் | 130 | ஒவ்வொரு வலயத்திற்கும் 01 நாள் | 129,700.00 | மறைக்கப்பட்ட தொழில் உறவுகள் பற்றி அறிமுகப்படுத்துதல் மறறும் பிரச்சினை களைத் தீர்த்தல். |
| 14 | 18/2020 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை நியதிகளின் படி நடத்தப்பட்ட மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்-ஆரம்ப சேவை மட்டம் | 43 | 100 மணித்தியாலங்கள் | 75,000.00 | அலுவலர்களின் தமிழ் மொழித் தேர்ச்சியை செம்மைப்படுத்துதல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | 18/2020 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை நியதிகளின்படி நடத்தப்பட்ட மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்-இரண்டாவது சேவை மட்டம் | 136 | 150 மணித்தியாலங்கள் | 2,25,000.00 | அலுவலர்களின் தமிழ் மொழித் தேர்ச்சியை செம்மைப்படுத்துதல். |
| 16 | 18/2020 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை நியதிகளின் படி நடத்தப்பட்ட மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்-சிரேஷ்ட சேவை மட்டம் | 98 | 200 மணித்தியாலங்கள் | 1,50,000.00 | அலுவலர்களின் தமிழ் மொழித் தேர்ச்சியை செம்மைப்படுத்துதல். |
| 17 | தொழில் சட்டம் மற்றும் தொழில் உறவுகளில் உயர் தேசிய சான்றிதழ்-தே.தொ.க.நி. | 05 | | 200,000.00 | ஒதுக்கப்பட்ட விடயங்களை அதிக பயனுறுதி யுடனும், சரியாகவும் கையாளுதல். |
| 18 | தனிப்பட்ட வாழ்க்கை முகாமைத்துவம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிதிட்டம் -இலங்கை ஆதார நிலையம் | 07 | 2021.03.31 | 26,600.00 | ஒதுக்கப்பட்ட விடயங்களை அதிக பயனுறுதி யுடனும், சரியாகவும் கையாளுதல். |
| 19 | அரச அலுவலர் களுக்காக நடத்தப்பட்ட உற்பத்தித்திறன் சான்றிதழ் கற்கை நெறி (இணையவழி) | 42 | 20 மணித்தியாலங்கள் | - | ஒதுக்கப்பட்ட விடயங்களை அதிக பயனுறுதி யுடனும், சரியாகவும் கையாளுதல். |
| 20 | தொழில் உறவுகள் மற்றும் மனிதவளங் களில் பட்டப் பிற்படிப்புப் பட்டம். | 01 | - | 100,000.00 | விடயப்பரப்பில் பரந்த அறிவினைப் பெறுவதன் மூலம் அதிக பயனுறுதியுடன் கடமைகளை ஆற்றுதல். தேவைப்பாடு சேவைப் பிரமாணக் குறிப்புகளின்படி நிறைவேற்றப் படவுள்ளது. |
| 21 | தகவல் முறைமை முகாமைத்துவத்தில் பட்டப் பிற்படிப்பு | 01 | - | 139,250.00 | மேலுள்ளவாறு. |
| 22 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார முகாமைத்துவத்தில் பட்டப் பிற்படிப்பு (மொறட்டுவ பல்கலைக்கழகம்) | 01 | - | 103,500.00 | மேலுள்ளவாறு. |
| 23 | சட்ட மாணி பட்டப் பிற்படிப்பு | 02 | - | 303,000.00 | மேலுள்ளவாறு. |
| 24 | சட்ட பட்டப்படிப்பு | 03 | - | 97,050.00 | மேலுள்ளவாறு. |
| 25 | சூழலியல் பட்டப் பிற்படிப்பு | 01 | - | 200,000.00 | மேலுள்ளவாறு. |
| 26 | பொது நிருவாகம் மற்றும் முகாமைத் துவத்தில் முதுமாணி- | 05 | - | 425,000.00 | மேலுள்ளவாறு. |
| 27 | முதுமாணிப் பட்டம் | 01 | - | 75,000.00 | மேலுள்ளவாறு. |

### 6.3.3 வெளிநாட்டு பயிற்சி கற்கைநெறிகளில் அலுவலர்கள் பங்குபற்றுதல்.

**அட்டவணை 6-4** வெளிநாட்டு பயிற்சி கற்கைநெறிகளில் அலுவலர்கள் பங்குபற்றுதல்

| | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்று விக்கப்பட்ட பதவி யினரின் எண்ணிக் கை | நிகழ்ச்சித் திட்டத்தின் காலப்பகுதி | பெறுபேறு / பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
|---|---|---|---|---|
| 1 | ஆசியாவிலும் பசுபிக்கிலும் மிகவும் மீள் தன்மையுள்ள பிரத்தியோகமான, நிலையான ஆடை மற்றும் புடைவைத் துறையினை முன்னெடுப்பதற்கு சர்வதேச தொழில் தாபன முத்தரப்புக் கூட்டம். | 02 | 2021.10.18/ 2021.10.20 | அதிக பயனுறுதியுடனும், சரியாகவும் கடமைகளை ஆற்றுதல் |
| 2 | "சீரிய வேலைக்கான சான்றின் அடிப்படையில் கொள்கை ஆக்கம்" பற்றிய இணையவழி தெற்காசிய பிராந்திய முத்தரப்புப் பயிற்சி கற்கைநெறி. | 02 | 2021.11.22/ 2021.11.26 | அதிக பயனுறுதியுடனும், சரியாகவும் கடமைகளை ஆற்றுதல் |
| 3 | ஆக்கத்திறனை செம்மைப்படுத்துவதற்கு அரச துறையில் தரவு ஆளுகை பற்றிய பல் நாட்டு அவதானிப்பு ஆய்வு செயற்பணி. | 01 | 2021.11.24/ 2021.11.25 | அதிக பயனுறுதியுடனும், சரியாகவும் கடமைகளை ஆற்றுதல் |
| 4 | APO அபிவிருத்தி -சான்றுப்படுத்-தப்பட்ட அரச துறை ஆக்கத்திறன் வல்லுநர்கள். | 01 | 2021.12.06/ 2021.12.10 | அதிக பயனுறுதியுடனும், சரியாகவும் கடமைகளை ஆற்றுதல் |
| 5 | (MLC, 2006), ஜெனிவா என்று திருத்தப் பட்ட கடல்சார் தொழில் சமவாயம்,2006 இன் விசேட முத்தரப்பு குழுவின் நான்காவது கூட்டம். | 02 | 2021.04.19/ 2021.04.23 | கடல்சார் தொழில் சமவாயம் (எம்.எல்.சீ 2006) தொடர்பான அறிக்கைகளை தயாரிக்கப்பது பற்றிய அறிவினைப் பெறுதல். சர்வதேச தொழிலுடன் தொடர்பு பட்டுள்ள கடல்சார் தொழில் மற்றும் தொற்றுநோய் மற்றும் கடல்சார் மீளாய்வு தொடர்பான அறிவினைப் பெறுதல். |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | இலங்கைக்கான “Belt and Road” சர்வதேச இயலுமை கூட்டுத்தாபனம் பற்றிய இருதரப்பு கருத்தரங்கு. | 05 | 2021.05.11/ 2021.05.31 | இலங்கைக்கு வரவுள்ள அனுகூலங்கள் பற்றிய புரிதலைப் பெறுகின்ற "Belt and Road" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சீனாவுக்கும் இலங்கைக்கு மிடையில் கூட்டுறவினை மேம்படுத்துதல் |
| 7 | “சர்வதேச தொழில் நியமங்களை அறிக்கையிடுவதில் சிறந்த செயல் முறைகள்” பற்றிய இணையவழிப் பயிற்சிக் கான புலமைப்பரிசில். | 01 | 2021.03.22/ 2021.05.14 | ஏற்று அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தொழில் தாபன சமவாயங்களுடன் தொடர்பு பட்டுள்ள வருடாந்த அறிக்கை யைத் தயாரிப்பது பற்றிய தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளுதல். |
| 8 | அனைவருக்கும் வாழ்நாள் கல்வி, திறன்கள் மற்றும் சீரிய வேலை என்ற விடயத்தில் கல்வித் துறையில் எதிர்கால வேலை பற்றிய தொழில் நுட்பம்சார் கூட்டம். | 01 | 2021.05.17/ 2021.05.21 | கல்வித் துறையில் வர்ந்து வருகின்ற போக்குகள் பற்றிய அறிவினைப் பெற்றுக் கொள்ளுதல். |
| 9 | புடைவை, ஆடை, தோல் மற்றும் பாதணி தொழிற் றுறையில் பாதுகாப்பான சுகாதாரமான செய்முறை கோவை பற்றி கலந்துரையாடுவதற்கும், பின்பற்று வதற்கும் நிபுணர்களைச் சந்தித்தல் - ஜெனிவா | 02 | 2021.10.04/ 2021.10.04 | புடைவை, ஆடை, தோல் மற்றும் பாதணி தொழில் துறையில் பாதுகாப்பான சுகாதாரமான செய்முறைகள் பற்றிய புரிந்துணர்வினைப் பெறுதல். |
| 10 | அபிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் தொழில் சேவை முறைமையை கட்டியெழுப்பு வதும் விருத்தி செய்வதும் பற்றிய கருத்தரங்கு - சீனா | 01 | 2021.11.09/ 2021.11.22 | தொழில் சேவை முறைமையை கட்டியெழுப்புவதும் விருத்தி செய்வதும் பற்றிய அறிவினைப் பெறுதல். |
| 11 | வழங்கல் சங்கிலிகளின் கீழ் நிலை அடுக்குகளில் முறைசாரா மற்றும் வீட்டை அடிப்படையாகக் கொண்ட வேலையாட்களுக்கான சம்பள எண்ணக்கரு மற்றும் சம்பளத்தை ஒழுங்குபடுத்தும் செயல்முறை பற்றிய இயலளவை வளர்க்கும் செயலமர்வு | 05 | 2021.10.11/ 2021.10.14 | வழங்கல் சங்கிலிகளின் கீழ் நிலை அடுக்குகளில் முறைசாரா மற்றும்வீட்டை அடிப் படையாகக்கொண்ட வேலையாட்களுக்கான சம்பள எண்ணக்கரு மற்றும் சம்பளத்தை ஒழுங்குபடுத்தும் செயல்முறை பற்றிய புரிந்துணர் வினைப்பெற்றுக் கொள்ளுதல். |
| 12 | ஜெனிவா கிராமிய பொருளாதாரத்தில் நீர் வாழ் உயிரின வளர்ப்பில் எதிர்கால வேலை மீதான தொழில்நுட்ப கூட்டம். | 02 | 2021.12.13/ 2021.12.17 | கிராமிய பொருளாதார விடயத்தில் நீரியல் உயிரின வளர்பில் எதிர்கால வேலை பற்றிய பரந்தவிலான புரிந்துணர்வு |



| | | | | |
|---|---|---|---|---|
| 13 | ‘Belt and Road’ நாடு களுக்கான கைத்தொழில் பூங்கா நிருமாணம் பற்றிய கருத்தரங்கு | 04 | 2021.10.28/ 2021.11.10 | தொழிற்றுறை பூங்கா நிருமாணம் பற்றிய அறிவினைப் பெறுதல். |
| 14 | “அதிகளவு வேலையுள்ள மீள்நிலை மற்றும் வேலைக்குரிய சிறந்த எதிர்காலமொன்றுக்கான தொழில்வாய்ப்புக் கொள்கை” என்பது பற்றிய சர்வதேச தொழில் தாபனத்தின் தொழில் வாய்ப்புக் கொள்கை ஆய்வு கருத்தரங்குக்கான அழைப்பு | 02 | 2021.11.15/ 2021.11.16 | தொழில்வாய்ப்புக் கொள்கை ஆய்வு மீதான அறிவைப் பெறுதல். |
| 15 | தென்னாபிரிக்கா வருடாந்த மாநாட்டில் இலங்கை முத்தரப்பு பங்குபற்றல் | 07 | 2021.12.07 | தென்னாபிரிக்க NEDLAC வருடாந்த மாநாட்டில் இலங்கை முத்தரப்பு பங்குபற்றல் |

### 6.3.4 அமைச்சினது செயலாற்றுகைக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பங்களிப்பு

அமைச்சின் அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினூடாக பல குறிக்கோள்களை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. இவற்றில், அலுவலர்களது இயலுமை விருத்தி மற்றும் மனிதவள அபிவிருத்தி ஆகியவை மிகவும் முக்கியம் வாய்ந்தவை. மட்டுப்படுத்தப்பட்ட நிதிகள் மற்றும் வளங்களின் பின்னடைவில் தொழில்சார் அபிவிருத்திக்காக புதிய ஊடகத்தை, தொழில்நுட்பத்தைப் பிரயோகிப்பதற்கு ஊக்குவித்து, இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அலுவலர்களின் தொழில்சார் ஆக்கத்திறனை அதிகரிப்பதற்கு உதவு கின்றன. அதேபோன்று, அலுவலர்களின் உளப்பாங்கினை விருத்தி செய்தல் மற்றும் அலுவலர் களது மொழித் தேர்ச்சியை அதிகரிப்பது பொது மக்களுடன் அவர்களது நெருக்கமான சேவையை நிச்சயப்படுத்துவதற்கு அவர்களுக்கு உதவும் என்பதுடன், நிறுவனங்களுக் கிடையிலான பயனுள்ள உறவுகள் போலியாக உருவாக்குவதற்கு காரணமாகின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் பொதுவான குறிக்கோள், முறையானதொரு ஆய்வினால் இனங்காணப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களை நோக்கி அவர்களை வழிநடத்தி அரச சேவையில் சிறந்த அனுபவம்வாய்ந்த, நிறைவான அலுவலர் குழாமொன்றினை உருவாக்குவதாகும்.

பின்வருகின்ற பிரதான பிரிவுகளின் கீழ் அலுவலர்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- அறிமுகப் பயிற்சி
- தலைமைத்துவம் மற்றும் மனப்பாங்கு விருத்தி பற்றிய பயிற்சி
- பயிற்சி தொடர்பான விடயம்

உரிய பிரிவுகளின் கீழ் அலுவலர்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சிகளின் விபரங்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக எதிர்பார்த்த வகையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்த முடியவில்லை.

# அத்தியாயம் ஏழு

## இணக்க அறிக்கை

**அட்டவணை 7-1** இணக்க அறிக்கை

| இல | பொருத்தப்பாடுடைய தேவைப்பாடு | இணக்க நிலை (இணங்கியது / இணங்க வில்லை) | இணங்கப் படாமைக்கான சிறிய விளக்கம் | எதிர் காலத்தில் இணங்கப் படாமையை தவிர்ப்பதற்காக முன்மொழியப்பட்ட திருத்த நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| **1** | **கீழ்வரும் நிதிக் கூற்றுக்கள்/கணக்குகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | வருடாந்த நிதிக் கூற்றுக்கள் | இணங்கியது | | |
| 1.2 | அரச ஊழியர்கள் கணக்குக்கு முற்பணம் | இணங்கியது | | |
| 1.3 | வர்த்தக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வர்த்தக முற்பணக் கணக்கு) | இணங்கவில்லை | | |
| 1.4 | களஞ்சிய முற்பண கணக்கு | இணங்கவில்லை | | |
| 1.5 | விசேட முற்பண கணக்குகள் | இணங்கவில்லை | | |
| 1.6 | ஏனையவை | | | |
| **2** | **புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பராமரித்தல் (FR445)** | | | |
| 2.1 | அரச நிருவாக சுற்றறிக்கை 267/2018 இன் பிரகாரம் அசையாச் சொத்துக்கள் பதிவேட்டை பராமரித்துடன் இற்றைப் படுத்தப்பட்டது. | இணங்கியது | | |
| 2.2 | தனிப்பட்ட வேதனாதிகள் பதிவேடு / தனிப்பட்ட வேதனாதிகள் அட்டைகள் பராமரிக்கப்பட்டதுடன் இற்றைப்படுத்தப் பட்டது. | இணங்கியது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேடு பராமரிக்கப்பட்டதுடன் இற்றைப்படுத் தப்பட்டது. | இணங்கியது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கை பதிவேடு பராமரிக்கப்பட்டதுடன் இற்றைப்படுத் தப்பட்டது. | இணங்கியது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு பொழிப்புக்களும் (CIHAS) தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் திறைசேரிக்கு சமர்ப்பிக் கப்பட்டது. | இணங்கியது | | |
| 2.6 | காசோலைகள் மற்றும் காசக் கட்டளைகளுக்கான பதிவேடு பராமரிக் கப்பட்டதுடன் இற்றைப்படுத்தப்பட்டது. | இணங்கியது | | |
| 2.7 | இருப்பு பதிவேடு பராமரிக்கப்பட்டதுடன் இற்றைப்படுத்தப்பட்டது. | இணங்கியது | | |
| 2.8 | இருப்பு சரக்கு பதிவேடு பராமரிக்கப் பட்டதுடன் இற்றைப்படுத்தப்பட்டது. | இணங்கியது | | |
| 2.9 | இழப்புகளுக்கான பதிவேடு பராமரிக்கப் பட்டதுடன் இற்றைப்படுத்தப்பட்டது | - | | |

| | | |
|---|---|---|
| 2.10 | பொறுப்பு பதிவேடு பராமரிக்கப்பட்டதுடன் இற்றைப்படுத்தப்பட்டது | இணங்கியது |
| 2.11 | காசோலை அடிக்கட்டைப் புத்தகங்களின் பதிவேடு (GA-N20) பராமரிக்கப்பட்டதுடன் இற்றைப்படுத்தப்பட்டது | இணங்கியது |
| **3** | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான செயற்பாட்டின் கையளிப்பு (FR 135)** | |
| 3.1 | நிதி அதிகாரம் நிறுவனத்தினுள் கையளிக்கப்பட்டுள்ளது | இணங்கியது |
| 3.2 | நிதி அதிகார கையளிப்பு நிறுவனத் தினுள் அறியச்செய்யப்பட்டது. | இணங்கியது |
| 3.3 | ஒவ்வொரு பரிவர்த்தனையும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உத்தியோகத் தரினூடாக செல்லும் வகையில் அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது. | இணங்கியது |
| 3.4 | அரச சம்பளப்பட்டியல் மென்பொருளினைப் பயன்படுத்துவதில் 2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காளர்களால் கட்டுப்பாடு கடைப்பிடிக்கப்படுகின்றது | இணங்கியது |
| **4** | **வருடாந்த திட்டங்களை தயாரித்தல்** | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. | இணங்கியது |
| 4.2 | வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டது. | இணங்கியது |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. | இணங்கியது |
| 4.4 | வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தேசிய அபிவிருத்தி வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணங்கியது |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் உரிய நேரத்தில் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. | இணங்கியது |
| **5** | **கணக்காய்வு வினாக்கள்** | |
| 5.1 | அனைத்து கணக்காய்வு வினாக்களும் குறிப்பிட்ட காலத்தினுள் கணக்காய்வாளர் அதிபதியினால் பதிலளிக்கப்பட்டது. | இணங்கியது |
| **6** | **அகக் கணக்காய்வு** | |
| 6.1 | 134(2) DMA/ 1-2019 நிதி ஒழுங்கு விதியின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் வகுக்கப்பட்டது. | இணங்கியது |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளும் ஒரு மாதத்தினுள் பதிலளிக்கப்பட்டது. | இணங்கியது |
| 6.3 | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) ஆம் உப பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணங்கியது |
| 6.4 | 134(3) நிதி ஒழுங்கு விதியின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வு அதிபதிக்கு சமர்ப்பிக்கப் பட்டது | இணங்கியது |
| **7** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | |
| 7.1 | DMA சுற்றறிக்கை 1-2019 இன் பிரகாரம் குறைந்தபட்சம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள் நடைபெற்றது. | இணங்கியது |
| **8** | **சொத்து முகாமைத்துவம்** | |
| 8.1 | 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்ற்றிக்கையின் 07 பந்தியின் பிரகாரம் சொத்து கொள்வனவு மற்றும் விற்பனை தொடர்பிலான தகவல்கள் கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணங்கியது |
| 8.2 | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை ஒருங்கிணைக்கவும் அமுல்படுத்தவும் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டதுடன் முன்மொழியப்பட்ட உத்தியோகத்தரின் விவரங்கள் மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 13 ஆம் பந்தியின் பிரகாரம் கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது | இணங்கியது |
| 8.3 | கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகளானது 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணங்கியது |
| 8.4 | கணக்கெடுப்பு மற்றும் ஏனைய தொடர்புடைய பரிந்துரைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மேலதிகம் மற்றும் பற்றாக்குறைக்கான நடவடிக்கைகள் சுற்றறிக்கையில் குறிப்பிட்ட காலப் பகுதியினுள் மேற்கொள்ளப்பட்டது. | இணங்கியது |
| 8.5 | நிஒ. 772 இன் பிரகாரம் பாவனைக்கு உகந்தற்ற பொருள்கள் அகற்றப்பட்டது | இணங்கியது |
| **9** | **வாகன முகாமைத்துவம்** | |

| | | | |
|---|---|---|---|
| 9.1 | நாளாந்த வாகன ஓட்ட அறிக்கை மற்றும் குழாம் வாகன மாதாந்த பொழிப்பு தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக் கப்பட்டது. | இணங்கியது | |
| 9.2 | பயன்பாடற்ற வாகனங்கள் பயன்பாடு நீக்கப்பட்டதன் 6 மாதங்களினுள் அகற்றப்பட்டது. | இணங்கியது | |
| 9.3 | வாகன ஏடுகள் பராமரிக்கப்பட்டு இற்றைப் படுத்தப்பட்டது. | இணங்கியது | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பில் நி.ஒ 103, 104, 109 மற்றும் 110 இற்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | இணங்கியது | |
| 9.5 | 2016.12.29 ஆம் திகதிய் 30/201 ஆம் அரச நிருவாக சுற்றிக்கையிலன் 3.1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வாகன எரிபொருள் பாவனை மீளப் பரீட்சிக்ப்பட்டது | இணங்கியது | |
| 9.6 | குத்தகை காலம் முடிவடைந்த பின்னர் குத்தகை வாகனங்களின் லொக் புத்தகத்தின் முழுமையான உரிமத்துவம் மாற்றப்பட்டது. | இணங்கியது | |
| **10** | **வங்கிக்க கணக்குகளின் முகாமைத்துவம்** | | |
| 10.1 | வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்ப்பட்டு, சான்றுபடுத்தப்பட்டு உரியநேரத்தில் கணக்காய்வுக்கு தயாராக்கப்பட்டது. | இணங்கியது | |
| 10.2 | மீளாய்வு ஆண்டு அல்லது முன்னைய ஆண்டுகளில் காணப்பட்ட செயலற்ற கணக்குகள் தீர்க்கப்பட்டன. | இணங்கியது | ஏற்புடையதன்று |
| 10.3 | வங்கி இணக்க கூற்றினூடாக வெளிப் படுத்தப்பட்டு சரிசெய்யப்படவேண்டிய மிகுதிகள் ஒரு மாதத்தினுள் தீர்க்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | இணங்கியது | |
| **11** | **ஏற்பாடுகளின் பயன்பாடு** | | |
| 11.1 | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் அதன் வரம்புகள் மீறாது செலவளிக்கப்ட்டது. | இணங்கியது | |
| 11.2 | நி.ஒ. 94(1) இன் பிரகாரம் பொறுப்புக்கள் ஏற்பாடுகளை விஞ்ஞாது காணப்பட்டது. | இணங்கியது | |
| **12** | **ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் அதன் வரம்புகள் மீறாது செலவளிக்கப்ட்டது.** | | |
| 12.1 | நி.ஒ. 94(1) இன் பிரகாரம் பொறுப்புக்கள் ஏற்பாடுகளை விஞ்ஞாது காணப்பட்டது. | இணங்கியது | |
| 12.2 | அரச உத்தியோகத்தர்கள் கணக்குக்கு முற்பணம் | இணங்கியது | |
| 12.3 | வரம்புகள் இணங்கப்பட்டது | இணங்கியது | |



| | | | |
|---|---|---|---|
| **13** | **பொது வைப்பு கணக்கு** | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புகள் தொடர்பில் நி.ஒ. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது | இணங்கியது | |
| 13.2 | பொது வைப்புகளுக்கு கட்டுப்பாட்டு பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்க்பட்டது. | இணங்கியது | |
| **14** | **கட்டுநிதி கணக்கு** | | |
| 14.1 | வருட முடிவில் காசுப் புத்தகத்தின் மீதி TOD இற்கு அனுப்பப்பட்டது | இணங்கியது | |
| 14.2 | நி.ஒ. 371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட எழுந்தவாரியான கட்டுநிதி பணி முடிவடைந்த பின்னர் ஒரு மாதத்தினுள் தீர்க்கப்பட்டது | இணங்கியது | |
| 14.3 | நி.ஒ. 371 இன் பிரகாரம் வரையறையை விஞ்சாதற்கு அனுமதிக்கப்பட்ட உப எழுந்தவாறான கட்டுநிதி வழங்கப்பட்டது | இணங்கியது | |
| 14.4 | கட்டுநிதி கணக்கின் மீதி மாதந்தம் திறைசேரி புத்தகத்துடன் சரிபார்க்கப்பட்டது. | இணங்கியது | |
| **15** | **வருமானக் கணக்கு** | | |
| 15.1 | ஒழுங்குவிதிகள் பிரகாரம் இறைவரி மீளளிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன | இணங்கியது | |
| 15.2 | வருமான சேகரிப்பானது வைப்புக் கணக்கில் வரவு வைக்காது நேரடியாக வருமான கணக்கில் வரவு வைக்கப்பட்டது. | இணங்கியது | |
| 15.3 | நி.ஒ 176 இன் பிரகாரம் வருமானத்தின் மீதி திரட்டுக்கள் கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. | இணங்கியது | |
| **16** | **மனிதவள முகாமைத்துவம்** | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் இடையே ஆளணியினருக்கு கொடுப்பனவுகள் செய்யப்பட்டன. | இணங்கியது | |
| 16.2 | அனைத்து ஆளணி அங்கத்தவர்களுக்கும் எழுத்து மூலம் கடமை நிரல் வழங்கப்பட்டது | இணங்கியது | |
| 16.3 | 2017.09.20 ஆம் திகதிய 04/2017 ஆம் சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அறிக்கைகளும் ஆளுனு இற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணங்கியது | |
| **17** | **பொது மக்களுக்கு தகவல் ஏற்பாடு** | | |
| 17.1 | தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக் கப்பட்டு தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக தகவல் பதிவேடு பராமரிக்கப்படுவதுடன் இற்றைப் படுத்தப்படுகின்றது | இணங்கியது | |

| | | | |
|---|---|---|---|
| 17.2 | நிறுவனத்தின் தகவல்கள் பொது மக்களுக்கு வலைத் தளத்தினூடாக அல்லது வேறு ஏதேனும் முறையில் வழங்கப்படுவதுடன் அரச அதிகாரிக் கெதிரான பாராட்டு / குற்றச்சாட்டினை இந்த வலையத் தளத்தினூடாக அல்லதுவேறு ஏதேனும் முறையில் வழங்க வசதி செய்யப்பட்டுள்ளது. | இணங்கியது | |
| 17.3 | டத்தின் 08 மற்றும் 10 ஆம் பிரிவுகளின் பிரகாரம் வருடத்திற்கு இருமுறையான அறிக்கை மற்றும் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. | இணங்கியது | |
| **18** | **பிரசைகள் சாசனத்தை நடைமுறைப் படுத்துதல்** | | |
| 18.1 | பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 05/2008 மற்றும் 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனமானது பிரசைகள் சாசனமொன்றை / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தினை உருவாக்கி நடைமுறைப்படுத்தியது. | இணங்கியது | |
| 18.2 | சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் பிரசைகள் சாசனமொன்றை / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தினை உருவாக்கவதையும் நடைமுறைப்படுத்து வதையும் கண்காணிக்கவும் மதிப்பிடவும் நிறுவனத்தால் முறைமையொன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. | இணங்கியது | |
| **19** | **மனிதவள திட்டத்தை தயாரித்தல்** | | |
| 19.1 | 2018.01.24 ஆம் இலக்க 02/2018 திகதி யிடப்பட்ட பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ இணைப்பு 2 இன் வடிவமைப்பின் பிரகாரம் மனிதவள திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது | இணங்கியது | |
| 19.2 | மேற்கூறப்பட்ட மனிதவள திட்டத்தில் ஆளனியினரின் ஒவ்வொரு அங்கத்த வருக்கும் ஒவ்வொரு வருடமும் 12 மணித்தியாலத்திற்கு குறையாத குறைந்த பட்ச பயிற்சிக்கான சந்தர்ப்பம் வழங்கப் பட்டுள்ளது. | இணங்கியது | |
| 19.3 | மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 1 இன் வடிவமைப்பின் அடிப்படையில் மொத்த ஆளனியினருக்குமான வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் கையொப்ப மிடப்பட்டன. | இணங்கவில்லை | முழுப் பதவியினருக்கும் வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை களை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 19.4 | மேற் கூறப்பட்ட சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்தியின் பிரகாரம் மனித வள மேம்பாட்டு திட்டத்தை தயாரிப்பதற்கு, திறன் கட்டி யெழுப்பும் நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்குபடுத்தல் மற்றும் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துதல் என்பவற்றுக்கு சிரேஷ்ட அலுவலகர் ஒருவர் நியமிக்கப்பட்டதுடன், பொறுப்புக்களும் வழங்கப்பட்டன. | இணங்கியது | |
| **20** | **கணக்காய்வு பந்திகளுக்கான பதில்கள்** | | |
| 20.1 | கடந்த ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் அதிபதியினால் வழங்கப்பட்ட கணக்காய்வு பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் திருத்தப்பட்டுள்ளன. | இணங்கியது | |